IDI

இடி

இடி

விலை ரூ. 18/=

# தமிழ்கேசரி

வாரப் பத்திரிகை

தமிழ் பேசும் சமுகத்தின் தன்மான முழக்கம்!

இடி - 02 ஏப்ரல் 06 - 12, 2003 முழக்கம் - 91

## ஆனந்தசங்கரியின் கருத்துக்கள்

## ஆதங்கமா...? ஆவேசமா...?




அதிரடி - அசத்தல் - ஆச்சரியம்

## புரட்டாதி சனிக்கிழமையும் விரதமும் ௐ

ஸ்ரீ மந் நாராயணனுக்கு புரட்டாதி மாதம் வரும் சனிக்கிழமை மிக்க உகந்த் நாளாகும். புரட்டாதி மாதம் வரும் எல்லாச் சனிக்கிழமைகளும் ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுக்கு மாவிளக்கு ஏற்றி வழிபாடு செய்வர்.

திருப்பதி பெருமானை புரட்டாதி சனிக்கிழமை தரிசித்து வழிபாடு செய்வது பெரும்பேறு என் கூறப்படுகிறது. இந்நாட்களில் நியம முறைப்படி விரதமிருப்பவர்களுக்கு பகவானின் அருள் கிடைக்குமென்று ஆன்மீக அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஈஸ்வர பட்டம் பெற்ற சனிக்கிரக வழிபாடும் இவ்விரத காலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. எள்ளெண்ணெய்யால் எள் எரித்தல், கறுப்புவஸ்த்திரம் சாத்துதல், கருங்குவளை மலர் கொண்டு அர்ச்சித்தல் ஆகியவையும் சனீஸ்வரனுக்கு பிரியமானவைகள்.

*சிவஸ்ரீ அ. அரசரெத்தினம், சேனையூர் - 06.*

## வட்டி ☪

அல்லாஹ் வணிகத்தை ஆகுமானதாக்கி வைத்து வட்டியை தடுத்து (ஹரமாக்கி) விட்டான். ஆதலால் இறைவனிடமிருந்து வந்த (இந்த) எச்சரிக்கைப்படி (அதை விட்டு முழுமையாக) விலகிக் கொண்டால் (அதற்கு) முன்பு (அவன் வட்டியாக வாங்கிச்) சென்றது அவனுக்குரியதே (இதற்கு முன்பு வட்டி வாங்கிய) அவனுடைய விடயம் அல்லாஹ்விடத்தில் இருக்கின்றது. (அல்லாஹ்வின் எச்சரிக்கை வந்த பின் வட்டி வாங்குவதை விட்டு விட்டால் அல்லாஹ் அவனை மன்னித்தும் விடலாம்) தவிர (இந்த எச்சரிக்கை கிடைத்த) பின்னரும் எவரேனும் வட்டி வாங்க முற்பட்டால், அவர்கள் நரக வாசிகளே! அதில் அவர்கள் என்றென்றும் தங்கி விடுவார்கள்! அல்குர்ஆன் : 2:275

*எம்.எச்.சிராஜ்அஹமட், ஒலுவில் 07.*

## விடுதலையோடு ஜீவிக்க ✝

இரட்சிப்பானது, பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலையையும் சுயாதீனத்தையும் கொண்டு வருகிறது. நரகத்திலிருந்து வரும் பிசாசின் ஆவிகள் மனித பெலவீனங்களைப் பயன்படுத்தி ஒரு மனிதனின் வாழ்க்கையைத் தங்கள் வசப்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றன. இதைக் கட்டாயமான நடத்தை அதாவது சுபாவம் என்று அழைக்கின்றோம். இதை வேறு வகையில் சொன்னால் தங்களால் செய்யாமல் இருக்க முடியவில்லை. என்று ஜனங்கள் சொல்லும் பழக்கங்கள் எனச் சொல்லலாம். அவர்கள் கட்டுப்பாட்டை இழந்துவிட்டார்கள். இயேசுவின் இரத்தத்தினாலும் அவர் சிலுவையில் செய்து முடித்த கிரியையினாலும் உங்கள் வாழ்க்கையில் இருக்கும் இதுபோன்ற எந்தவொரு பழக்க வழக்கத்திலிருந்தும் விடுதலையைப் பெற்றுக் கொள்ளலாம். பொல்லாங்கானதும் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமானதுமான எதையும் இயேசுவின் நாமத்தில் விட்டுவிடுங்கள். தேவன் உங்களை விடுதலையாக்குவான்.

*ஆர்.பரலேந்திரன், கந்தப்பளை.*

இடி தமிழ்கேசரி

Millennium Advertising & Printers (PVT) Ltd.,
No: 3A, Dharmaraja Mawatha, Colombo -03.
Telefax - 074 -721312, E-mail : map@wow.lk

கதைகளில் இடம்பெறும் சம்பவங்கள், கதாபாத்திரங்கள் கதாசிரியர்களின் கற்பனையே. கட்டுரைகள் அவற்றை எழுதியோரின் கருத்துக்களேயன்றி, அக்கருத்துக்களோடு “இடி- தமிழ்கேசரி”க்கு உடன்பாடு உண்டு அல்லது இல்லை என்று கருதக்கூடாது.

## நெறிகெட்ட யுத்தம்

வாசக நெஞ்சங்களுக்கு,
வசந்த வணக்கங்கள்!

ஏகாதிபத்திய அமெரிக்கா தன் கொடூரப் பற்களுடன் ஈராக்கின் இறைமையையும் கௌரவத்தையும் கடித்துக் குதறிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில்-

உலகத்தின் 90 வீதத்திற்கு மேற்பட்ட மக்களும், அமெரிக்காவின் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்ட மக்களும் இந்தப் போரை அவசியமற்றதென உரத்துக் குரல் கொடுத்தும் கூட, அதற்குச் செவி சாய்க்காது தன் இரும்புக் கரங்களுடன் ஈராக்கின் கழுத்தை அமெரிக்கா நெறித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்-

அப்பாவிகளான ஈராக் ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் இரத்த குளத்தில் மிதக்கத் தொடங்கியிருக்கும் இந்த நேரத்தில்-

எண்ணெய் வயல்கள் உட்பட கோடிக்கணக்கான பெறுமதியுடைய ஈராக்கிய சொத்துக்கள் அமெரிக்கக் கூட்டுப்படைகளினால் சூறையாடப்பட்டும் தீக்கிரையாக்கப்பட்டும் வருகின்ற இந்த நேரத்தில்-

தன் ஏகேசிச்சாதிகாரத்தை நிலைநாட்டும் வெறியுடன் அமெரிக்கா களம் புகுந்து ஈராக் நகரங்களை நரகங்களாக்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்-

ஈராக்கிலிருந்து அச்சத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் அங்குமிங்கும் இடம் பெயர்ந்து அல்லற்படுகின்ற இந்த நேரத்தில்-

தன் கையாலாகாத் தனத்தை எண்ணி ஐ. நாடுகள் சபை கையைப் பிசைந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில்-

நமது நாட்டின் ஆளும் கட்சி அமெரிக்காவுக்கு தொடர்ந்தும் ‘ஜால்ரா’ அடித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில்-

ஜே.வி.பி.யும் பொ.ஐ.முன்னணியும் ஒப்புக்குச் சப்பாணி என்பது போல் கண்டனக் கூட்டங்களை நடத்துகின்ற இந்த நேரத்தில்-

‘நாங்களும் இருக்கிறோம்’ என்பதைக் காட்டுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் பெயருக்கு ஆர்ப்பாட்டம் நடத்தி அறிக்கைகள் விடுகின்ற இந்த நேரத்தில்-

இலங்கை முஸ்லிம்களின் வாக்குகளிலேயே குறியாக இருக்கும் சில அரசியல்வாதிகளும் உதட்டளவில் அமெரிக்காவின் கொடூரத்தைக் கண்டிக்கும் இந்த நேரத்தில்-

மதப்பற்று மிக்க இலங்கை முஸ்லிம்களோடு, மனிதாபிமானம் கொண்ட ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களும் ஈராக் மீது வீண் போர் தொடுத்திருக்கும் அமெரிக்காவின் முயற்சி தோற்றுப் போக வேண்டுமென்று மனதாரப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறாகள்.

இந்தப் பிரார்த்தனைகளின் பலனாக-

மணற்புயலென்றும், மாபெரும் சூறாவளியென்றும் இயற்கை சினந்து, சீறும். அந்த சீற்றத்தில் அமெரிக்கப் படைகள் புறமுதுகு காட்டி, வந்த வழி பார்த்து ஓடும். வானிலை சடுதியில் மாறும். அந்த மாற்றத்தில் அமெரிக்கக் கூட்டுப்படைகளின் போர் விமானங்கள் வெடித்துச் சிதறி மண்ணில் விழும். கவச வாகனங்கள்காணாமற் போகும்.

ஆம்; நல்லோர் பிரார்த்தனைகளினால் நடக்கப் போகும் ‘அற்புதங்களு’க்காகக் காத்திருப்போம்!

-பிரதம ஆசிரியர்-

## சுதந்திரப்போரின் கூரப்புலிகள் (07)

அந்த வீராங்கனையின் பிறந்த இடமோ, திகதியோ தெரியவில்லை. எனினும் அவள் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவள் என்பது மட்டும் ஊர்ஜிதம்.

அவளுக்குள் ஒரு கனவு இருந்தது. நீண்ட, நெடுநாள் கனவு அது. நினைத்து நினைத்து இரைமீட்டிக் கொண்டேயிருந்த அந்த இலட்சியக் கனவு நிச்சயம் நனவாகுமென்று அவளுக்குத் தெரியும்.

ஓ... அதற்கான நேரம் நெருங்கிவிட்டது!

அவளின் கனவு-இலட்சி யம்-குறிக்கோள் எல்லாம் நிறைவேறப் போகிறது!

அதற்கு முன்-

தன்னை ஈன்றெடுத்த தாயை, இனிதாய் மலர்ந்த உறவுகளை, இறுதியாக ஒரு தரம் தரிசித்துவிட்டு வர எண்ணினாள். வீடு போனாள்.

“அடிக்கடி வீட்டை வந்திட்டுப் போ மோனை!”

பாசத்தாய் பரிவுடன் கூறுகிறாள்.

“கிட்டடியிலே வந்திடுவன், அம்மா!”

அவள் எந்த அர்த்தத்தில் சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொள்ளாத தாய், அவளைக் கட்டியணைத்து, உச்சி மோர்ந்து, முத்தமழை பொழிந்து கண்ணீரால் நனைகிறாள்.

அந்த வீர மகள்- கவிதா என்ற சொந்தப் பெயர் கொண்ட -

கடற் கரும்புலி மேஜர் சந்தனா!

மெலிந்த தோற்றம், சாந்தமான முகத்தில் எப்போதும் தவழும் புன்னகை. தீர்க்கமான விழிகள், சுதந்திரத்திற்காகத் துடிக்கும் இதயம்!

இவையனைத்தும் சேர்ந்தவர்தான் மேஜர் சந்தனா!

மகளிர் படையணியிலிருந்து தலைவரின் அனுமதியுடன் 1995ம் ஆண்டு கடற் புலிகளின் அணியுடன் இணைந்து கொண்ட சந்தனாவுக்கு கரும்புலியாகி விட வேண்டுமென்கிற வேட்கை இருந்தது. எனவே, கரும்புலி அணிகளுக்கான விஷேட பயிற்சிகளை முடித்துக் கொண்டு, எதிரியின் இலக்குகளைத் தேடத் தொடங்கினாள்.

வெடி மருந்துகள் நிரம்பிய படகுடன் கடற்புலி மேஜர் சந்தனா கடலில் இறங்கும் ஒவ்வொரு தடவையும் எதிரிகள் அதிர்ஷ்டவசமாகத் தப்பித்துக் கொண்டிருந்தனர்.

மேஜர் சந்தனா கூட அடிக்கடி கூறுவாள்.

“என்ர படகு கடலுக்க நிக்கு தெண்டு நேவிக்காரனுக்குத் தெரியும் போல. அதனால்தான் தூரத்தால போறான்!”

என்ன நெஞ்சுரம்! தன் கடைசி வேளையிற் கூட எப்படிப்பட்ட குறும்புத்தனம்!!

26.06.2000.!

அதுதான் மேஜர் சந்தனாவின் இறுதிநாள்...

யாழ். குடா படைகளுக்கான ஆயுதங்களையும், வெடிபொருட்களையும், உணவுப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறை

### “கிட்டடியில் வந்திடுவன், அம்மா!”

நோக்கி வந்து கொண்டிருந்தது “உகண” கப்பல். கடற்புலிகளின் சண்டைப் படகுகளும், கரும்புலி படகுகளும் கடலில் களமிறங்கின. கடற்படையின் இரண்டு பீரங்கிப் படகுகள் மற்றும் ஆறு டோராப்படகுகள் சகிதம் பெருத்த பாதுகாப்புடன் வந்து கொண்டிருந்தது உகண கப்பல்.

பருத்தித்துறை துறைமுகத்திற்கு 55 கடல் மைல் தொலைவில் அந்தக் கப்பல் கடற்புலிகளால் வழிமறிக்கப்படுகிறது. தொடர்ந்து பயங்கர யுத்தம் மூழ்கிறது. அந்தச்சமரின் நடுவே, மிக இலாவகமாகக் கடற் கரும்புலிகளின் வெடி மருந்து நிரப்பிய படகுகள் உள்நுழைந்து, உகண கப்பலுடன் மோதுகின்றன. “படீர்... த்டீர் த்டும்!” என்ற பேரோசையுடன் உகண கப்பல் வெடித்துச் சிதறித் தீப்பற்றிக் கடலில் மூழ்குகிறது. 10 கடற்படையினர் பலியாகிப் போகிறார்கள்.

இந்த வரலாற்றுக்குத் தலையாய காரணியாக விளங்கிய மேஜர் சந்தனாவுடன், கடற்புலிகள் லெப். கேணல் ஞானேந்திரன், மேஜர் சூரன், மேஜர் நல்லப்பன், கப்டன் இளமதி, கப்டன் பாமினி ஆகிய ஐந்து காவிய நாயகர்களும் கடலோடு சங்கமமாகி விட்டனர்!

மேஜர் சந்தனா தன் இனிய சுபாவத்தாலும், நகைச்சுவைப் பேச்சுக்களினாலும் அனைவரையும் கவர்ந்திருந்தாள். தன்னுடைய கடைசிக் கணங்கள் வரை அதே சிரிப்புடனும், கலகலப்புடனுமேயே இருந்தாள்.

அதோ...

இறுதித் தாக்குதலுக்குப் புறப்பட்டு விட்டாள் மேஜர் சந்தனா.

தன் காலணியைக் கழற்றி சக போராளியிடம் கொடுத்து விட்டு, “நான் திரும்பி வரமாட்டேன். இதை நீ வெச்சிரு.” என்று கூறிய மறுநிமிடம் சொன்னாள். “தற்செயலாய்த் திரும்பி வந்தால் குறை நினைக்காமல் காலணி யைத் திருப்பித் தந்திட



கடற் கரும்புலி மேஜர் சந்தனா

ஆதாரம் : எரிமலை


# சீரழியும் சிறார்கள்! காப்பாற்ற யாருளர்...?



கடந்த ஓராண்டு தாசப்தகால யுத்தம் எத்தனையோ மனித உயிர்களையும், கோடிக்கணக்கான சொத்துக்களையும் தின்று ஏப்பம் விட்டுள்ளது. தாய் அல்லது தந்தையை சில குடும்பங்களில் இருவரையும் சேர்த்தே இழந்து விட்டு அனாதைகள் என்ற பட்டத்துடன் நிர்க்கதிக்குள்ளான குழந்தைகளை யார் கவனிப்பது என்ற கேள்விக்கான விடை தெரியவில்லை.

யுத்தத்தின் பாதிப்புக்களால் வடக்கு கிழக்கில் மட்டும் 90,000 சிறுவர்கள் நேரடியாக பாதிப்புக்குள்ளாகி அவதிப்படுவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அதே போன்று 3,80,000 சிறுவர்கள் உள்ளூரில் இடம் பெயர்ந்துள்ளதாகவும் 2,50000 சிறுவர், சிறுமியர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இவற்றில் யுத்தத்தினால் தாய், தந்தையை இழந்து நிர்க்கதிக்குள்ளான சிறுவர்களின் நிலை என்ன? அவர்களது அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படுகிறதா? என்று பார்த்தால் இல்லை என்றே கூற வேண்டும். அம்மா, அப்பா உள்ள குடும்பங்களிலேயே பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்பது கேள்விக்குறியாக உள்ள போது, தாயை, தந்தையை இழந்து, இரத்த உறவுகளை இழந்து தனிமரமாக உள்ள பிள்ளைகளின் இன்றைய நிலை எத்துணை கொடூரமானது என்



பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அநாதைச் சிறுவர்கள் பலரும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்கப்படுகிறார்கள். 50-60 வயதைக் கடந்த தந்தை, பாட்டனுக்கு ஒப்பானவர்களே இவ்வாறான வெட்கக்கேடான செயல்களை சிறுவர்கள் மீது திணிக்கிறார்கள். ஆனால், சிறுவர்கள், சிறுமியர்களோ தம்மீது மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் வன்முறைகளை, அநீதிகளை வெளியில் சொல்ல முடியாதவர்களாய் வாழ வேண்டிய நிலைக்குக்கு உள்ளாகியுள்ளனர். இதற்கு பயம், உணவு, உறையுள் போன்ற சிறுவர்களின் அக, புற தேவைகள் காரணமாகின்றன.

பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களுக்காக பொலிஸ் முறைப்பாடுகள் செய்யப்பட்டாலும் கூட, அநீதியை இழைத்தவனுக்கு தண்டனை வழ

க.ஜெகதீஸ்வரன்
மட்டு.மாவட்ட
நிருபர்.

ங்கும் செயற்பாடுகளை "மூடி மறைக்கும்" நிகழ்வுகளே சமூகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது.

பல சிறுவர்கள் கவனிப்பாரற்றவர்களாக தெருக்களிலும், பஸ் தரிப்பு நிலையங்களிலும் ஒரு வேளைச் சோற்றுக்காக ஜீவ மரணப் போராட்டத்தையே நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். அகரம் எழுத வேண்டிய பிஞ்சுக் கைகள் பிச்சைப் பாத்திரங்களுடன் வீடுகளிலும், வீதிகளிலும் அலைந்து திரிவதை யார், யாரிடம் சொல்வது? சொல்லித்தான் என்ன செய்வது? எமது பாரம்பரிய பிரதேசங்களிலே ஏராளமான சிறுவர்கள் ஒருவேளை உணவுக்காக படும் துன்பங்களை நம்மில் பலர் அவ்வளவு இலகுவாகப் புரிந்து கொள்வதாயில்லை.

எனவே 'இடி - தமிழ்கேசரி' சார்பாக நேரடியாக அவ்வாறான சிறுவர்களை அணுகி அவர்களது பிரச்சினைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள எண்ணினோம்.

**நா**ம் சந்தித்த அனேகமானவர்கள் மட்டக்களப்பு மாநகரத்திலுள்ள கடைகளில் சிப்பந்திகளாகவும், வீட்டு வேலைகள். செய்பவர்களாகவும், பஸ் தரிப்பு நிலையங்களில் பிச்சையெடுத்து ஜீவனம் நடாத்துபவர்களாகவும் இன்னும் சிலர் மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் கச்சான், கடலை, டொபி... போன்ற சிற்றுண்டிகளை விற்று அந்த வருவாயில் குடும்பத்தைக் கொண்டு நடத்தும் வீட்டின் தலைவர்களாகவும் இருந்து வருவதை அவதானிக்க முடிந்தது.

எம்முடன் உரையாடிய பலர் பெயரையும், வேலை செய்யும் இடங்களையும் வெளிப்படுத்த வேண்டாம் எனக் கேட்டதற்கிணங்க சில விடயங்கள் குறிப்பிடப்படவில்லை.

"யுத்தத்தால் அம்மாவும், அப்பாவும் செத்துப் போனதால் குடும்பப் பொறுப்பை சுமந்தேன்."

**ம**ட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைகுள் உள்ள கடையொன்றில் சிப்பந்தியாகப் பணிபுரியும் 9 வயதுச் சிறுவனை சந்தித்த போது அவனுடைய தாய், தந்தை இருவரையும் கடந்தகால யுத்தம் காவு கொண்டு விட்டதாகவும், அதனால் குடும்பச் சுமையை விரும்பியோ, விரும்பாமலோ சுமக்க வேண்டிய நிர்ப்பந்த த்தினால் தான் கடையில் சேர்ந்ததாகவும் தனக்கு கீழுள்ள தங்கையை தானே கவனித்து வருவதாகவும் மிடுக்குடனும், நம்பிக்கையுடனும் சொல்லிய அவன் தான் வேலை செய்யும் கடையில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டதை ஒப்புக் கொள்கிறான். ஆனால் வெளியே சொல்லப் பயப்படுகிறான்.

"எனக்குத் தான் படிக்க வசதியில்லை. என் தங்கைகளையாவது படிக்க வைப்பேன்."

**எ**தேச்சையாக தெரிந்தவர் ஒருவரின் வீட்டிற்குச் சென்ற போது வேலைக்காரப் பெண்ணொருத்தியைக் கண்டு அவரின் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள, மெதுவாகப் பேச்சுக் கொடுத்தோம். அழுக்கு ஆடையுடன் காணப்பட்ட அந்தச் சிறுமியைப் பார்த்த போதே குறித்த வீட்டில் அந்தச் சிறுமி எப்படி நடத்தப்படுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டோம். வயது 12. (பெயரைச் சொல்ல மறுத்தாள்) அப்பா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதனால் ஒரு வேளைச் சோற்றுக்கே கஷ்டப்பட வேண்டிய நிலையில். பாடசாலைக்குச் செல்ல வேண்டும். படிக்க வேண்டும் என்ற ஆசைகளையெல்லாம் ஒதுக்கி விட்டுத்தான் வேலைக்கு வந்ததாகச் சொல்லும் அச்சிறுமி அதனால் தனது தங்கைமாரை ஓரளவு படிக்க வைக்க முடிகிறது என்றாள் பெருமையுடன்!

"நானே என் குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறேன்" என்கிறான் கடலை விற்கும் ஜெயபிரசாந்தன்.

**ஒ**ரு ஞாயிறு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் உற்சாகமுடன் கடலை, கச்சான்... போன்ற தின்பண்டங்களை விற்பனை செய்யும் இளம் சிறுவர், சிறுமியர்களைச்



சந்தித்து உரையாடினோம். கடலை விற்றுக் கொண்டிருந்த அவனிடம் பெயர் என்ன என்று கேட்க நாகேஸ்வரன் ஜெயப்பிரசாந்தன் (வயது 14), சொந்த இடம் கல்லடி என்றான். நாம் கேட்காமலேயே தெளிவாக பிசிறு இல்லாமல் கதைத்த விதம் அவனது ஆற்றலையும், அறிவையும் புடம் போட்டுக் காட்டியது.

1989ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கடல் நீச்சல் போட்டியில் சுழியில் அகப்பட்டு தனது அப்பா இறந்து விட்டதாகக் கூறினான். பின்னர் விரும்பியோ, விரும்பாமலோ இந்த இளம் பிஞ்சின் தலைமீது குடும்பச் சுமை ஏற்றப்படுகிறது. அவன் கடந்த 5 வருடங்களாக இவ்வாறு கடற்கரையில் தின்பண்டங்களை விற்று வாழ்க்கையை ஓட்டி வருதாகக் கூடையைத் தூக்கிக் காட்டுகிறான். தனது அம்மாவையும், 2 அக்காவையும் கொண்ட அந்தக் குடும்பத்தைத் தானே நடாத்தி வருவதாகவும் கடலை, கச்சான்... போன்ற தின்பண்டத் தயாரிப்பில் தாய் உதவுவதாகவும் குறிப்பிட்டான். ஒரு சில நாட்களைத் தவிர்த்து ஏனைய நாட்களில் 150/=ற்கு மேல் தன்னால் உழைக்க முடியும் என்று கூறும் அவன் தனக்குப் பாடசாலை செல்ல வேண்டும், படிக்க வேண்டும் என்ற எண்ணமும், விருப்பமும் இருந்தாலும் சூழல் அதற்கு ஒத்து வரவில்லை என்கிறான்.

**அ**டுத்து இரத்தின ராஜா சிந்துஜா (வயது 11)வைச் சந்தித்தோம். கல்லடியைச் சேர்ந்தவள். தனக்குப் புத்தி பிடிபடும் முன்னரே தந்தை இறந்து விட்டாராம். சிந்துஜா தற்போது வேறு ஒருவரின் வீட்டிலேயே வசித்து வருகிறாளாம். இவள் 6ம் ஆண்டில் படித்துக் கொண்டே மாலை நேரங்களிலும் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிலும் இவ்வாறான விற்பனையில் ஈடுபடுவதாகவும் கூறுகிறாள்.

**ம**ணிவண்ணன் நிதாகரன் (9) சின்னஞ் சிறுவன். அப்பாவுக்கு தொழில் இல்லாத காரணத்தினால் தானே இத்தொழிலில் இறங்கியதாகத் துடுக்குடன் சொல்கிறான் அவன்.

இவ்வாறு ஏராளமான சிறுவர்களை காண முடிந்தது. பாவம் அவர்கள். யாரில் குறை சொல்ல? தெரியவில்லை. தற்காலத்தில் கட்டாயக் கல்வி வலியுறுத்தப்படுகின்ற போதிலும் பல சிறார்கள் பாடசாலையின் படிக்கட்டுக்களைக் கூட காணாதவர்களாக இருப்பது கவலைக்குரியது. மேலே உள்ள ஒரு சிலரின் உணர்வுகளே அவை. இன்னும் எத்தனை... எத்தனையோ?




மனித உரிமைகள், சிறுவர் உரிமைகளைக் காக்கிறோம் என மார்தட்டுபவர்களே, இது உங்களின் கண்களில் படவில்லையா?

சிறுவர்களின் உரிமைகளை, நலன்களை பேணுவதாகக் கூறிக் கொண்டு தங்களது நலனில் மட்டும் அக்கறை கொண்டிருக்கும் பலரை அவர்களது செயற்பாடுகளிலிருந்தே அறியலாம். தங்களது அமைப்புக் கொடிகளுடன் நகர்ப்புறங்களிலே மட்டும் ஓடித்திரிந்து (எதைத் தான் வெட்டிக் கிழிக்கிறார்களோ) ஏ.சி.வாகனங்கள், ஏ.சி.மாடிவீடுகள் கடற்கரைப் பாட்டிகள், வெளிநாட்டு மது வகைகள் போன்றவற்றுக்கெல்லாம் பணத்தைச் செலவழிப்பதில் உள்ள அக்கறை சிறுவர் நலன்களிலும வேண்டுமல்லவா?



# பாலாவின் கருத்துக்கு பதில் சொல்லும் முஸ்லிம் எம்பீக்கள்



**தத்துவாசிரியரும் புலிகளின் ஆலோசகருமாகிய அன்ரன் பாலசிங்கம் அவர்கள், பேச்சு வார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பங்கு பற்றுவதாக இருந்தால் அது பற்றி முதலில் தங்களிடம்தான் அனுமதி பெறவேண்டும் என்று கூறியிருந்தமை பற்றி, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்று சில முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் 'இடி' கேட்டபோது கிடைத்தவற்றை இங்கே தந்துள்ளோம்.**



**விடுதலைப் புலிகளின் தீர்மானம் என்பது வே.பிரபாகரனின் தீர்மானமே!**
***பிரதியமைச்சர் பஸீர் சேகுதாவூத்***

சமாதான பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் தனித்தரப்பாக கலந்து கொள்வது மிக முக்கியமானதாகும்.

அரசாங்கத்தையும் - விடுதலைப்புலிகளையும் இரு தரப்பாக பேச்சுவார்த்தை மேசைகளில் அமர்த்தியது நோர்வே அரசாங்கமாகும். எனவேதான் நாம் அவர்களிடம் முஸ்லிம்களையும் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக அமர்த்த கோரிக்கை விடுத்திருக்கிறோம்.


சமாதான பேச்சுவார்த்தை சாத்தியப்பட இலங்கை முஸ்லிம்கள் பாரிய பங்களிப்பு செய்துள்ளனர். எனவே அவர்களுடைய பிரச்சினைகளை அவர்கள் தெரிவிக்க இடமளிக்கப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தீர்மானங்கள் என்றால், அது வே.பிரபாகரனின் கருத்தாகும். எனவே, முஸ்லிம் பாரளுமன்ற உறுப்பினர்கள் பிரபாகரனை சந்திக்கும் போது தனித்தரப்பு விடயம் தொடர்பாகப் பேச வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிபீடம் அமர்த்திய முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் பதில் கூறவேண்டிய பொறுப்பு உள்ளது.

**சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்ள முடியாத நிலையேற்படும்!**
***-எம்.எச்.எம்.ஹாரிஸ் எம்.பீ***

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடு



தலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்ததிலிருந்து புலிகளின் செயற்பாடுகள் அனைத்தும் முஸ்லிம்கள் விடயத்தில் முன்னுக்குப் பின் முற்றிலும் முரணானவையாகவே அமைந்து வருகிறது.

சமாதானத்தின் மீது அதீத நம்பிக்கை கொண்ட முஸ்லிம்கள் ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியில் அமர்த்தினர்.

ஆனால், சமாதானத்தைக் கொண்டு வரவேண்டும் என உரமூட்டியவர்களை உதைத்துத் தள்ளும் பேச்சுவார்த்தைகளே இன்று நடைபெறுகிறது.

எனவே முஸ்லிம்கள் அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனித்தரப்பாகவே பங்குபற்ற வேண்டும். அவ்வாறு முஸ்லிம்கள் தனித்தரப்பாக அங்கீகரிக்கப்படாவிட்டால் சமாதான பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்கள் நம்பிக்கை கொள்ளமுடியாத நிலையேற்படும்.

காலாகாலமாகச் சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களை ஏமாற்றி வந்த அதே அரசியல் பாரம்பரிய பின்னணியில் தமிழ்த் தலைமைகள் முஸ்லிம் மக்களை ஏமாற்றி தமது அரசியல் அபிலாஷைகளை நிலைநிறுத்திக் கொள்ள முனைகின்றனவா என்ற ஐயம் முஸ்லிம்கள் மத்தியில் வலுவடைந்து வருகிறது.

இந்த நாட்டில் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதற்காக ஐக்கிய தேசிய முன்னணிக்கு முஸ்லிம்கள் அளித்த வாக்குகள் வடகிழக்கு முஸ்லிம்களை தமிழீழ விடுதலைப்புலிகளிடம் அடகு வைத்துவிடும் நிலையை தோற்றுவிக்குமோ என்ற அச்சத்தையே இன்று ஏற்படுத்தியுள்ளது.

இத்தனித்தரப்பு தொடர்பாக சாதகமான உறுதிமொழியை வடக்கு கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்திடம் பிரதமர் தந்துள்ளார்.

எனவே விடுதலைப் புலிகளும் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளைப் புரிந்து கொண்டு செயற்பட முன் வர வேண்டும்.

**முஸ்லிம்கள் மீது மேலாதிக்கம் செய்யும் உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.**
***-எம்.எச்.சேகு இஸ்ஸதீன் எம்.பீ***

அன்டன் பாலசிங்கத்தின் கருத்துகள் விடுதலைப் புலிகள் மீது முஸ்லிம்கள் வைத்திருந்த நம்பிக்கையை ஆட்டங்காணச் செய்துள்ளது. விடுதலைப்புலிகளிடம் முஸ்லிம்கள் அரசியல் ரீதியான நியாயங்களை எதிர்பார்க்க முடியாது என்ற நிலையை தோற்றுவித்துள்ளது. சிங்களப் பேரினவாதிகள் தமிழர்களை நடாத்திய வாறு தான் விடுதலைப்புலிகள் முஸ்லிம்களை நடாத்தப் போகிறார்கள் என்ற அச்சம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் முடிவுற்று அரசியல் தீர்வுகள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னரேயே முஸ்லிம்கள் மீது மேலாதிக்கம் செலுத்தும் உணர்வு வெளிப்பட்டுள்ளது.

பணயக்கைதிகள் போல் தோற்றமளிக்கும் அரசாங்கத்தையும், அதனிலும் பலஹீனமான முஸ்லிம் தலைவர்களையும் வைத்துக் கொண்டு முஸ்லிம்களின் மன உணர்வுகளையும், அவர்களது உரிமைப் போராட்டங்களையும் மதிப்பீடு செய்வது விவேகமான அரசியலாக இருக்கமாட்டாது.

அரசாங்கத்தையும், விடுதலைப்புலிகளையும் பொறுத்த வரையில் வடகிழக்குப் பிரச்சினை ஒரு தேசிய இனப்பிரச்சினையாகும். ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இது தேசிய சமூக பிரச்சினையாகும். இதனாலேயே முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக கலந்து கொள்ள வேண்டும் என்று கோரி வருகின்றார்கள்.

இணைந்த வடகிழக்கில் தமது தனித்துவத்தை உறுதிப்படுத்த ஒரு பிரத்தியேக அதிகார அலகினை குறிவைத்து அரசியல் ரீதியாக போராடி வருகிறார்கள். சம அந்தஸ்துடனான கட்சிக்காரராக பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுவதையே எதிர்பார்க்கிறார்கள்.

சிங்களப் பேரின வாதத்தை புரிய வைக்க 25 வருடகால ஆயுதப் போராட்டம் அவசியப்பட்ட தமிழர்களுக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளைப் புரியவைக்க ஒரு ஆயுதப் போராட்டம் அவசியமில்லை என்பதனாலேயே அரசியல் போராட்டங்களை அஹிம்சை வழியில் முஸ்லிம்கள் நடாத்திச் செல்கிறார்கள். முஸ்லிம்களின் உரிமைகள் மறுக்கப்படுமிடத்து மாற்று வழிகளைத் தேடிக் கொள்வது முஸ்லிம்களுக்கு முடியாத காரியமாக இருக்கமாட்டாது.

தமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான அரசியல் முயற்சிகளில் முஸ்லிம்கள் யாரோடு பேச வேண்டும்? யாரோடு பேசக் கூடாது? என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் முஸ்லிம்களின் கைகளிலேயே உள்ளது. இதில் யாரும் அத்துமீறிப் பிரவேசித்து குட்டை குழப்ப வேண்டிய அவசியமே இல்லை.

சமாதானத்தை நிரந்தரமாக்கும் முயற்சியில் முஸ்லிம்களின் பங்கையும், பங்களிப்பையும் சம அந்தஸ்தையும் வழங்கி ஏற்றுக்கொள்வது வீணான அழிவுகளையும், கால விரயத்தையும் விட்டும் காப்பாற்றும்.

**அன்டன் பாலசிங்கத்தின் கூற்று கூட்டறிக்கையைப் பொய்ப்பிப்பது போன்றதாகும்!**
***-றிஷாட் பதுர்தீன் எம்.பீ***

முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவு செய்யாத எந்தத் தீர்வும் நிரந்த தீர்வாக அமையமாட்டாது. அதேவேளை முஸ்லிம்கள் மீது தீர்வு திணிக்கப்படுமாயின் அது சில வருடங்களுக்கு பிறகு பல இழப்புகளையும், பாதிப்புகளையும் சந்தித்த பின்னர் முஸ்லிம்களைப் பேச்சுவார்த்தைக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் வலிந்து இழுக்கும் சூழல் ஏற்படும் என்பது யதார்த்தம்.

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தின் கூற்றானது புலிகளின் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீமும் கூட்டாக வெளியிட்ட கூட்டறிக்கையை பொய்ப்பிப்பது போன்றதாகும்.

இந்த இனப்பிரச்சினையில் முஸ்லிம்கள் ஆயுதம் தூக்காவிட்டாலும் தமிழ் மக்களை போன்று முஸ்லிம்களும் பாதிப்புகளையும், இழப்புகளையும் சந்தித்துள்ளனர். அதேவேளை இன்னும் பல விடயங்களில் தமிழ் மக்களை விட அதிகமான பாதிப்புகளை முஸ்லிம்கள் எதிர்நோக்கியுள்ளனர். ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிபீடம் ஏற்றியது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்.



எனவே அரசாங்கத்தின் பிரதமர் அவர்கள்தான் எமக்கு பதில் கூற வேண்டும்.

**ஹக்கீம் பெயரளவில்தான் கலந்து கொள்கிறார்!**
***-ஏ.எச்.எம். பௌஸி எம்.பீ***

முஸ்லிம்கள் சமாதான பேச்சு வார்த்தையில் தனித்தரப்பாக பங்கு பற்றுவதை தமிழீழ விடுதலைப் புலிகள் தீர்மானிக்க தேவையில்லை. அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும்.

வடகிழக்கில் உள்ள முஸ்லிம்கள், அவர்களின் அரசியல் அபிலாஷைகள், உரிமைகள், பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படும் என்பதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்தனர்.

எனவே, முஸ்லிம்களின் பிரச்சினைகளை இனப்பிரச்சினை தீர்வின் போது தீர்க்கவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு ஐக்கிய தேசிய முன்னணிக்கு உள்ளது இதனை அது செய்ய வேண்டும்.

நடைபெறுகின்ற பேச்சு வார்த்தைகளில் கூட முஸ்லிம்களின் விடயங்கள் பற்றி பெரிதாக பேசப்படவில்லை. அமைச்சர் ரவூப் ஹக்கீம் பெயரளவில்தான் கலந்து கொள்கிறார்.

**முஸ்லிம்களை முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் ஏமாற்றுவதற்கு முயற்சித்திருக்க வேண்டும்.**
***-மையோன் முஸ்தபா எம்.பீ***

பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கு பற்றுவது என்பது எல்லா இடங்களிலும் பேசப்பட்டது. அதற்குரிய வாய்ப்புகள், சூழல்கள் ஆரம்பத்திலே இருந்தன. ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தின் அணுகுமுறைகளும் அரசியல் சாணக்கியங்களுமே அந்த வாய்ப்புகள் அற்றுப் போவதற்குக் காரணமாக இருந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவருக்கு எழுதிய கடிதத்திற்கு சுமார் நான்கு மாதங்களாக பதில் எழுதாத அவர்கள் முஸ்லிம் தலைவர்களை சந்திப்பதாக அறிக்கைவிட்டார்கள். ஆனால் அரசாங்கத்தினதும், நோர்வே தூதுவரினதும் நடவடிக்கையினால் புலிகள் - முஸ்லிம் தலைவர்கள் சந்திப்பு புலிகள் - ஸ்ரீ.ல.மு.கா சந்திப்பாக மாறியது.

ஜனாதிபதி தனது பிரதிநிதி ஒருவரை பேச்சுவார்த்தையில் சேர்த்துக் கொள்ளக் கூறியும் அதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. காரணம், பேச்சுவார்த்தை முன்னே

றுவதை தடுப்பதற்காகப் பல கோரிக்கைகளை முன் வைத்து இதனால் பேச்சு வார்த்தை தாமதம் அடையக்கூடும் என்பதுவே.

அன்று முஸ்லிம் தலைவர்களுடன் பேச புலிகளின் அழைப்பு வந்தவுடன் முந்தியடித்துக் கொண்டு ஓடிப்போய் பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை நடத்திய முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் இச்சந்திப்பின் பின்னர் முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாகப் பங்கு பற்றுவதற்கு இணக்கம் காணப்பட்டதாக பெருமை பாராட்டினர். அதனைத் தொடர்ந்து புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்து தான் முதற்கட்ட பேச்சில் அரச தரப்பிலும் அதன் பின்னர் முஸ்லிம் தரப்பாக கலந்து கொள்வதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறியதையும் நாம் மறக்கவில்லை.

எனவே இந்த இரண்டு சந்திப்புகளிலும் அவர்கள் கூறிய நிலைப்பாட்டிலிருந்து இன்று அவர்களின் நிலைப்பாடு மாறியிருக்க வேண்டும். அதாவது முஸ்லிம் சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் நழுவுவதற்கான நடவடிக்கையாக இதனைக் கருதலாம். அல்லது புலிகளின் சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயத்தைத் திரிவுபடுத்தி முஸ்லிம் மக்களை, குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்களை முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் ஏமாற்றுவதற்கு முயற்சி செய்திருக்க வேண்டும் என்று கருதலாம்.

பேச்சுவார்த்தை இவ்வாறு வேகமடைந்து செல்லும் நிலையில் நாட்டின் சகல இடங்களிலுமிருந்து முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வது எப்போது என்று கேட்கப்படும் கேள்விக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் இன்னும் சரியான பதில் கூறவில்லை. இது இவ்வாறு இருக்க, காங்கிரஸ் தலைவர் பேச்சுகளில் கலந்து கொள்ளும் விதம் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றுதான் அக்கட்சி பிளவுபட்டது.

இன்று வடகிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு திசையில், பொதுசன முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னுமொரு திசையில், கிழக்கை சேர்ந்த ஐக்கிய தேசிய கட்சி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வேறு ஒரு திசையில் என, முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல அணிகளாக பிரிந்து செயல்படுதல் என்பவற்றை அறிந்து தானோ என்னவோ வடகிழக்கு முஸ்லிம்களையும் தமிழ் பேசுகின்ற இனம் என்ற நிலையிலேயே பார்ப்பதாக அவர்களின் பேச்சுகள் அமைந்து இருக்கின்றன.

எனவே சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் புத்தி ஜீவிகளும், சமயத் தலைவர்களும் சேர்ந்து ஒற்றுமைப்பட்டு பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்களின் பங்கைப் பெறுவதற்கு செயல்படவேண்டும்.

***~எம்.ஐ.அஹமட் கபீர்***


RSL BULBS சேமியுங்கள் 80% ENERGY
DUTY FREE OFFER
1 YEAR GUARANTEE



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05W | - | 2U | = | 25W | - | 285 |
| 07W | - | 2U | = | 35W | - | 295 |
| 09W | - | 2U | = | 45W | - | 295 |
| 11W | - | 2U | = | 55W | - | 305 |
| 15W | - | 2U | = | 75W | - | 315 |
| 20W | - | 3U | = | 100W | - | 430 |
| 26W | - | 3U | = | 130W | - | 460 |
| 55W | - | 4U | = | 300W | - | 1350 |

5W SPECIAL CHANDELIER LAMP - 285

REIMOO SONS LTD
88A, MAIN STREET, COL-11. TEL- 325060, 326643.
SHOP NO 11, NATIONAL HOUSING SCHEME, KIRIBATHGODA.
26, STATION ROAD, PANADURA.

# ஆனந்த சங்கரியின் கருத்துகள் ஆவேசமா...? ஆதங்கமா...?

அரசியல் குட்டை என்பது அடிக்கடி கலங்குவதும் தெளிவதுமான இயல்பைக் கொண்டது. அந்த வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய நிலைப்பாடும் கலங்கிய குட்டை என்ற நிலையில்தான் இருக்கிறது.

கட்சியின் தலைவர் ஒரு கொள்கை, கோட்பாடு, கருத்துக்களைக் கொண்டவராகவும், கட்சியின் ஏனைய சில உறுப்பினர்கள் அதிலிருந்து மாறுபட்ட கொள்கை, கோட்பாடுகளைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இதனை இவர்கள் வெளியிடும் கருத்துகளிலிருந்து நன்கு அறிந்துகொள்ள முடிகிறது.

தாம் மக்கள் தலைவர்கள் என்பதையும் தமது ஒற்றுமையற்ற கருத்துக்களால் நிச்சயம் குழப்பமடையப் போவது மக்கள்தான் என்பதையும் தமிழ்த் தலைவர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

கூட்டணிக்குள் பலர் "புலிகள் தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள்" என்று கூறும் அதே வேளை வேறு சிலர் "புலிகளை யார் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று கூறியது? அவர்களை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் என எவ்வாறு கூற முடியும்?" எனக் கேள்வி எழுப்புகிறார்கள்.

இன்னும் சிலரோ மீனுக்கு தலையையும் பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்குகளைப் போன்று அரசியல் ஆசனங்களை தக்க வைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக செயல்படுகிறார்கள்.

இவர்களின் இத்தகைய போக் கால் மக்கள் மத்தியில் பெரும் சந்தேகங்களும் அதிருப்திகளும் ஏற்பட்டிருக்கின்றன. பேரினவாத அரசியலால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதிகளிலிருந்து விடுதலை பெற சுமார் 20 வருடங்களாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பல்வேறு இழப்புகளையும் தியாகங்களையும் புரிந்து ஆயுதம் ஏந்திப் போராடி வந்தது.

இது தமிழர்கள் தங்களுக்கான நீதியை தலை நிமிர்ந்து கேட்க வைத்தது. இந்த நீண்ட கால போரின் முடிவில் சிங்கள தேசம் போரின் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்பதை உணர்ந்தது. இதன் விளைவாகவே ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழர் தரப்பின் சார்பாக தமிழ் மக்களுக்கான பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொண்டு மேசைக்கழைத்து பேசத் தொடங்கியது. இதனை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டு ஊக்கப்படுத்தி முண்டு கொடுத்தபடி சமாதானப் பேச்சு வார்த்தை இலக்கை நோக்கி முன்னேற பெரும் சவால்களுக்கு மத்தியிலும் அயராது உழைத்து வருகிறது.

இருந்த போதும் இன வாத கட்சிகள் சிலவற்றின் சமாதானத்துக்கு எதிரான போக்குகளும் முப்படைகளின் அதிகாரங்களையும் தனது கைக்குள் (ரிமோட் கொன்றோலர் போல) வைத்திருக்கும் ஜனாதிபதியின் அதிகார நடவடிக்கைகளும் அயல் நாடான இந்தியாவின் நிலைப் பாடும் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு பெரும் சவாலாக இருந்து வருகின்றன.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல என தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் குறிப்பாக அதன் தலைவர் வீ. ஆனந்த சங்கரி கூறி வருவதானது மக்கள் மத்தியில் சந்தேகங்களையும், குழப்பங்களையும், கொந்தளிப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனந்த சங்கரிக்கு வயது எழுபதை நெருங்குகிறது. 1970ம் ஆண்டு அரசியலுக்குள் நுழைந்தவர். தந்தை செல்வாவோடு தோளோடு தோளாக நின்றவர். பழம் பெரும் அரசியல்வாதிகளுடன் பழகிய அனுபவங்களைக் கொண்டவர். தமிழ் மக்களின் மீட்சிக்காகவும் உயர்வுக்காகவும் பாடுபட்டவர். இன்றும் பாடுபடுபவர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கான ஆதரவை மானசீகமாகவும், வெளிப்படையாகவும் ஆனந்த சங்கரி வழங்கியே வந்திருக்கிறார் என்பதை மறுப்பதற்கில்லை. பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போது துணிவோடு எழுந்து நின்று, புலிகளை ஆதரித்துப் பேசியவர் அவர்.



ஒருமுறை, ஆனையிறவுச் சம்பவம் பாராளுமன்றத்தில் சிலாகிக்கப்பட்ட போது எழுந்து, "பளையை நீங்கள் பிடிக்க வேண்டுமென்றால் இன்னும் பத்து வருடங்கள் போகும்; ஆனால் ஆனையிறவை மீட்க எண்ணுவது பகற் கனவு!" என்று வீர வசனங்களைப் பொழிந்தவர்.

இப்போதுள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிற் சிலர் அப்போது பாராளுமன்றத்தில் இருந்தும் கூட விடுதலைப் புலிகள் இனவாதிகளினால் தரக்குறைவாக விமர்சிக்கப்படுகையில் வாய்பேசா மௌனிகளைப் போல் இருந்து கொண்டிருந்ததை மறந்து விட முடியாது. ஆனால், ஆனந்த சங்கரி அவ்வாறு இருக்கவில்லை. விடுதலைப் புலிகள் பற்றிய பேச்சு எழும் போதெல்லாம் விட்டுக் கொடுக்காமல் வீர உரைகள் நிகழ்த்தியவர் அவர்.

ஆனையிறவைப் புலிகள் முற்றுகையிட்டிருந்த காலை, அந்நிய நாடுகளின் உதவியுடன் அந்த முற்றுகையை முறியடிக்க ஸ்ரீ லங்கா அரசு முயன்று கொண்டிருக்கையில் ஆனந்த சங்கரி பாராளுமன்றத்தில் எழுந்து நின்று "இவ்வாறு நீங்கள் முயற்சி செய்தால் அதன் விளைவுகள் பாரதூரமாக இருக்கும். 35,000 இராணுவ வீரர்களைக் காப்பாற்றித் தாருங்கள் என்று நீங்கள் மண்டியிடுவீர்கள்!" என்று வீரப் புலிகளின் தீரத்தை எடுத்து விளம்பினா.

எரிக் சொல்ஹெய்ம் பாராளுமன்றத்திற்குப் பார்வையாளராக வந்து ,கலரியில் அமர்ந்திருந்த போது கண்டு விட்ட சிஹல உறுமய கட்சியின் திலக் கருணாரத்ன, எரிக் சொல்ஹெய்மைத் தரக்குறைவாக விமர்சித்துக் கொண்டே போன போது, அதை ஏனைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கீகரிப்பது போல் அமைதியாயிருப்பதைக் கண்டு சீற்றமுற்று, எழுந்து, எரிக் சொல்ஹெய்மிற்குச் சாதகமாக குரல் கொடுத்தவர் ஆனந்த சங்கரி. பாராளுமன்றம் முடிந்து அவர் வீடு வந்த போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருட்பட, பலர் "ஏன் எரிக் சொல்ஹெய்மிற்கு வக்காலத்து வாங்கினீர்கள்?" எனத் தொலைபேசியில் கண்டனம் தெரிவித்த கதையும் இருக்கிறது.

இவ்வாறெல்லாம் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை மனதார அங்கீகரித்தவரும், தமிழ் மக்களின் விடுதலைக்காக உழைத்தவருமான ஆனந்தசங்கரி அண்மைக் காலமாக "புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் அல்ல!" என்று பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றமை சலசலப்புக்களையும், சந்தேகங்களையும், கோபத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் விதைத்து விட்டிருக்கிறது என்பதைப் புறம் தள்ள முடியாது என்பதனால், ஒரு காலைப் பொழுதில் அவரைச் சந்தித்தோம்.

"என்ன ஐயா? இப்படிச் சொல்லி வருகிறீர்கள்? தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள்தான் என்று உலகமே ஒப்புக் கொண்டுவிட்ட பிறகு நீங்கள் மட்டும் இப்படிச் சொல்கிறீர்களே, இது நியாயமா? என்றோம்.

ஆனந்தசங்கரி எம்மிடம் திருப்பிக் கேட்டார்.

"தம்பியவை... ஏக பிரதிநிதிகள் என்பதன் அர்த்தம் என்னவென்று சொல்லுங்கள் பார்ப்போம்!"

"ஏக பிரதிநிதிகள் என்றால் தாங்கள் மட்டும்தான் பிரதிநிதிகள்-ஒரே பிரதிநிதிகள்-மற்றவர் எவரும் பிரதிநிதிகள் அல்ல!" என்று இரண்டு மூன்று விதமாகச் சொன்னோம்.

"சரி... தாங்கள் மட்டும்தான் பிரதிநிதிகள்; மற்றவர் எவரும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லவென்றால், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை என்னவென்று அழைப்பது...?" என்று கேட்டார்.

"அதைத்தான் நான் சொல்லி வருகிறேன். பாராளுமன்றத்தில் இரண்டு மூன்று தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அவர்களையும் தமிழ் மக்கள் தான் தெரிவு செய்தார்கள். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகத்தான் அவர்களும் பாராளுமன்றம் வந்திருக்கிறார்கள். ஆகவே, விடுதலைப் புலிகள் மட்டும்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பது தர்க்கரீதியில் பிழையாகின்றதல்லவா? அந்த அடிப்படையில்தான் நான் எனது கருத்தைக் கூறுகின்றேன். ஆனால் சில ஊடகங்கள் திட்டமிட்டு, எனது கூற்றைத் திரிவுபடுத்திப் பிரசுரிக்கின்றன!" என்றார் உண்மையான வருத்தத்தோடு.

"அப்படியானால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு வார்த்தையில் புலிகள் மட்டும் தானே கலந்து கொள்கிறார்கள். தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்த வேறு எவரும் பங்கு பற்றுவதில்லையே... இதைப் பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?" என்றோம்.

*(அடுத்தவாரம்)*

—எஸ்.எச்.நிஃமத்

## முடங்க வைக்கும் மூட்டுவலி!

முன்பெல்லாம் வயதானவர்களுக்குத்தான் மூட்டுவலி ஏற்படும். ஆனால் இப்போது 40 வயதைத் தாண்டிவிட்டாலே நடக்க முடியலை, உட்கார முடியலை எனக் கூறி மூட்டு வலியால் அவதிப்படுகிறவர்கள் ஏராளமானோர் உள்ளனர். எலும்புகள் எங்கெல்லாம் ஒன்றுக் கொன்று சேரும் இடம் இருக்கின்றதோ அங்கு மூட்டுவலி ஏற்படும். உணவுப் பழக்கவழக்கம், உடலை நம் இஷ்டத்துக்கு செயற்பட வைப்பது போன்றவற்றால் தான் மூட்டுவலி ஏற்படுகிறது.

பொதுவாக வயதாகிவிட்டால் மூட்டுக்கள் தேய்ந்து அதனால் வலி ஏற்படும். இது மட்டும் அல்லாமல் உடல் பருமனாக இருத்தல், மூட்டைச் சுற்றியுள்ள தசை நார்கள் பாதிக்கப்படுதல், காசநோய், குளிர்காற்றில் அலைதல், மழையில் நீண்ட நேரம் அலைதல், வாழைக்காய், உருளைக்கிழங்கு போன்றவற்றை அதிகம் சாப்பிடுதல், பெண் தொடர்பினால் ஏற்படும் மேகநோய், மூட்டுகளில் அடிபடுதல், அதிகமாக மது அருந்துதல் போன்றவற்றாலும் ரத்தத்தில் யூரிக் அமிலம் அதிகமாக இருந்தாலும் வலி ஏற்படும். இதை நாம் சில உணவுப் பழக்க வழக்க முறை மற்றும் உடற்பயிற்சி முறைகளை கடைப்பிடித்தால் தடுத்து விடலாம்.

இதற்கு கிழங்கு வகைகளை நீக்க வேண்டும். அதிக கொழுப்பு சத்துள்ள உணவுகளையும், உப்பு, இனிப்புக்களையும் தவிர்க்க வேண்டும். மது அருந்தக் கூடாது. எளிதில் செரிக்கும் உணவுகளையும் கீரை, பால் ஆகியவற்றையும் உட்கொள்ள வேண்டும். சில உடற்பயிற்சி முறைகள் உள்ளன. இதை டாக்டர்களிடம் கேட்டு தெரிந்து கொண்டு செய்தால் பலன் கிடைக்கும்.

—மணவை அசோகன்.

## மருத்துவம்

## குண்டாவது மட்டுமல்ல குடல்புற்று நோயும் வரும்.

மன அழுத்தத்திலிருந்து விடுபட அதிகம் சாப்பிட வேண்டும் என்பது ஒரு புறம் இருக்க, நம் தேவைக்கும் குறைவாகச் சாப்பிட்டால் குடல் புற்று நோய் ஏற்படும். தேவையான அளவு உணவு என்பது, பிரதான உணவான அரிசியை அதிகமாக உண்பது. காய்கறிகள், பழங்கள், கீரைவகைகளைச் சாப்பிடும் போது, அதனோடு சேரும் அளவே அரிசிச் சோற்றைச் சாப்பிட வேண்டும். சத்துள்ள ஆகாரம் குறைவாகச் சாப்பிடும் போதுதான் தேவையில்லாத பிரச்சினைகள் உடலில் தோன்றுகின்றன.

குடல் புற்று நோயைத் தவிர்க்க, அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதை நிறுத்திவிட்டு, சத்துள்ள ஆகாரத்தையும், உடலுக்கு நன்மை பயக்கும் கொழுப்பு நிறைந்த உணவு வகைகளையும் சாப்பிட வேண்டும் என்று அமெரிக்க தேசிய புற்று நோய் மையம் ஆராய்ந்து கண்டறிந்துள்ளது.

—மணவை அசோகன்.

## நாட்டு வைத்தியர் நல்லதம்பி



சிலரது முகம் எப்போதும் கறுப்பாகவும் வெளிர்நிறமாகவும் காட்சி அளிக்கும். சில சிவப்பு நிறப் பெண்கள் வெயிலில் ஒரு தடவை சென்று வந்தால் வெளிறி விடுவதுண்டு. இப்படிப்பட்டவர்கள் தாங்கள் மிடுக்காக முக அழகைப் பெற, அத்திப்பழம் ஒரேஞ் மற்றும் காய்கறிகள், பால், வெண்ணெய், முளை கட்டிய தானியவகைகள், மீன் போன்றவற்றை வாரம் முழுவதும் அட்டவணையிட்டு சாப்பிட்டு வர வேண்டும். இதை ஒரு சில மாதங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உங்கள் மேனியின் அழகை நீங்களே உணர்வீர்கள்.

# விபச்சாரத் தொழிலில் சென்னைச் சிறுமிகளின் - பாலுணர்வு பிரச்சினைகள் -

திருமதி.உமா ரவிசங்கர் தனது எம்..பில் பட்டப்படிப்பிற்கான ஆராய்ச்சிக்கு தேர்ந்தெடுத்த விடயம் தான் இந்தக் கட்டுரையின் தலைப்பாக காணப்படுகிறது. விபச்சாரத் தொழிலில் சென்னைச் சிறுமிகளின் பாலுணர்வுப் பிரச்சினைகள் (Sexuality of child prostitution in chennai) என்ற தலைப்பிலான ஆராய்ச்சியை அவர் மேற் கொண்டபோது பல திடுக்கிடும் விடயங்கள் வெளி வந்திருக்கின்றன. "விபச்சாரத் தொழிலில் தள்ளப்பட்டு விட்ட



பெண்களைக் சந்தித்து, அவர்களுடன் பழகி, உண்மைகளை வரவழைப்பதற்குள் படாதபாடு பட்டுவிட்டேன்!" என்கிறார் திருமதி.உமா ரவிசங்கர். "எனினும் அதிர்ச்சியில் இரத்தத்தை உறையவைக்கும் பல சம்பவங்களை நான் கண்டு பிடித்திருக்கிறேன்" என்று அவர் கூறுகிறார். இதோ, அவரின் அந்த ஆராய்ச்சி அனுபவங்களிலிருந்து சில துளிகள்:-

இந்த ஆராய்ச்சியை நான் கடந்த பத்து வருடங்களாக செய்து வருகிறேன். உண்மையான தகவல்களைத் திரட்டுவதும், சம்பந்தப்பட்ட பெண்களின் நம்பிக்கையைப் பெறுவதும் சாதாரண விஷயம் இல்லை. அதற்கு பல நாட்கள், மாதங்கள் பிடிக்கும். பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். பல ஆபத்துக்களை எல்லாம் கடந்து தான் "WHO" அமைப்பு உதவியோடு இந்த ஆராய்ச்சியை முடிக்கும் நிலைக்கு வந்திருக்கிறேன். ஆராய்ச்சி கிட்டத்தட்ட முடிவுக்கு வந்து விட்டாலும் நாம் வாழும் சமூகத்திலேயே எத்தனை பயங்கரமான ஒரு கொடூர உலகமும் செயல்பட்டு வருகிறது என்கிற உண்மை என்னை ரொம்பவே பாதித்து விட்டது.

பத்து வருடங்களுக்கு முன்னால் சென்னையில் சுமார் மூவாயிரம் செக்ஸ் தொழிலாளிகள் இருந்தார்கள். 28 இடங்களில் விபச்சாரம் பிரதானமாக நடந்து கொண்டிருந்தது. கேபரே போன்றவையும் நடந்து கொண்டிருந்தன. வட பழனி, கோடம்பாக்கம், கே.கே.நகர் போன்ற பகுதிகளில் மட்டும் 500 பேருக்கு மேல் இருந்தார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் விசாரிக்க விசாரிக்க அவர்கள் நான்கு பிரிவுகளாக இயங்குவது தெரிய வந்தது.

தெருவில் நின்று அழைப்பவர்கள், புரோக்கர்கள் மூலம் தொழில் நடத்துபவர்கள், காண்டாரக்ட் (ஒப்பந்தம்) முறையில் ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற ஊர்களிலிருந்து தற்காலிகமாய் வந்து செல்பவர்கள், குடும்ப அமைப்பில் இருந்தபடி விபச்சாரம் செய்பவர்கள்" என்பதுதான் அந்த நான்கு வகை.

"மும்பை, கொல்கத்தா மாதிரி சென்னையில் பகிரங்க விபச்சார விடுதிகள் கிடையாது. எல்லாமே அண்டர் கிரவுண்ட்தான். "எயிட்ஸ்" தடுப்புப் பிரசாரம் இங்கே பலம் பெற்று விட்ட பின் அதன் பெயராலேயே பல விபச்சாரப் பெண்களை சந்திக்க ஆரம்பித்தேன். இதற்காகச் சென்னையில் நான் ஏறி இறங்காத பகுதிகளே இல்லை.

ஒரு முறை கோடம்பாக்கத்திலுள்ள மகாலிங்கபுரத்திற்குச் சென்றேன். பலமாகக் கொட்டிக் கொண்டிருந்தது மழை. இரவு மணி பத்து முப்பது. என்னுடன் பேராசிரியர் ஒருவரும் உதவிக்கு வந்து நின்றார். ஒரு விபச்சாரப் பெண்ணை அவர் சந்திப்பது போல் ஒரு புரோக்கர் மூலம் ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்தோம். கொஞ்ச நேரத்தில் ஒரு குடையை பிடித்துக் கொண்டு இரண்டு பெண்கள் இருட்டில் நடந்து வந்தார்கள். சோடிய விளக்கொளியில் குடை வேறு மறைத்திருந்ததால் முகம் சரியாக தெரியவில்லை. சற்று அம்மா போலிருந்த் பெண் "பிடிச்சிருக்கா?" என்றதும் தலையசைத்தார் பேராசிரியர். நான் சீட்டுக்கு அடியில் ஒளிந்து கொண்டிருந்தேன். மற்றொரு பெண் காருக்குள் ஏறிக் கொள்ள கார் புறப்பட்டது.

நான் சீட்டுக்கு அடியில் இருந்து வெளியே வந்ததும் அந்தப் பெண்ணிற்கு அதிர்ச்சி. அந்தப் பெண்ணைப் பார்த்த எனக்கோ பேரதிர்ச்சி. காரணம், அவள் ஒரு சிறுமி. அவள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டாளோ தெரியவில்லை. அழ ஆரம்பித்து விட்டாள். "அழாதேம்மா! நாங்க உங்கிட்டே பேசத்தான் வந்திருக்கோம். உனக்கான பணம் ஏற்கெனவே கொடுத்தாச்சு! இதோ இன்னும் தர்றோம். உன்னைப் பத்திக் கொஞ்சம் சொல்லு!" என்று ஆதரவாகப் பேச ஆரம்பித்தேன். கொஞ்ச நேரத்தில் அவள் மடை திறந்த வெள்ளம் போல் கொட்ட ஆரம்பித்தாள்.

"அக்கா, தஞ்சாவூருக்குப் பக்கத்தில இருக்கிற ஒரு கிராமம் தான் எனக்கு சொந்த ஊரு. அப்பா செத்துப் போனதற்கு அப்புறம் என்னையும் அக்காவையும் கூட்டிக்கிட்டு அம்மா இங்கே வந்திட்டாங்க. சாப்பாட்டிற்கு வழியில்லை. முதல் அக்கா தான் இந்தத் தொழிலுக்கு வந்திச்சு.

ஏதோ குடும்பம் நடந்துக்கிட்டிருக்கிறது. ஆனால், திடீரென்று அக்காவுக்கும் ஒரு ஆட்டோ டிரைவருக்கும் "லவ்" வந்திருச்சு. அக்கா தொழில் செய்கிற விஷயம் அவருக்குத் தெரிய கூடாது என்று நினைச்சு, அந்த விஷயத்தையே மறைச்சு கல்யாணம் பண்ணி வச்சோம்... அக்கா போன பிறகு நான் தானே அம்மாவைக் காப்பாற்ற வேண்டும்? அதான் தொழிலுக்கு வந்திட்டேன்..." என்று பெரிய மனிசி போல் பேசினாள் அந்தச் சிறுமி. பெயர் தனம்.

"உன் வயசு என்னம்மா?"

"பதிமூணு!" என்றாள்.

மளிகைக்கடை, பால், வீட்டுவாடகை என்று எதுவாக இருந்தாலும் அம்மா பணம் கொடுக்க மாட்டாராம். தனம் தான் மூலதனம்.

சென்னையில் உள்ள விலைமாதர்களில் அறுபது சதவீதம் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள்தான். காதலனை நம்பி ஏமாந்தது, வேலை வாங்கித் தருகிறேன் என்று புரோக்கர் ஏமாற்றியது, சினிமா ஆசை இந்த மூன்றும் தான் விபச்சாரம் என்னும் படுகுழியில் அவர்கள் விழுவதற்கு பிரதானமான காரணங்கள். சென்னை சென்ரல் ரயில்வே ஸ்டேஷனிலும், பிராட்வே பஸ் ஸ்டாண்டிலும் தனியாக வரும் பெண்களை மடக்குவதற்கென்றே பல புரோக்கர்கள் எப்போதும் அலைந்து கொண்டிருப்பார்கள்.

> *"என்னை யார் இனிமேல் கல்யாணம் பண்ணிப்பாங்க?" வசுந்தரா விசும்பலுடன் என்னிடம் கேட்டபோது பதில் சொல்ல முடியாமல் தவித்தேன்.*

பெண் புரோக்கர்களுக்குப் பொதுவாக "ஆன்ட்டி" என்று தான் பெயர். ஆண் புரோக்கர்களை விட இவர்கள் தரும் டார்ச்சர் கொஞ்சம் குறைச்சல் தான். குடித்து விட்டு கலாட்டா செய்வது, பணம் தராமல் ஏமாற்றுவது, கீழ்த்தரமாக நடந்து கொள்வது இவையெல்லாம் ஆண் புரோக்கர்களிடம் அதிகம்.

"சாந்திமுகூர்த்தம்" என்கிற வார்த்தை சென்னை புரோக்கர்களிடையே பிரபலம். வயதுக்கு வந்த எந்த ஆணின் கரமும் படாத சிறுமிகளை தொழிலுக்கு முதல்முறையாக அனுப்புவதற்குப் பெயர்தான் "சாந்திமுகூர்த்தம்". செக்ஸ் பற்றிய எந்த அறிவும் இல்லாத, அப்போது தான் பூத்த இளம் மலர்களை, அதற்கென்றே நுகரத் துடிக்கும் காமுகர்களிடம் அனுப்புவதற்குத் தனி ரேட் வைத்திருக்கிறார்கள் புரோக்கர்கள். இந்த "சாந்திமுகூர்த்த" ரேட் ஐம்பதினாயிரம் வரை போகும். "First Encounter" என்றும் மேலிடத்தொழில் வட்டாரங்களில் இதை அழைக்கிறார்கள். "எந்த நோயும் வராது, இதனால் ஆயுள் அதிகரிக்கும், இளமை திரும்பும்" என்றெல்லாம் மூட நம்பிக்கை வைத்திருக்கும் கொடூரமனம் படைத்தவர்கள் இதைப் போன்ற "சாந்திமுகூர்த்த" சிறுமிகளுக்காகப் பணத்தை கொட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். 12,13,14 வயதில் இதைப் போன்றவர்களிடம் (பெரும்பாலும் 45,50 வயதுக்கு மேற்பட்டவர்கள்) கற்பை இழக்கும் சிறுமிகளின் மனநிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதை நான் பல இடங்களில் கண்ட போது மனது வலித்தது. ("என்ன பண்ணினாலும் சும்மா இரு. எதிர்ப்புக் காட்டாதே. வலிச்சாப் பொறுத்துக்கோ" என்று அட்வைஸ் சொல்லப்பட்டதாக ஒரு "சாந்திமுகூர்த்த" சிறுமி சொன்னாள்.)

வசுந்தராவின் கதை அது போலத்தான் ரொம்ப சோகமானது. குழந்தையாகப் பிறந்தவுடன் அவளுடைய அம்மா எழும்பூர் மருத்துவமனையில் அனாதையாக விட்டு விட்டுப் போய்விட்டாள். "பெண்" குழந்தை என்று "புரிந்து" கொண்ட மற்றொரு பெண் சரஸ்வதி, வசுந்தராவை எடுத்துத் தன் வீட்டுக்குக் கொண்டு சென்றாள். சரஸ்வதிக்கு ஏற்கனவே ஒரு மகனும், ஒரு மகளும் உண்டு. வசுந்தராவை ஐந்தாவது வகுப்பு வரை படிக்க வைத்து விட்டு நிறுத்தி விட்டார்கள். பிறகு வீட்டு வேலை, மகனுக்கும், மகளுக்கும் திருமணம் செய்து கொடுத்த பின்தான் மெல்ல தன் சொரூபத்தைக் காட்டினாள் சரஸ்வதி. "சாந்திமுகூர்த்தத்துக்கு" வசுந்தராவைத் தயார் படுத்தினாள். முதல் வசூல் ஐம்பதினாயிரம் பிறகு அடுத்த சில மாதங்கள் வீட்டு வேலை. பிறகு அதே போல் "சாந்தி முகூர்த்தம்" என்று ஏமாற்றி மற்ற ஐம்பதினாயிரம். மறுபடி வீட்டு வேலை. இதைப் போல் இரண்டு லட்சம் சம்பாதித்துவிட்டு விபச்சாரத் தொழில் என்னும் சாக்கடையில் வசுந்தராவை நிரந்தரமாக் தூக்கிப் போட்டாள் சரஸ் வதி. தொழிலுக்குச் செல் லும் போது நல்ல உடை, மேக்கப். வீட்டுக்கு வந்தால் பழைய துணி, வீட்டு வேலை... இன்றைக்கும் வசுந்தராவின் கண்ணீர்க் கதை தொடர்கிறது. "என்னை யார் இனி மேல் கல்யாணம் பண்ணிப்பாங்க?" வசுந்தரா விசும்பலுடன் என்னிடம் கேட்ட போது, பதில் சொல்ல முடியாமல் தவித்தேன்.

நிஷா மாதிரியான் வேறு சில "டைப்" பெண்களையும் நான் சந்திக்க நேர்ந்தது. ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவள் நிஷா. அம்மா, அம்மாவின் தம்பி, நிஷா என்று மூன்று பேர் கொண்ட குடும்பம். சம்பாத்தியம் எல்லாம் மாமா என்பதால் நிஷா அவன் சொன்னபடியெல்லாம் கேட்க வேண்டியதாயிற்று. அவனுடைய செக்ஸ் வற்புறுத்தலுக்கு முதலில் மறுத்தவள், பிறகு வேறு வழியின்றி சம்மதித்தாள். ஆனால், அதுவே அவளுக்குப் பிடித்து விட்டது. மாமாவும் வெளிநாடு போய்விட, நிஷா தவித்தாள். பணமும் வேண்டும், அழகிய சுகமும் கிடைக்க வேண்டும். வழி? தெருவுக்குத் தைரியமாக வந்து விட்டாள் நிஷா. பணக்கார வீட்டுப் பையன்களை கண் ஜாடை காட்டி அழைக்க ஆரம்பித்தாள். பிறகு அதற்கே "அடிக்ஷன்" ஆக வருமானத்திற்கான தொழிலாகவும் மாறிவிட்டது. "ஏன் நிஷா? இப்படிச் செய்வது தப்பில்லையா? கொடிய நோய் கூட உன்னைத் தாக்க வாய்ப்பிருக்கிறதே?" என்றேன். அவள் காஷுவலாகச் சொன்ன பதில் என்னை அதிர வைத்துவிட்ட[illegible] "நான் 'ஓரல்' செக்ஸ் தான் (வாய் மூலமான செக்ஸ்) செய்கிறேன். அதனால் என்ன பயம்?" என்றாள் அவள்.

குறைந்த சம்பளத்திற்கு ஏகப்பட்ட பெண்கள் வேலை செய்யும் கம்பெனிகளில் (எக்ஸ் போர்ட் கார்மெண்ட் மாதிரி) பெண்கள் திசை மாறுவது அதிகமாக இருக்கிறது. அங்கே பல புரோக்கர்கள் 'லிங்க்' வைத்திருப்பார்கள். ஏழைப் பெண்களை, அங்கு வேலை செய்யும் ஆண்கள் மூலமாகக் கவர்ந்திழுத்து, விபச்சாரத் தொழிலில் இழுத்துவிடுவது சர்வசாதாரணமாக நடக்கிறது. வேலைக்குச் செல்லும் சில குடும்பப் பெண்கள் கூட, குடும்பக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக க[illegible]வனுக்குத் தெரியாமல் விபசாரத்தில் ஈடுபடுவதையும் பார்த்து நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

அதிக பணத்துக்காகவும், ஆடம்பரத்துக்காகவும் உயர்தர நட்சத்திர ஹோட்டல்களில் விபச்சாரம் செய்யும் மேல்தட்டு இளம் டீன் ஏஜ் பெண்கள் பலரையும் நான் சந்தித்தேன்.

ஆனால், என்னால் மறக்க முடியாதவள் சுமதி என்கிற பெண்தான். சென்னையில் ஒரு வீட்டில் ஐந்து பெண்களை வைத்து ஒரு அம்மா விபச்சாரம் செய்வதாகக் கேள்விப்பட்டு அங்கே சென்றேன். வீடடினுள் சில பெண்கள் இருந்தனர். ஒரு பெண் மட்டும் உள்ளே படுக்கையறை யில் படுத்திருந்தாள். மிக அழகான முகத்தைக் கொண்ட அவள் அழுது அழுது முகம் சிவந்திருந்தாள். அழகான பெண் என் பதால் பல கஸ்டமர்கள் அவளையே கேட்பார்களாம். "அதற்காகவா அழுகிறாய்?" என்றேன்.

"இல்லை" என்று கண்ணீருடன் தலையசைத்தவள் கழுத்துவரை போர்த்தியிருந்த போர்வையை விலக்கினாள்.

இடுப்புக்குக் கீழே அவளுடைய இரண்டு கால்களும் போ



-உமா ரவிசங்கர்-

லியோவினால் (இளம்பிள்ளை வாதம்) சூம்பிப்போய் இருந்தன. கடவுளே!

## சும்மா ஒரு வானொலி பரிசு

இதய வாசகர்களே!
உங்கள் அனைவருக்கும் வாரா வாரம் சும்மா ஒரு வானொலி பரிசாகப் போகிறது.
இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உங்கள் பெயர், முகவரி என்பவற்றை மாத்திரம் நீங்கள் அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம். ஆயினும் அவை இங்கு பிரசுரிக்கப்படும் கூப்பனாகமட்டும் இருக்க வேண்டும். பிரதிபண்ணியோ, வேறு வகைகளில் நகல் எடுத்தோ அனுப்பக் கூடாது.
முடிவுகள் வெளியான ஒருமாதகாலத்திற்குப் பின்னர் எந்நேரமும் நீங்கள் இடி-தமிழ்கேசரி அலுவலகத்திற்கு வந்து உங்களுக்குரிய வானொலியைப் பெற்றுக் கொள்ளலாம்.
ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
கீழுள்ள கூப்பனில் பெயர், முகவரியை எழுதி தபாலட்டையில் ஒட்டி அனுப்பவும்.

பரிசுக் கூப்பன் - 07 முடிவு திகதி : 19. 04. 2003

பெயர் : ................................................

முகவரி : ................................................

................................................

................................................


## இணைக்கும் போட்டி – இல 07

இதயம் நிறைந்த வாசகர்களே!

பிரிந்திருப்போரை ஒற்றுமைப்படுத்துவது உயர்ந்த செயலாகும். உங்களிற் பலரும் அந்த உயர்ந்த செயலைப் புரிந்திருப்பீர்கள் பாராட்டுக்கள். பிரிந்திருப்போரை இணைக்கும் உங்களுக்கு மேலும் பயிற்சியும், பரிசும் தருவதற்கு தமிழ்கேசரி விரும்புகின்றது. ஆனால் இங்கே இணைப்பதற்கு மனிதர்கள், பொருட்கள் என்று பலவும் உள்ளன.

என்ன யோசிக்கிறீர்கள்? வாரா வாரம் இங்கு நாம் ஒரு படத்தைப் பல்வேறு துண்டுகளாக வெளியிடுவோம். அத் துண்டுகளை இணைத்து முழுமையான படமாக்கி நீங்கள் எமக்கு அனுப்ப வேண்டும். இது தான் போட்டி. இப்போட்டியில் வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலி ஒருவருக்கு முடிவுகள் வெளியான ஒருமாதகாலத்திற்குள் காசோலையாகவோ, மணி ஓடராகவோ பரிசுப் பணம் வந்து சேரும். பாராட்டுக்குரிய பலரின் பெயர், முகவரிகளும் இடம்பெறும். மறந்து விடாதீர்கள். இங்குள்ள முகவரிக் கூப்பன் ஒட்டப்படாமல் வருகின்ற விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இனி இணையுங்கள்!



இணைக்கும் போட்டி - இல 07
தமிழ்கேசரி,
3A, தர்மராஜமாவத்தை,
கொழும்பு-03.

பரிசு ரூபா : 200/-
முடிவு திகதி : 19.04.2003

## குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

குறுக்கெழுத்துப்போட்டி இல:07
பரிசு ரூ 300/= முடிவு
திகதி: 19. 04. 2003

**இடமிருந்து வலம்:**
01. ஓர் உலோகத்திற்குத் தமிழில் இப்படிப் பெயர்.
09. பால் பிழிகையில், தேனீர் தயாரிக்கையில் இது தேவைப்படலாம்.
13. அதிர்ஷ்டம்.
17. உள்ளம் என்பது இது என்றார் கண்ணதாசன்.
19. சிரசு.
22. பணம், புகழ் வந்தால் சிலருக்கு இதுவும் வந்துவிடும்.
27. இது கெட்டுக் குட்டிச் சுவரானது என்பது பழமொழி.

**மேலிருந்து கீழ்:**
01. கௌரவர்களில் மூத்தவன்.
03. முனிவர்கள் புரிவது.
04. மனித உடலில் வாய்க்கும் கழுத்திற்கும் இடைப்பட்ட பகுதி.
14. மான் என்பதன் முன்னால் இது சேர்ந்தால் ஆண்மானாகி விடும்.
17. இரவில் "முழி"த்திருக்கும் பறவை.
18. ஒரு வகை மாவின் பெயர்.
19. கார் இது பட்டால் பின் எவ்விதம் ஓடுமாம்?

## சொல்ஜாலப் போட்டி இல :07
பரிசு ரூபா: 300/-
முடிவு திகதி: 19.04.2003

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ம | ம | ல் | டை | ன் | ப் | வு |
| னு | ர | ஷ | ட | றை | மு | சா |
| வு | ர | ய | ன | ணா | ச | பி |
| கை | ய | ட் | **து** | ம் | ப | ப் |
| யி | பு | த | ஷ் | கு | டு | க் |
| மு | ம் | ட | ப | பு | க் | க |
| ல் | ன் | வ | வை | வே | ம | கை |

அன்பு வாசகர்களே!

இது முற்றிலும் புதுமையானதொரு போட்டி. இங்கேயுள்ள 49 கட்டங்களிலும் உள்ள எழுத்துக்களைக் கொண்டு நாம் தந்திருக்கும் தரவுகளுக்கான சொற்களைக் கண்டுபிடித்து இங்குள்ள முகவரிக் கூப்பன் ஒட்டப்பட்ட தபாலட்டையில் உரிய முடிவுதிகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். நட்ட நடுவில் உள்ள தடித்த எழுத்து து. எனவே முதலாவது தரவுக்கான விடை துணிவு இவ்வாறே ஏனைய தரவுகளுக்கான சொற்களையும் கண்டுபிடித்து அனுப்ப வேண்டும்.

பரிசு விபரம்:

முற்றிலும் சரியான விடைகளை எழுதியோரில் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படும் முதல் மூவருக்கு முறையே ரூபா.150/=, ரூபா.100/=, ரூபா.50/= பரிசாகக் கிடைக்கும். மற்றும் பாராட்டுக்குரிய ஐவரின் பெயர், விலாசங்கள் பிரசுரமாகும். பரிசுத் தொகை முடிவுகள் வெளியான ஒரு மாத காலத்திற்குள் காசோலையாகவோ, மணிஓடர் மூலமாகவோ உங்களை வந்து சேரும். மற்றும் இப்போட்டி சம்பந்தமாக ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. இனி, போட்டிக்குச் செல்வோம்.

01. தைரியத்திற்கு ஒத்த கருத்துள்ள சொல்.
02. துன்பத்திற்கு இன்னொரு சொல்.
03. யானையின் பலம் இதிலுள்ளது என்பர்.
04. கெட்டவன்.
05. இலங்கையை ஆண்ட மன்னன் இவன்.
06. பெருக்குவதற்கு இது பயன்படும் என்பர் சிலர். கூட்டுவதற்கு இது பயன்படும் என்பர் வேறு சிலர். ஆனால் கணிதத்துக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.
07. அவியல், மசியல், சுண்டல் போன்று சமையலில் இது ஒரு வகை.
08. திரௌபதியைத் துகிலுரிந்தவன்.
09. படகோட்டிச் செல்லப் பயன்படுவது.
10. சுத்தம்.
11. தூக்கம்.
12. வெடி வைக்கும் ஒரு சாதனம்.
13. தமிழ் பேசுவோர் என்பதால் வேற்றுமொழி பேசும் சில அதிகாரிகள் இது காட்டுகின்றனர்.
14. கப்பல்கள் தங்கி நிற்கும் இடம்.

சொல்ஜாலப் போட்டி இல - 7 *பதில்களை அனுப்பவேண்டிய முகவரி :*

**சொல்ஜாலப் போட்டி - 07**
**தமிழ்கேசரி,**
**3A, தர்மராஜமாவத்தை,**
**கொழும்பு-03.**

## குறுக்கெழுத்துப் போட்டி– 05 இன் முடிவுகள்

**இடமிருந்துவலம்**
01) மகாபாரதம்
07) தலைவி
16) பாகன்
20) பட்டம்
31) வம்பு
35) விடை

**மேலிருந்து கீழ்**
01) மதகு
02) காலை
03) பாவி
05) தங்கம்
16) பாடல்
20) பணம்
30) ஆடை

நூற்றுக்கணக்கான வாசகர்கள் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் பரிசு, பாராட்டு பெறுவோர் விபரம் வருமாறு:

**முதலாம் பரிசு**
**ரூபா 150/=**
கே.சாமினி
இல54/3,
கடல் காட்சி வீதி,
திருகோணமலை.

**இரண்டாம் பரிசு**
**ரூபா 100/=**
எம்.சீ.தஷ்ரீக்
65 குறிஞ்சாங்கேணி 02
கிண்ணியா.

**மூன்றாம் பரிசு**
**ரூபா 50/=**
ராமின் நம்புராஜா
பாலநகர்,
மூதூர் 02.

**பாராட்டுக்குரியவர்கள்**

சு.மகேசன்
15/1, லியோடி குறோஸ் வீதி,
நீர்கொழும்பு.

ந.இராஜரட்ணம்
பதுளை வீதி இராஜபுரம்,
மாவலை ஆறு கரடியனார்.

ஆர்.கோணன்
54, லேட்டன் லேன்,
நீர்கொழும்பு.

எஸ்.சுரேஸ்
03, புபுது டெக்ஸ்ரைல்,
புலத்கொகுபிட்டிய.

## சொல்ஜாலப் போட்டி 05ன் முடிவுகள்

**சரியான விடைகள்**
01. சம்பளம்
02. சட்டம்
03. சமிக்ஞை
04. சத்தியம்
05. சங்கமம்
06. சமபந்தி
07. சங்கீதம்
08. சமையல்
09. சந்தம்
10. சமயோசிதம்
11. சஞ்சலம்
12. சரி
13. சக்தி
14. சம்மட்டி

சரியான விடைகளை எழுதிய நூற்றுக்கணக்கான வாசகர்களில் பரிசுக்குரியவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிர்ஷ்ட சாலிகள்:

**முதலாம் பரிசு**
**ரூபா 150/=**
ஷர்மிளா காதர்
மின்ஹாத் கனிஷ்ட
வித்தியாலய விடுதி,
யோனகபுர,
திக்குவல்லை.

**இரண்டாம் பரிசு**
**ரூபா 100/=**
மகேஷ்வரி குமரன்
பெல்மோறல்,
அக்கரைப்பத்தனை.

**மூன்றாம் பரிசு**
**ரூபா 50/=**
எம்.ஜ.எம்.பாரூக்
கல்பிட்டி வீதி,
நுரைச்சோலை,
புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்**

க.கமால்தீன்
புன்னக்குடா வீதி,
ஏறாவூர் - 03.

ஜீவா கணபதி
"C"2/2 ,
எல்விட்டிகல தொடர் மாடி,
கொழும்பு 08.

எம்.எஸ்.அஹமட் இப்ராஹீம்
இல 59,
பெண்கள் பாடசாலை வீதி,
ஏறாவூர் 34.

ஹசீனா மொஹமட்
90/2, உயன்வத்தை,
தெவநாஹல.

வி.பிரபாகரன்
குருமன்காடு,
வவுனியா.

இணைக்கும் போட்டி
இல. **05** இற்கான சரியான
விடை :
**ஜொன்டி றோட்ஸ்**

சரியாக இணைத்து அனுப்பிய ஏராளமான வாசகர்களில் பரிசுக்குரிய அதிர்ஷ்டசாலி:
எஸ்.சுதாகர்
இல17A,
தவசி குளம்,
கண்டி வீதி,
வவுனியா.

*சும்மா ஒரு வானொலி பரிசுப் போட்டி இல.05 வானொலியை வென்ற வாசகர்:*
கே.சிவதாசன்
176, பிரதான வீதி,
நீர்கொழும்பு

# சுஜாதாவின் அம்பலம்

'கிரிக்கட் ஜோக்ஸ் இன்னும் இருக்கு' என்று மேலும் சில வாசகர்கள் ஈ மெயில் அனுப்பியபோதும் நம்ம கிரிக்கட் அணி நாடு திரும்பிவிட்டதால் கொஞ்ச நாளைக்கு கிரிக்கட்டை மறந்துவிட்டு வேறு விடயங்களைப் பார்ப்போம். இணையத்தில் வெளிவரும் இணைய இதழ்களில் சுஜாதா பொறுப்பேற்று நடத்தும் 'அம்பலம்' மிகவும் பிரபலமானதும் பயனுள்ளதுமான ஒரு வெப்சைட்டாகும். அம்பலத்தினுள் நுழைந்து பொறுக்கியவற்றில் ஒரு சாம்பிள் இது.... இன்னொன்று கடைசியாக.....

"இணையத்தில் சந்தித்த
மயிலே!
உன் பேர் எழுதியனுப்பு
ஒரு மெயிலே"

எப்படியிருக்கு? ஒரு தடவை நீங்களும் நுழைந்து வந்தால் பல உபயோகமான விடயங்கள் கிடைக்கும். இப்படி உபயோகமான விடயம் ஒன்றைத் தேடி தன் அம்மாவுக்குப் பரிசளித்த மகனின் கதை தெரியுமா உங்களுக்கு?

## கதை இதுதான்...

ஒரு அம்மாவுக்கு மூன்று மகன்மார். மூவரும் வெவ்வேறு நாட்டிலிருக்க அம்மா மட்டும் சொந்த நாட்டில் தனியாக வசித்து வந்தாள். அம்மாவுக்குப் பிறந்தநாள் வந்தது. மூத்த மகன் அழகான கார் ஒன்றைப் பரிசாக அனுப்பி வைத்தான். இரண்டாமவன் ஒரு பெரிய மாளிகையை அம்மாவுக்குப் பரிசளித்தான். மூன்றாவது மகனோ கொஞ்சம் வித்தியாசமாக ஒரு கிளியை அனுப்பி வைத்தான். கிளியென்றால் சாதாரண கிளி அல்ல. முழு இராமாயணத்தையும் பாடமாக்கி அப்படியே ஒப்பிக்கக் கூடிய ஓர் அபூர்வக் கிளி! பல கோடி கொடுத்து ஒரு ஏலத்தில் அதனை வாங்கி அப்படியே தன் அம்மாவுக்கு அனுப்பியிருக்கிறான்.

பிள்ளைகளின் பரிசுகளைப் பார்த்த அம்மாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. மூவருக்கும் தனித்தனியாக கடிதம் எழுதினாள் இப்படி....

மூத்தவனுக்கு: 'அன்பு மகனே! உன் காருக்கு நன்றி. ஆனாலும் இந்த வயசான காலத்துல நான் அதுல எங்கடா பயணம் போகப் போறேன்?'

இரண்டாமவனுக்கு: 'நீ வாங்கித் தந்த பங்களா எனக்கு ரொம்பவும் புடிச்சிருக்கு. ஆனாலும் தனியா இருக்கிற எனக்கு எதுக்கு அவ்வளவு பெரிய மாளிகை?'

மூன்றாமவனுக்கு: 'என் அன்பு மகனே! உனக்கு மட்டும்தான் அம்மாவின் ஆசைகள் தெரிஞ்சிருக்கு! எனக்கு கிளிக்கறி பிடிக்கும்னு உனக்கு எப்படித் தெரியுமோ தெரியாது. ஆனா நீ அனுப்பிய கிளி சுப்பர் டேஸ்ட். நன்றி'-

என்ன யோசிக்கிறீங்களா? இனிமேல் பரிசுகளை அனுப்பும் போது அதுல மறந்துவிடாம ஒரு குறிப்பையும் எழுதி வைக்கிறது நல்லதில்லையா? எதிலையும் எப்பவும் கவனமாகவும் விழிப்பாகவும் இருக்கணும். இல்லாட்டி கடந்த வருடம் இங்கிலாந்தில் நடந்தது போல உங்களுக்கும் நடக்கலாம்.

## அப்படியென்ன நடந்தது?

ஒரு பாதிரியார் 'ஆலயத்தைச் செப்பனிட தந்திடுவீர் நிதி' என்றார். ஏழைகளும், நடுத்தர மக்களும் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை ஒன்று திரட்டி 96 லட்சம் ரூபாய் திரட்டி பாதிரியார் கையில் கொடுத்தனர். சில வாரங்களின் பின் 'இங்கிலாந்தின் சீமான்கள்' என்ற தலைப்பில் வெளியான ஒரு பட்டியலில் பாதிரியாரின் சொத்து மதிப்பு 1000 கோடி ரூபாய் என்று இருந்தது. ஏழைகள் 'ஐயோ' என்று தலையில் கை வைத்தது தான் மிச்சம். 'கடவுள்' விடயம் 'களவு' விடயமாய் மாறிப்போனது!

இந்த நிகழ்ச்சியை ஒத்த ஆபிரிக்க ஜோக் ஒன்றுகூட உள்ளது. அது ஆபிரிக்காவில் மதம் பரப்ப வந்த பாதிரியார்களைப் பற்றியது. 'பாதிரியார்கள் எங்களை கடவுளிடம் அழைத்துப் போகின்றோம் என்றபோது எங்களிடம் நிலம் இருந்தது. அவர்களிடம் பைபிள் இருந்தது. நாங்கள் கடவுளைக் காண கண்களை மூடிக்கொண்டோம்.

பிறகு விழித்துக் கொண்டோம். அப்போது அவர்களின் பைபிள் எங்களிடம். எங்கள் நிலம் அவர்களிடம் என்றாகிவிட்டது. ஆபிரிக்கா வெள்ளையர்களிடம் கொள்ளை போய் விட்டது'

> கடைசியாக....
> அம்பலம் வெப்சைட்டின் கேள்வி பதில் பகுதியில்...
> கேள்வி : லஞ்சம் வாங்காத அரசு ஊழியர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?
> சுஜாதா : வழக்கொழியும் அபாயத்திலுள்ள பாதுகாக்க வேண்டிய உயிரினம்!!!

## துளிகள்

ஏ. டிரோன்

## படித்ததில் பிடித்தது


அ அருகில் 'ன்பு' இடு!
ஆணி அடிக்காமல் அடுத்தடுத்த அடி வை!
இன்று நேற்றாகும் நாளை!
ஈ!
உள் நாக்கிலிருந்தே உண்மை பேசு!
ஊரென்ன சொன்னாலும் கேள்-ஏன்??
எச்சில் படாமல் எண்ணிப் பழகு!
ஏணி பழம் பறித்துப் போடாது!
'ஐயோ' தலையிலென்ன கை? எடு!
ஒரே ஜாடை வறுமைக்கு!
ஓம் உச்சரித்தாலும் 'Ohm' அறி!
ஔவளவு தூரமா.....மலைக்காதே!
ஃ - புள்ளியென எள்ளாமல் கோடிழு கோலமே!


*'புதிய ஆத்திசூடி' எனும் தலைப்பில்*
*பார்த்திபன் எழுதியது*
*'கிறுக்கல்கள்' தொகுதியிலிருந்து.*


## நெட்டில் சுட்டவை

காதலுக்குக் கண்ணில்லை என்பார்கள்...ஆனால் நட்புக்குக் கூட கண்ணில்லைதான்! நம்பமாட்டீர்களா? படங்களைப் பாருங்கள்....














# வாழ்க்கை என்பது எதில் உள்ளது?

- ஏன் சிலர் மட்டும் ஒருமிப்பதில்லை?
- என்னதான் அவர்களிடம் பிரச்சினை?
- சின்ன விஷயத்தில் வீம்பு, விதண்டாவாதம்...
- கொண்டுபோய் விடுகிறது விபரீதத்தில்....

"இவளுக்கு இவன் தான்னு அன்னிக்கே ஆண்டவன் எழுதி வச்சிருப்பான், பாரேன்! தானா கல்யாணம் ஆயிடும்!"

"சே! எவ்ளோ ஜாதகம் பார்த்தோம், நூத்து நுணக்கி... பார்த்தும் இப்டி ஆயிடுச்சே....

"10 வருஷமா லவ் பண்ணித்தான் ஒண்ணு சேர்ந்தாங்க, என்னாச்சு அவங்களுக்கு? எல்லாம் மத்தவங்க கண்ணுதான்...."



இப்படி எத்தனை காலத்துக்கு தான் பலரும் சொல்லப் போகின்றனர் என்று தெரியவில்லை. வாழ்க்கையில் இருவர் ஒன்று சேர்ந்து அன்பாக, பாசமாக, விட்டுக் கொடுத்து, சின்னச் சின்ன சண்டை போட்டு, சின்னச் சின்ன உரசலில் பற்றும் காதல் தீயில் குளிர் காய்ந்து, ஒருவர் கோபப்பட்டால் அடுத்தவர் சாந்தப்படுத்தி, ஒருவருக்கு ஒருவர் எதிலும் குறைவு வராமல் அன்றாடம் பேலன்ஸ் ஷீட் தயாரித்து அடுத்த நாள் சரி செய்து அனுசரித்து போவதுதான்.

இதை எல்லாம் எந்த ஜாதகமும் கணிக்காது. எந்த கடவுளும் வரம் தரமாட்டார். இதற்கெல்லாம் அடுத்தவர் யோசனை தேவையில்லை. நம் மகிழ்ச்சிக்கு மகிழ்ச்சி கொள்வதும், துன்பத்திற்கு ஆறுதல் கூறிக் கொள்வதும், சிக்கலில் யோசனை கூறிக் கொள்வதும் அவரவர் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது தான் முக்கியம். அதில் தான் வாழ்க்கையின் சாரமே உள்ளது என்பதை இன்று வரையில் இன்னும் கூட பலரும் உணர்ந்து கொள்வதில்லை.

- போற்றிப் போற்றி பாதுகாக்க வேண்டிய நிஜமான இதம்களை அனுபவிக்க வேண்டிய இவர்களுக்கு ஏன் டாக்டர் மாத்ருபூதம் தேவைப்படுகிறார்?
- நீரோடை போல தெளிந்த வாழ்க்கையை நடத்த, இவர்களுக்கு ஏன் உறவினர்கள், நண்பர்கள் உதவி தேவைப்படுகிறது?
- வாழ்க்கை கோர்ட்டில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை தீர்க்க இவர்களுக்கு ஏன் வக்கீல், கோர்ட் உதவி தேவைப்படுகிறது?

ஏன்...? ஏன்..? ஏன்...?

இவர்களால் எதையும் புரிந்து கொள்ள முடியாததால்... இவர்களால் அவரவர் உணர்வை மதிக்கத் தெரியாததால்... இவர்களால் சின்ன சின்ன விஷயங்களில் விட்டுக் கொடுக்க முடியாத அளவு மனப் பக்குவம் வளராததால்.....!

கணவன் மனைவி இடையே சந்தோஷத்தை, பரஸ்பரம் புரிந்துணர்வோடு நடப்பதை, புரிந்துணர்வுக்கு இடம் கொடுப்பதை சொல்லிக் கொடுப்பது எது? யார்? மதமா? இனமா? உறவினர்களா? யாரும் இல்லை. மனம். இருவரின் ஒரு மித்த மனம். ஜாதகம் பார்த்த திருமணம் நிலைத்ததா? லவ் பண்ணிய மேரேஜ்தான் இனிக்குதா? என்கிற வாதமே தேவையில்லை.

திருமணத்துக்கு முன் காதலித்த மனங்கள், திருமணத்திற்கு பின் ஒருமிக்க முடியாத காரணம் என்ன? ஜாதகம் சொல்லியபடி திருமணத்திற்கு பின் செழிக்கவில்லையே வாழ்க்கை. யாரை குற்றம் சொல்வது...!

எனவே...

- *வாழ்க்கை என்பது ஜாதகத்தில் இல்லை...*
- *வெறும் காதலில் இல்லவே இல்லை...*
- *மனதில், பகுத்துணர்வில், புரிந்துணர்வில் தான்!.*
- *மன"தில்" இருந்தால் வாழ் (வது) "கை"யில் தான்!*

**மணவை அசோகன்**

## பாசிப்பருப்பு பொரியல் கறி

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| வறுத்துக்குற்றிய பாசிப்பருப்பு | - 1/2 சுண்டு |
| பச்சை மிளகாய் (வெட்டியது) | - 2 மேசைக்கரண்டி |
| வெட்டிய வெங்காயம் | - 2 மேசைக்கரண்டி |
| மிளகாய்த்தூள் | - 2 1/2 தேக்கரண்டி |
| சரக்குத்தூள் | - 1 தேக்கரண்டி |
| தேங்காய்ப்பால் | - 1 சுண்டு |
| உப்பு | - சுவைக்கேற்ப |
| கறிவேப்பிலை | - 2 நெட்டு |
| எலுமிச்சம் புளி | - 1/2 தேக்கரண்டி |
| பொரிப்பதற்கு தேங்காய் எண்ணெய் | - தேவையான அளவு |

**செய்முறை:**

பருப்பை மூன்று மணிநேரம் ஊறவிட்டுக் கழுவி, வடித்து உப்புச் சேர்த்து அம்மியில் இறுக்கமாகவும் கரகரப்பாகவும் அரைத்து எடுக்கவும். பின்னர் இதனை இரண்டாகப் பிரித்து தடிப்பமாக ரொட்டியினைப் போல் தட்டி எண்ணெய் பூசிய இரண்டு இடியப்பத் தட்டுக்களில் வைத்து, ஆவியில் நன்றாக அவித்து எடுக்கவும். ஆறியவுடன் கனமுள்ள சிறிய துண்டுகளாக வெட்டி தேங்காய் எண்ணெயில் சிவக்கப் பொரித்து வடித்து கொள்ளவும். அதே எண்ணெயில் பச்சை மிளகாய், வெங்காயம் என்பவற்றைப் பொரித்து வடித்து பிறகு பொரித்தவற்றை ஒன்றாக ஒரு சட்டியில் போட்டு, தேங்காய்ப்பாலை விட்டு மிளகாய்த்தூள், சரக்குதூள், உப்பு என்பவற்றைப் போட்டு கலக்கி வேகவிடவும். இதனை இடையில் ஒரு முறை புரட்டிவிட்டு இறுகியதும் கருவேப்பிலையைப் போட்டு இறக்கி, எலுமிச்சம் புளியை விட்டுக் கொள்க.

எஸ். றூபி,
தாழ்வுபாடு வீதி,
மன்னார்.

## முகத்தைப் பாதுகாக்க...

சிலர் ஃபேஷியல் செய்தவுடன் கண்டபடி வெயிலில் திரிவார்கள். இது கட்டாயம் தவிர்க்கப்பட வேண்டும். ஃபேஷியல் செய்வதோடு முகத்தைப் பாதுகாக்க பின்வருவனவற்றையும் செய்ய வேண்டும்.

- நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும்.
- ஆழ்ந்த நித்திரை கொள்ள வேண்டும்.
- வெயிலில் போகும் போது சன்ஸ்கிரீன் லோஷன் தடவிக் கொள்வது நல்லது.
- உணவில் அதிக உப்பைத் தவிர்க்கவும்.
- கொழுப்பில்லாத உணவை உண்ணுங்கள்.
- காய்கறி, பழவகைகளை தினமும் சாப்பிடுங்கள்.
- தினமும் உடற்பயிற்சி செய்வது அவசியம்.

## வெளிச்ச நகரத்தின் இருட்டுக் கதைகள் 07

# கொன்றாலும் சம்மதியேன்

ஜெகஜோதியாய் வெளிச்சம் வீசும் இந்த நகரத்தில்தான் அவள் பிறந்தாள். விபரம் தெரிந்த வயதில், "என் தந்தை யார்?" என்று அவள் தாயிடம் கேட்கவில்லை. தனக்கு தந்தை பல பேர் என்பது தாய் சொல்லாமலேயே அவளுக்குப் புரிந்து போனது. ஏனெனில், அந்தத்தாய் தனது ஒன்பது வயதில் கூட விபச்சாரத்தைத் தானே தொழிலாகக் கொண்டிருக்கிறாள். அதனால் தனக்குப் பலபேர் தந்தையாக இருந்திருப்பார்கள் என்று அவளால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

அந்த ஒன்பது வயதுச் சிறுமியின் பெயர் சோபனா. பெயருக்கேற்றாற் போல் சோபனமாகத் தான் அப்போது இருந்தாள்.

அம்மாவைத்தேடி தினம் இரண்டு மூன்று பேர் வருவார்கள். அப்போதெல்லாம் இவள் கையில் ஐந்தோ, பத்தோ கொடுத்து வெளியே அனுப்பிவிடுவாள் தாய். சோபனா விடயத்தைப் புரிந்து கொண்டு வெளியே போய் ஊர் சுற்றிவிட்டு பல மணி நேரம் கழித்துத்தான் வீட்டுக்குப் போவாள்.



சோபனாவை பாடசாலைக்கு அனுப்பவில்லை தாய். அதனால் அவளுக்கு அ,ஆ கூடத் தெரியாமலிருந்தது.

ஒருநாள் சோபனா வயதுக்கு வந்துவிட்டாள். அப்போது அவளுக்கு பன்னிரெண்டு வயது. தன் "வியாபாரத்திற்கு" உதவியாக ஒருத்தி வந்துவிட்டாளே என்று மகிழ்ந்தாள் தாய்.

சோபனாவின் தாய்க்கும் உலக அறிவு கொஞ்சம் கூடக் கிடையாது. அவளுக்குத் தெரிந்ததெல்லாம் விபசாரம்தான். ஒருவேளை, அவளது பெற்றோர்கள் அவளைப் படிக்க வைத்திருந்தால் இந்த நரகத் தொழிலுக்கு அவள் வந்திருக்கமாட்டாள்.

சோபனாவின் தாய் எதிர் வீட்டு இளைஞனை பதினாலு வயதில் காதலித்துப் பின்னர் அவன் மூலம் கற்பிழந்து, அவன் கைவிட்டுச் சென்ற பிறகு வேறொருவனுடன் தொடர்பு கொண்டு, அவனோடும் உடலைப் பங்கு போட்டு, பின்னர் அவனும் கைகழுவிச் செல்ல, இன்னொருவனுடன் உறவு கொண்டு... ஈற்றில் விபச்சாரியாகி விட்டாள்!

"இதிலென்ன தப்பிருக்கிறது? செத்தபிறகு இந்த உடம்பை மண்தானே தின்னப் போகிறது. அதை மனுசன் திண்ணுட்டுப் போகட்டுமே!" என்ற "பழைய வேதத்தை"ப் பாடமாக்கி வைத்திருந்த சோபனாவின் தாய் தான் விபசாரம் செய்து வாழ்வதைப் பற்றி துளிக் கூட வருந்தியது கிடையாது.

இப்போதுதான் கருத்தடை மாத்திரைகள், ஊசிகள் ஏராளம் வந்துவிட்டனவே. எனவே, தப்பித்தவறி -தனது கவனயீனத்தால் பிறந்துவிட்ட சோபனாவுக்குப் பின்னர் குழந்தையைப் பெற்றுக் கொள்ளாமலிருப்பதில் அவள் எப்போதும் கவனமாகவே இருந்தாள். எது தவறினாலும் மூன்று மாதங்களுக்கொரு முறை கர்ப்பத் தடை ஊசி போடுவதிலிருந்தும் அவள் தவறுவதே கிடையாது.

ஒரு நாளைக்கு இரண்டு, மூன்று ஆண்களைச் சுமந்து ஆரம்பத்தில் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபாய்கள் சம்பாதித்த அவள், தற்போது இருநூறோ, முந்நூறோதான் உழைக்கிறாள். அவளின் செலவுக்கு இது போதவில்லை. எனவே, சோபனா எப்போது வயதுக்கு வருவாள் என்று அவள் காத்துக் கொண்டே இருந்தாள். இப்போது சோபனா வயதுக்கு வந்து விட்டாள்.

சோபனாவை முதன் முதலாக யாருக்குக் "கொடுக்கலாம்" என்று யோசித்தாள் தாய். இதுவரை தன்னைத் தீண்டிய எவனுக்கும் சோபனாவைத் தாரை வார்ப்பதை அவள் விரும்பவில்லை. எனவே, யாராவது ஒரு புதியவனுக்கு, கொழுத்த பணத்திற்குச் சோபனாவை "விற்பது" என்று தீர்மானம் செய்தாள்.


(மிகுதி அடுத்த வாரம்)

## சினி செய்திகள்

# பள்ளிக்கூட மாணவன் தலையை மொட்டை அடித்த அலெக்ஸ்!

அந்த கட்டுப்பாடு மிகுந்த பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியராக இருந்து வருபவர் வடிவேல். அதே பள்ளிக்கூடத்தின் பி.டி. மாஸ்டராக பணியாற்றுபவர் அலெக்ஸ். கட்டுப்பாடு என்கிற பெயரில் வரம்புக்கு மீறிய தண்டனையை மாணவிகளுக்குகொடுப்பது வடிவேலின் வழக்கம். கழிவு அறையை சுத்தம் செய்வது, ஆய்வுகூடத்தில் கைதவறி உடைந்த பொருட்களையும், சிதறிய திரவங்களையும் சீருடையைக் கழற்றி சுத்தம் செய்ய வைப்பது. போன்ற செயல்களில் வடிவேல் ஈடுபட்டு வந்தார். இந்தக் கொடுமைகளைத் தாங்காமல், ஒரு மாணவி திராவகத்தைக் குடித்து உயிரை விடுகிறாள். இதற்கெல்லாம் உடந்தையாகவும், தலைமை ஆசிரியரின் கைப்பாவையாகவும் இருந்து வருகிறார் பி.டி. மாஸ்டர் அலெக்ஸ். இருவரும் மாணவ, மாணவிகளை அளவுக் கதிமாகத் தொந்தரவு செய்து வருகிறார்கள். பத்தாம் வகுப்பு மாணவன் ஒருவன், ஃபங்க் வைத்த தலையுடன் பள்ளிக்கு வருகிறான். முதல் நாள் எச்சரிக்கை விடும் அலெக்ஸ், அடுத்த நாள் உள்ளே நுழைந்த மாணவனை துரத்திப் பிடித்து, அவன் தலை முடியைப் பிடித்து இழுத்து நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியரின் மத்தியில் அமரவைத்து மொட்டையடிக்கிறார்.

அந்த மாணவனோ, பரிதாபமாக ஏங்கி ஏங்கி அழுகிறான். மொட்டை அடித்த முடியை கையில் பிடித்துக் கொண்டு நையாண்டியுடன் எல்லோருக்கும் இதே கதிதான் என எச்சரிக்கை விடுகிறார். பொறுமை இழந்த மாணவ, மாணவியர் வெகுண்டு எழுந்து எல்லை மீறுகின்றனர். வடிவேலுவையும், அலெக்ஸையும் பழிக்குப் பழி வாங்குகின்றனர். மாணவர்கள் பொங்கி எழுந்ததால் பள்ளி நிர்வாகத்தை சூழ்ச்சிக் கும்பல் கைப்பற்றத் திட்ட மிடுகின்றது. இறுதியில் சதி முறியடிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆசிரியர்கள் அதிக கண்டிப்புடன் நடக்கக் கூடாது என்றும், மாணவர்களும் படிக்க வேண்டிய நேரத்தில் வேறு செயல்களில் ஈடுபடக்கூடாது என்கிற கருத்தை மையமாகக் கொண்டும் உருவாகும் இந்தப் படம் எக்சல் எண்டர்பிரைசஸ் வழங்கும் இளசு... புதுசு... ரவுசு...! வடிவேல் இரட்டை வேடங்களில் நடிக்கும் இந்தப்படத் தில் தீபக், ரமேஷ், ஈஸ்வர் பட்டன், கரிச்சான், சுஜா, பாயல், கரீஷ்மா, ஷிபானி, பாக்யலட்சுமி, லேகாஶ்ரீ ஆகியோரும் நடிக்கின்றனர். ஒளிப்பதிவு- வைரமோகன், இசை - பிஜு.



தருவது! கோடம்பாக்கம் கோபி

# புதுசான 'த்ரீ' நடிகையைப் புரட்டி எடுத்த நடிகர்

"லேசா லேசா" என்று சொன்னால் என்ன அர்த்தம்? மெதுவாக, மெதுவாக என்றுதானே அர்த்தம்? இதற்கேற்ப மிக அண்மையில் கோடம்பாக்கத்தில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது.

"லேசா லேசா" என்று சொல்லிக் கொண்டு ஒரு படம் தயாராகிக் கொண்டிருந்தது. படத்தின் நாயகி, சமீபத்தில் திரையுலகுக்குள் நுழைந்து இளமையினாலும், கவர்ச்சியினாலும் கலக்கிக் கொண்டிருக்கத் "த்ரி" நடிகை. "ஷா" என்ன அழகு என்று அவரைப் பார்த்துப் பாராட்டாதவர்கள் இல்லை.

படத்தின் நாயகரும் புதியவர்தான். நாலைந்து படம் நடித்திருக்கும் கட்டழகன்தான். **'12B'** இலக்க பஸ்ஸில்தான் முதன்முதலில் ஏறினார். ஆனால் வந்த வேகத்திலேயே சிநேக நடிகையின் உதட்டைக் கடித்துவிட்டார் என்று பரபரப்பாகப் பேசப்பட்டார்.

"லேசா லேசா"வில் இந்த "திரி" நடிகைக்கும், **'12B'** நடிகருக்கும் நாலைந்து டூயட்டுக்கள் உண்டு. எல்லாமே மிக நெருக்கமாக நடிகையைக் கட்டிப் பிடித்தாடும் டூயட்டுக்கள்.


"எவ்வளவுக்கு உன் திறமையைக் காட்ட முடியுமோ, காட்டு!" என்று பச்சைக் கொடி காட்டி விட்டார் டைரக்டர். இது போதாதா நடிகருக்கு.

ஒவ்வொரு மூவ்மெண்டிலும் நடிகையின் இடுப்பு, மார்பு, பின்புறம், தொடை என்று தடவி, நடிகையைப் படாதபாடு படுத்திவிட்டார்.

ஒரு கட்டத்தில் நடிகர் நடிகையின் பின்புறம் நின்று அவரது இடையைச் சுற்றி வளைக்கும் நடிப்பின் போது, "திரி" நடிகையின் வழுவழுப்பான வயிற்றைப் பிசைந்தெடுத்துவிட்டார். நடிகைக்கு வலித்தாலும், சற்று நேரம் இன்பத்தில் கண்கள் மூடி நின்றிருக்கிறார்.

நடிகரும் தன்னிலை மறந்துவிட்டார். டைரக்டர் "கட்கட்" சொன்ன பின்னரும் கூட நடிகர், நடிகைபிரியவே இல்லை. பின்னர்தான் டைரக்டர் விசில் ஊதி அவர்களைப் பிரித்திருக்கிறார்.

"திறமையைக் காட்டு!" என்று சொன்னால், பையன் நடிப்பில் காட்டாமல் இம்மாதிரி விஷயங்களில் காட்டுறானே" என்று சலித்துக் கொண்டாராம் டைரக்டர்.



இளசு... புதுசு... ரவுசு...
தீபக் - பாயல்

# 'ஆண் பெண் அற்புதம்' என்ற பெயரில் ஒரு தமிழ் திரைப்படம்

வயது வந்த ஆண், பெண், மாணவ, மாணவியர் அனைவரும் பார்க்க வேண்டிய இப்படம் சென்சாரால் கல்வி சம்மந்தமான சிறப்புச் சான்றிதழ் பெற்ற ஒரே படம். நடிகர்கள்: ராஜ், செந்தில், தர்மேந்தர், பவீன், அனிதா.

இசை: சங்கேஷ். கேமிரா: ரமேஷ். கதை. திரைக்கதை. வசனம். இயக்கம்: ராஜ், தயாரிப்பு: சேலம் ரகுராஜ்.

**கதைச்சுருக்கம்:-**

கோடி கோடியாய் அதிசயங்கள் நம் அண்டத்தில் கொட்டிக் கிடக்கின்றன. அவற்றில் எல்லாம் முதல் அதிசயம் நமது பூமிதான்!

ஏன்?

பூமியில் மட்டும்தான் உயிர் ஜீவன்கள் இருக்கின்றன. இந்த ஜீவன்களில் லட்சக்கணக்கான கைகள் இருக்கின்றன. அவற்றில் முதல் அதிசயம் மனிதன்தான்!



ஏன்?

அவனுக்கு மட்டும் தான் பகுத்தறிவு இருக்கிறது. அவனுள்ளும் வித விதமான அதிசய உறுப்புக்கள். பார்க்க கண், சுவாசிக்க மூக்கு, பேச வாய். நடந்திட கால்கள், புதிய பொருட்களை செய்திட கைகள். ஆனால், எந்த மனித உறுப்பாவது உயிருள்ள புதிய பொருளை செய்ய முடியுமா?

முடியும்!

அவைகள் தான் நமது ஆண்குறி! பெண்குறி! ஆனால், அவைகள் பற்றி நாம் தெரிந்து கொள்வதில்லை. செக்ஸ் என்று பெயர் வைத்து. அசிங்கம் என்றும் ஆபாசம் என்றும் ஒதுக்கித்தள்ளி, வாழ்க்கையில் ஓராயிரம் துன்பங்களை ஏற்படுத்திக் கொள்கிறோம். எயிட்ஸ் போன்ற நோய்களிடம் சிக்கிக் கொண்டு அவஸ்தைப்படுகிறோம். செக்ஸ் மனித குலத்திற்கு தேவையான ஒன்று. அது இன்றி உலகத்தில் எந்த உயிரும் இல்லை. அதனால் செக்ஸைப்பற்றி நாம் முழுமையாகப்பேசி, விவாதித்து ஒரு பாடத்தைப் போன்று தெரிந்து கொள்ளவேண்டும்.

இதன் அடிப்படையில் இப்படத்தில் பின்வரும் கதைகள் சொல்லப்படுகின்றன.

1. ஆனந்த் நன்றாகப் படித்தவன். ஆனால் செக்ஸைப் பற்றி தவறான எண்ணங்கள் கொண்டு இருப்பவன். அதனால் அவன் தன் உயிருக்கு உயிரான ராதிகாவை இழந்தான். ஆனந்த் கதை மூலமாக ஆண், பெண் இன உறுப்புக்களின் உள், வெளிப்பாகங்களையும். கன்னித்திரை என்றால் என்ன? "சுன்னத்" ஏன்றால் என்ன? அதன் நன்மை தீமைகள் என்ன? மாதவிடாய் எப்படி வருகிறது? எதனால் நின்று போகிறது? ஆண் குழந்தை, பெண் குழந்தை எவ்வாறு பிறக்கிறது? அதற்கு யார் காரணம்? போன்ற செய்திகள்.
2. சுரேஷ், ஷில்பா அன்பான அருமையான ஜோடி. சுரேஷ் செக்ஸைப் பற்றி சரியாகத் தெரிந்து கொள்ளாததால், அவனுடைய கெட்ட நண்பனை அளவுக்கு மீறி வீட்டிற்குள் அனுமதிக்கிறான். தன் அழகான வாழ்க்கையை இழக்கிறான். இதன் மூலமாக உடல் உறவின் அறிவியல் விளக்கம். அதன் நிறை குறைகள். செக்ஸ் பற்றிய நமது முன்னோர்களின் எண்ணம். தற்போதைய நிலவரம் பற்றி மருத்துவர்களின் கூற்று.
3. தேவதை போன்ற அம்பிகா தன்னிடம் உள்ள செக்ஸ் குறைபாட்டை தன் கணவரிடமோ அல்லது மருத்தவரிடமோ சொல்லி சரிப்படுத்தாமல் மறைத்துவிடுகிறாள். நாடி வரும் கணவனை எரிச்சல் படுத்துகிறாள். இதைப் பார்த்த வேலைக்காரி. தவிக்கும் முதலாளியைத் தன்வசப்படுத்துகிறாள். முடிவு, வேலைக்காரி வீட்டுக்காரியாகிறாள். வீட்டுக்காரி வேலைக்காரியாகிறாள். இதன் மூலமாக பெண்கள் செக்ஸ் விஷயத்தில் தெளிவாகவும், அது வாழ்வில் ஒரு பெரும் அங்கம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், மார்பக புற்று பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.
4. சிவா நல்லவன், உத்தமன், அவன் வேலை நிமித்தமாக வெளியூர் சென்றபோது, ஒரே ஒரு முறை தவறிவிடுகிறான். விதி! எயிட்ஸ் அவனுக்காகக் காத்திருந்து கவ்விக் கொள்கிறது.

அவனை மட்டுமா? மனைவி, பச்சிளங் குழந்தையையும் பலி கொள்கிறது.


அய்யோ எயிட்ஸ் இவ்வளவு கொடியதா? எயிட் சின் முழு விளக்கமும், ஒழுக்கமான பழக்கம் இருந்தால், எயிட்சை விரட்டலாம் என்ற பாடமும் அழகாக சொல்லப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் செக்ஸ் எஜுகேசன் அழகாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. எந்த செக்ஸ் பிரச்சனையானாலும் உடனே மருத்துவரை நாடி நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

## மினிமா

* நடிகை ரதி சைடுபிஸினஸில் இறங்கிவிட்டார். ஷங்கரின் "பாய்ஸ்" ஹீரோயின் ஹரிணிக்கு டப்பிங் வாய்ஸ் தருகிறார். இருபது பேர் போட்டி போட்டதில் ரதிக்கு சான்ஸ்!
* சரத்குமார் புதிதாக ஒயிட்கலர் பென்ஸ் வாங்கியிருக்கிறார்.
* மும்தாஜின் சொந்தப் படத்தில் அவரோடு சோனா, ஊர்வசி பட்டேல், அபிநயஶ்ரீ, சிந்தூரி நடிக்கிறார்கள். கவர்ச்சி மழைதான்.



# 'அன்பு' கதாநாயகன் ஆதித்யா


ஆதித்யா

கன்யாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆதித்யா. ஆஸ்திரேலியாவில் எம். பி. ஏ. படித்தவர். குன்னூரில் தன் பள்ளிக் கல்வியை முடித்தவர்.

ஆறடி உயரமும், 80 கிலோ எடையும் கொண்ட இவர், தளபதிராஜ் இயக்கிய 'அன்பு' படத்தில் கதாநாயகனாக நடித்தவர். 'அழகி' தயாரித்த உதயகீதாவின் அடுத்த படம் இது.

**ஒரு பிளாஷ் பேக்:**

பள்ளியிலும், கல்லூரியிலும் மிகச் சிறந்த மாணவன் என்ற தகுதியைத் தொடர்ந்து பெற்று வந்தவர் ஆதித்யா. பிறகு மலேசியாவில் சில ஆண்டுகள் தன் குடும்ப பிஸினஸான சா∴ட்வேர் தொழிலில் ஈடுபட்டிருந்தார். இப்போது சினிமாவில் நடிப்பதற்காகவே பிஸினஸை தன் சகோதரனிடம் ஒப்படைத்திருக்கிறார்.

கல்விக் காலங்களில் எழும் கலை. இலக்கிய ஈடுபாட்டை அதற்குப் பின்னரும் தொடந்தவர் இவர். ஆனால், நல் நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு தொழிலை விட்டு, சினிமா துறைக்கு முழுமையாக வந்துவிடுவார் என்று இவர்கூட எதிர்பார்க்கவில்லை. ஏனெனில் இவரைக் கைதூக்கிவிட, திசைகாட்டக் கூட இவருக்கு சினிமா துறையில் யாரையும் தெரியாது.

ஆனால், சினிமா ஆர்வம் மட்டும் குறையவில்லை. N.A.AI அசோசியேஷனுக்காக வெளிநாடுகளில் பல கலை நிகழ்ச்சிகள் மூலம் தனது திறமையை வெளிப்படுத்தி இருக்கும் இவர் சினிமா வாசல் தனக்காகத் திறக்காதா என்று ஏக்கத்துடன் காத்திருந்தார் பல ஆண்டுகள்.

ஆதித்யா தன்னுடைய புகைபட ஆல்பத்தை சினிமா உலகில் சிலரிடம் உலவவிட்டார். 'அன்பு' பட இயக்குநர் தளபதிராஜ் புகைப்படங்களை பார்த்து இவரை அழைத்தார். இவரை பார்த்தவுடனையே, 'நான் மனதிற் கொண்டிருக்கும் கேரக்டருக்கு மிகவும் பொருத்தமானவராக இருக்கிறீர்கள்' என்றார். அவர் இவரிடம் அடுத்தபடி சொன்னதுதான் இவருக்கு பிரமிப்பாக இருந்தது. படப்பிடிப்பு துவங்க சில நாட்கள் இருப்பதால், அதுவரை நன்றாக சாப்பிட்டு, நன்றாக தூங்கி, கொஞ்சம் சதை போட பாருங்கள். எடுப்பான ஒரு பணக்காரக் களை அந்த கேரக்டருக்கு தேவைப்படுகிறது என்பதால் எடை கூடி வருவதை பற்றிகூட கவலைப்படாமல் சற்று பெருத்துவிட்டார். சினிமா சான்ஸ் போய்விடக்கூடாதல்லா?

**ஆதித்யா சொல்கிறார்.**

"இப்போது படம் முடிந்த பின் மீண்டும் இளைத்து விட்டேன். பழைய 80 கிலோவுக்கு வந்துவிட்டேன். சினிமாவில் இப்படி சிலவற்றை இழக்கவும், ஏற்கவும் வேண்டி வரும் என்பதை முதல் படத்திலேயே தெரிந்து கொண்டேன்."

"ஊட்டியில் எனது முதல்நாள் படபிடிப்பு நடந்தது. அதே ஊட்டியில் நண்பர்களுடன் சுற்றித் திரிந்த பள்ளி நாட்களின் நினைவுகள் திரும்பின. என் முதல் ஷாட், நிச்சயம் வெற்றிகரமாக முடித்துவிடுவேன் என்று மனம் சொல்லியது. ஷாட் முடிந்ததும் இயக்குநர், காமெடியன் வடிவேல், கேமிராமேன் நித்யானந்தன், இணை இயக்குநர் விஜய் சங்கர் மற்றும் படப்பிடிப்பு குழுவினர் எல்லாருமே பாராட்டி, தனித்தனியே வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். இது எனக்கு மேலும் உற்சாகத்தைத் தந்தது."

"திரையில் என்னை பார்த்தவுடன் என் நலன்விரும்பிகளின் எதிர்பார்ப்பை ஈடுகட்டிவிட்ட சந்தோஷம் எனக்கு ஏற்பட்டது. நண்பர்கள் பத்திரிகையாளர்கள், சினிமாத் துறையைச் சேர்ந்தவர்கள் எல்லாருமே என் நடிப்பையும். என் கதாபாத்திர அமைப்பையும் வெகுவாகப் பாராட்டினார்கள். என்னைத் தெரியாதவர்களும் கூட தேடிவந்து பாராட்டியது. எனக்கு பெருமையாக இருந்தது. அதன் பலனாக சில அழைப்புகள்.... அடுத்த படங்களுக்கான அழைப்புகள்.

எல்லாவற்றையும் ஒப்புக்கொள்வேனா? "எனக்கு கதாநாயகனாகத்தான் நடிக்கவேண்டும் என்ற கட்டாயக் கொள்கை எதுவுமில்லை. வில்லனாக, கேரக்டர் ரோல்களில், இரண்டாவது கதாநாயகனாக எப்படி வேண்டுமானாலும் நடிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால், 'அன்பு' படம் போல, படத்தில் 'சொன்னால் தெரிகிற' பாத்திரப் படைப்பாக இருக்க வேண்டும் என்று மட்டுமே எதிர் பார்க்கின்றேன். ஒரு நடிகனை உருவாக்குவது இயக்குநர் தான். அவனுக்கு பரிசுகளும், விருதுகளும் பெற்றுத் தருவது அவன் ஏற்கும் கேரக்டர்கள் தான். எனவே இயக்குனர் யார் என்று மட்டுமே பார்த்து நான் படங்களை ஒப்புக்கொள்வது என்ற கட்டுப்பாட்டை மட்டுமே கொண்டிருக்கிறேன்.

நல்ல நடிகர் ஆதித்யா. எந்த விதமான ரோல்கள்ளையும் உயிர்ப்பிக்கும் நடிப்புத்திறன் கொண்டவர்" - என்று நீங்கள் எல்லாரும் பாராட்ட வேண்டும். என்ற லட்சியத்தோடு என் நடிப்புத் திறமையைப் பெருக்கிக் கொள்ள பாடுபட இருக்கிறேன். அதற்கு வழி வகுக்கும் வண்ணம், என்னை அரவணைக்க வேண்டும், பாராட்டி தட்டிக் கொடுக்கவேண்டும் என்று மட்டுமே இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதேநேரம் அளித்த ஆதரவிற்கு பத்திரிகை நண்பர்களுக்கு என் இதய பூர்வமான நன்றியை சொல்லிக் கொள்வது என் கடமையென உணர்கிறேன்" என்றார்.

# பெட்டிக்கடை வைக்கப் போன மணிபாரதி "அன்பே அன்பே" படத்திற்கு டைரக்டரானார்!



காங்கேயம் அருகிலுள்ள பழைய கோட்டை என்ற ஊரில் கோடம்பாக்கமே குழுமியிருந்தது. சிவகுமார் மன்றாடியார் என்பவரின் அரண்மனை போன்ற வீட்டில் ஒரு மாதமாக இடைவிடாமல் ஷூட்டிங். ஏ.வி.எம்.மின் "அன்பே அன்பே" மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் கும்பல்தான். ஷூட்டிங்கைச் சுற்றி ஒரு கும்பல். விவேக்கையும் நம்பியாரையும் சுற்றி தாய்க்குலங்கள், மணிவண்ணன் செந்திலைச் சுற்றி ஒரு பத்துப்பேர். ஷர்மிலி, தலைவாசல் விஜய்யைச் சுற்றி சிந்து, சந்தோஷி என ஒரு பட்டாளம். இதைத்தவிர, கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் கோஷ்டிகளுக்கு மத்தியில் டான்ஸ்மாஸ்டர் "ஓ... போடு" அசோக்ராஜ், ஷாம், இயக்குனர் மணிபாரதி.

"என் ராசா... படத்துல டக்கு... டக்குன்னு வசனம் பேசி சிரிக்க வைக்கிறீயே... யார் ராசா உனக்கு சொல்லித் தர்றது?"

"அய்யே... அவியங்களுக்குத் தானா மண்டையில் தோணும், ஆத்தா..."

விவேக்கை நோக்கி மூதாட்டி கேட்ட கேள்விக்குத் தானாக முன்வந்து பதில் சொன்னது ஒரு பாவாடை தாவணி. ஜனங்களின் கலைஞன்! வேறென்ன சொல்ல?

"ச்சீய்..." யாரோ ஒரு பெண் வெட்கத்துடன் குரல் கொடுக்க... சட்டென்று திரும்பினேன். பெரியவர் நம்பியாரைச் சூழ்ந்து நின்றிருந்தது பெண்கள் பட்டாளம். ஆனாலும் பெரியவருக்கு குசும்பு அதிகம். நொடிக்கு ஒரு "பலான" ஜோக்கை உதிர்த்துக் கொண்டிருந்தார். இளமை திரும்புகிறதா நம்பியார் சார்?



"அண்ணே போங்கு ஆட்டம் ஆடாதீங்கண்ணே... உங்களுக்கு வேணா கமிஷன் தர்றேன்..." செந்திலின் கெஞ்சல் மணிவண்ணனிடம் எடுபடவில்லை. "ஆ... ஆ... அய்..." என தாடிக்கு மத்தியில் தெரிந்த தன் முகத்தை இப்படியும் அப்படியுமாக அசைத்து செந்திலை வெறுப்பேற்றிக் கொண்டிருந்தார் மணிவண்ணன்.

விஷயம் வேறொன்றுமில்லை. சீட்டாட்டம் ஆடும் போது செந்திலின் கரங்கள் நடுங்க ஆரம்பித்தால் "செட்" சேர்ந்துவிட்டதென்று அர்த்தமாம். ஸோ, செந்திலாக ஆட்டத்தை முடிப்பதற்குள் மணிவண்ணன் மற்றவர்களிடம் கண்களால் பேசி ஆட்டத்தை டிக்ளேர் செய்து விடுவாராம். செந்தி லின் பணம் பணால்! என்னே மணிவண்ணனின் கண்டுபிடிப்பு?!

இங்கே சீட்டாட்டம் என்றால் ஷர்மிலி அண்ட கோவிடம் பரமபதம்! ஷர்மிலி டைஸை உருட்டிவிட்டார். உடனே "தலைவாசல் விஜய்யும் சந்தோஷியும் கடவுளிடம் கூட்டுப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தனர். பெரிய பாம்பில் ஷர்மிலின் காயின் இறங்க வேண்டுமாம்! என்னே நல்ல எண்ணம்!



இந்த கோஷ்டிகளுக்கு இடைஞ்சல் தராமல் ஷாமுக்கு மூவ்மெண்ட்ஸ் கற்றுத் தந்தார் அசோக்ராஜ். நடுவில் ஷர்மிலியும் இணைந்து கொள்ள... ஆட்டம் களை கட்டியது.

இயக்குனர் மணிபாரதி சொன்னார்.

தனிப்பட்ட சந்தோஷத்தை விட குடும்ப சந்தோஷம்தான் முக்கியம் என்று நினைக்கும் இளைஞனின் வாழ்வில் நடக்கும் சம்பவங்கள்தான் "அன்பே அன்பே". ஒரு கூட்டுக்குடும்பத்துக்குள் ஷர்மிலி நுழைகிறார். கதையின் டர்னிங் பாயிண்ட் அது... ஆச்சி மனோரமாவும், பெரியவர் நம்பியாரும் புகுந்து விளையாடுகிறார்கள். இந்த படத்தில் செந்திலுக்கு ஜோடியாக நடிகை சிந்துவை காமெடி செய்ய வைத்திருக்கிறேன்..." என்றார்.

"நாகை பொன்னி" என்னும் புனைப்பெயரில் பத்திரிகைகளில் வாசகர் கடிதங்களும் துணுக்குகளும் சிறுகதைகளும் எழுதியவர் தான் இந்தமணிபாரதி. சினிமாவே வேண்டாம் என்று வெறுத்து மனைவியின் நகைகளை அடகு வைத்து பெட்டிக்கடை தொடங்கலாம் என்று இவர் முடிவு செய்த நேரத்தில்தான் இந்த படவாய்ப்பு வந்ததாம்.

அட சினிமாக்கதையை விட இந்தக் கதை நல்லாயிருக்கே!

# கண்களுமான ஹாஷிம் உமர் (10)

**ஒரு குறிப்பு: கடந்த வாரம் கண்களுமான ஹாஷிம் உமர் என்னும் இத் தொடரின் இலக்கம் 06 என்று தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. உண்மையில் கடந்த வாரத் தொடர் இலக்கம் 09 ஆகும். வாசகர்கள் இத் திருத்தத்தினைக் கவனத்திற் கொள்வார்களென நம்புவதோடு, தவறுக்கும் வருந்துகிறோம்.**

நமது கண்களுமான ஹாஷிம் உமரிடம் எந்தளவுக்கு உண்மையும், நேர்மையும் இருந்ததோ அந்தளவுக்கு அவரிடத்தில் உழைப்பும் இருந்தது. உழைக்காமல், கஷ்டப்படாமல் வாழ்வில் முன்னுக்கு வர முடியாது என்பது நமது கண்களுமானவருக்குத் தெரிந்திருந்தது. எனவே, இரவு பகல் பாராது உடல் வருந்த உழைத்தார் அவர்.

ஹாஷிம் உமரோடு ஒரு நாள் நாம் பேசிக் கொண்டிருக்கையிற் கேட்டோம்.

“இப்போதெல்லாம் நீங்கள் நூல் வெளியீட்டு விழாக்கள், கலைநிகழ்ச்சிகள், திறப்பு விழாக்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள் என இடையறாது கலந்து கொள்கிறீர்களே, இதனால் உங்கள் தொழில் பாதிக்கப்படவில்லையா?”

எமது கேள்வியை ஹாஷிம் உமர் கொஞ்ச நேரம் மௌனமாக இரசித்தார். பின்னர் சொன்னார் “உங்கள் கேள்வியில் நியாயம் இருக்கிறது தான். தவிரவும் பலரும் இம்மாதிரிக் கேள்வியை என்னிடத்தில் கேட்கவும் செய்கிறார்கள் தான். இதற்கு விடை என்ன தெரியுமா? சொல்கிறேன்” என்றவர் சற்று நேரம் கண்களை மூடி இருந்து விட்டு பின் கூறினார்.

“முன்னரெல்லாம் எனது பல ஓய்வுகளைத் துறந்து விட்டு நான் உழை உழையென உழைத்தேன். பணம் சேர்ந்தது. இப்போது நான் சேர்த்த பணம் உழைத்துக் கொண்டிருக்கிறது. நான் அதிகம் ஓய்வெடுக்கிறேன்!”

எவ்வளவு தத்துவார்த்தமான பதில்! பொறியில் அடித்தது போல் எத்துணை ஆணித்தரமான விடை அவரது!

“முன்னர் நான் கஷ்டப்பட்டு பணம் சம்பாதித்தேன். இப்போது அந்தப் பணமே பணத்தை சம்பாதிக்க நான் தேவையானளவு ஓய்வெடுக்கிறேன்!” என்ற தத்துவம் நிறைந்த அந்தப் பதிலை இன்னமும் எம்மால் மறக்க முடியவில்லை.



கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள சோனக இஸ்லாமிய கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அந்தனி ஜீவா எழுதிய ‘மலையக பங்களிப்பு’ எனும் நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் திரு.சந்திரசேகரனிடமிருந்து புரவலர் ஹாஷிம் உமர் முதற்பிரதி பெறுவதையும், நூலாசிரியர் மற்றும் விழா ஏற்பட்டாளர் நஸீர் ஆகியோர் அருகில் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

(படப்பிடிப்பு:மதுரை வீரன்)

இதிலிருந்து இன்றைய இளைஞர்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். எந்தவொரு பைசாவும் உழைப்பின்றி சும்மா வந்துவிடாது. அதிர்ஷ்டம் வந்து சேர்வதற்கும் உழைப்பு வேண்டும். உழைக்காதவன் உருப்படவேமாட்டான்.

அதுமட்டுமன்றி, உழைக்கும் காலத்தில் உழைத்து விட வேண்டும். “பருவத்தே பயிர்செய்” என்பது ஆன்றோர் வாக்கு. மழை பெய்து நிலம் பதமாக இருக்கையில் தான் விதைக்க வேண்டும். எரிக்கும் வெயிலில் நிலம் காய்ந்து வெடித்து கிடக்கும் நேரத்தில் விதைத்தால் விதைக்கும் விதையும் நஷ்டமாகி விடும்.

நமது கண்களுமான ஹாஷிம் உமர் பருவத்தே பயிர் செய்தார். செய்த பயிர் வளர்ந்து செழித்து விளைந்தது. பொன்னாய்க் காய்த்து குலுங்கியது. அவ் உழைப்பின் அறுவடையை இன்று அவர் மற்றவருக்கு ஈந்து தானும் அனுபவிக்கிறார்.

*(ஹாஷிம் உமர் வருவார்)*

# கவுண்டமணி - செந்தில் - வடிவேலுவின் கலகலக்கும் கலாட்டா டீ கடை

**புஷ்:–** அந்த பின்லேடனையும் சதாம் ஹுசைனையும்... வந்து... வந்து... (புஷ்ஷுக்கு வியர்வை வழிந்தோடுகிறது பயத்தில் கணகள் மிரள்கின்றன)

**செந்தில்:–** ஏன் பேயறைஞ்சவன் மாதிரி பயப்படுறீங்க? எதுவானாலும் சொல்லுங்க. எப்படிப்பட்ட பேயா இருந்தாலும் அதை ஓட ஓட இந்த செந்தில் விரட்டிப் போடுவான். பயப்படாமல் சொல்லுங்க மிஸ்டர் புஷ்.

**புஷ்:–** (அக்கம் பக்கம் பார்த்து) இம்மாம் பெரிய ஜனாதிபதியாக நான் இருந்தும் என்ன பலன்? என்னைச்சுற்றி அதிரடிப்படையும், ஆட்டிலெறிப்படையும் பாதுகாப்புக்கு இருந்தும் என்ன பிரயோசனம்? என்னால் நிம்மதியாத் தூங்க முடியலியே...!

**செந்தில்:–** அதான் ஏன்னு கேக்கிறேன்...

**புஷ்:–** வந்து தினம் தினம் பின்லேடனும் சதாம் ஹுசைனும் என் கனவில வந்து என்னைப் படாத பாடு படுத்துறாங்களே. பின்ன, நான் எப்படி கண்ணை மூடித்தூங்குவேன்...!

**வடிவேல்:–** புஷ்சாரு... அப்ப ஒண்ணு பண்ணுங்க. கண்ணை மூடினாத்தானே கனவு வரும்? நீங்க என்ன பண்ணுறீங்கன்னா, கண்ணைத் தொறந்து வெச்சுக்கிட்டே



தூங்குங்களேன்.

**புஷ்:–** அதெப்பிடி, கண்களைத் தொறந்து வெச்சுக்கிட்டு தூங்குறது எப்படின்னு எனக்குத் தெரியாதே...?

**செந்தில்:–** டேய் வடி...! முந்திரிக் கொட்டை மாதிரி முந்தாதேடா.

**வடிவேல்:–** ஏண்ணே...? நான் ஏதும் தப்பா சொல்லிப்புட்டனா...?

**செந்தில்:–** பின்னே, எவனாவது கண்ணைத் தொறந்துவெச்சுக்கிட்டுத் தூங்குவானா, முண்டம்?

**வடிவேல்:–** அப்போ, தூங்காமலேயே இருக்கிறது...

**செந்தில்:–** டேய் கோணல் வாயா... இப்போ நீ எங்கிட்ட உதைபடப் போறே...

**புஷ்:–** அவரைத் திட்டாதீங்க. எம் மேல இருக்கிற இரக்கத்துல தானே அவர் ஏதோ ஐடியா வெல்லாம் தர்றாரு...

**செந்தில்:–** ஆமாமா... இத்தினி நாளா இவனோட ஐடியா கேட்டுத்தான் அங்க கவுண்டமணின்னு ஒரு ஆளு கவுந்து போய்க் கெடக்கிறாரு. இப்ப, நீங்க கவிழப் போறீங்க. ஜாக்கிரதை...

**புஷ்:–** சரி... பின்ன, நான் தூங்குறதுக்கு என்னதான் வழி...? இந்தியாவிலேயே நீங்கதான் பெரிய மந்திரவாதின்னு கேள்விப்பட்டேன். அதான் உங்களைத் தேடி வந்தேன். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. ஆனா, நான் நிம்மதியாத் தூங்க வேணும். அதுக்கு நீங்கதான் வழி பண்ணனும்...

**வடிவேல்:–** அண்ணே... ஒன்னு பண்ணுவோமா...?

**செந்தில்:–** என்ன...?

**புஷ்:–** நல்ல ஒரு உருட்டுக் கட்டை எடுத்து இவரு தலையில ஓங்கி ஒரே அடி அடிப்போம். அப்புறம், ஒரேயடியா நிம்மதியாய்த் தூங்கிப் போயிடுவாரில்லையா?

**செந்தில்:–** டேய் சுருட்டு வாயா...! நீ சும்மா இருக்க மாட்டே?

**புஷ்:–** ஹிஹி! ரொம்ப தமாஷா பேசுறாரு உங்க நண்பர்...!

**செந்தில்:–** நண்பரா...? இந்த நாய் எனக்கு நண்பரா...? ஏதோ, போனாப் போகுதுன்னு என்னோடு கூட்டிவந்தேன். இல்லைன்னா, அந்தக் கவுண்டன் கடையில டீ அடிச்சே இந்த நாய் செத்துப் போயிருக்கும்...

**வடிவேல்:–** அண்ணே... என்னை நாய்ன்னு சொல்லாதீங்க...?

**செந்தில்:–** ஆமான்டா... தப்புத்தான்! நீ நாயில்லே... நாய் வாலு

**வடிவேல்:** - நான் நாய் வாலுன்னா, நாய் யாரு?

**செந்தில்:–** இதுக்கு பதில் தேவைன்னா நீ இப்பவே இலங்கைக்குப் போய் அங்க தயாரத்தினான்னு ஒரு மினிஸ்டர் இருப்பாரு. அவருக்கிட்டக் கேளு அவருக்குதான் நாய் பத்தி, நாய் வாலு பத்தியெல்லாம் நல்லாய்த தெரியும்.

**வடிவேல்:–** ஏண்ணே... நாய் சம்மந்தமா அவரு ஆராய்ச்சி எதுனாச்சும் செய்திருக்கிறாரோ...?

**செந்தில்:–** அதைப் பத்தியெல்லாம் எனக்குத் தெரியாது. (கொஞ்சம் கடுப்பாகி) டேய்... இப்போ நம்மளைத் தேடி இத்தினை தூரத்திலேர்ந்து இந்தப் பெரீய்ய்ய மனுஷன் வந்திருக்கிறாரு. அவரோட தேவை என்ன, அதை எப்புடி நிறைவேத்துறது எங்கிறது பத்தி யோசிக்காம வேற என்னென்னமோ பேசிக்கிட்டிருக்கியேடா, பொறம்போக்கு! (பின்னர் புஷ் பக்கம் திரும்பி) இப்போ, உங்க தேவை நீங்க நிம்மதியாய்த் தூங்குறது. அம்புட்டுத் தானே...?

**புஷ்:–** ஆமா மிஸ்டர் செந்தில்...!

**செந்தில்:–** அதுக்கு லேடனையும் சதாமையும் இல்லாமப் பண்ணிட வேணும், அம்புட்டுத்தானே?

**புஷ்:–** ஆமா மிஸ்டர் செந்தில்...!

**செந்தில்:–** சரி கவலையை விடுங்க. ஆனா, அதுக்கு ரொம்ப செலவாகுமே.

**புஷ்:–** பராவாயில்லே மிஸ்டர் செந்தில். எவ்வளவு செலவானாலும் நான் தயாராயிருக்கேன்...

**செந்தில்:–** (வாய்க்குள் கணக்குப் போடுகிறார்) ம்... பேயோட்ட எலுமிச்சம் பழம் ஒரு பத்து தேவை. ஒரு எலுமிச்சம் பழம் பத்தாயிரம் வீதம் ஒரு லட்சம் ரூபா. சந்தனக்குச்சி ஒரு பக்கெட்டு ஐம்பதினாயிரம் ரூபா. சாம்பிராணி கால் கிலோ எழுபத்தையாயிரம் ரூபா. வேப்பி



லைக்கு ஒரு ரெண்டு லட்ச ரூபா. ( மேலும் சில கணக்குகள் போட்டு) ஒரு பதினைஞ்சு லட்சம் போகுமுங்க.

**வடிவேல்:–** (செந்திலின் மனக் கணக்கை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த வடிவேல்) அடேங்கப்பா... ஒரு பேயோட்டறதுக்குப் பதினைஞ்சு லட்சம் கேக்குறானே... அப்புடீன்னா, ஒரு பிசாசை ஓட்டுறதுக்கு அமெரிக்காவையே கேட்பான் போலிருக்கே....

**செந்தில்:–** (வடிவேலைப் பார்த்து) என்ன... வாய்க்குள்ள என்ன முணுமுணுப்பு?

**வடிவேல்:–** (வாயைப் பொத்திக் கொண்டு) ஒண்ணுமில்லேப்பா... எலுமிச்சம் பழத்திற்கு பத்தாயிரமும், வேப்பிலைக்கு ரெண்டு லட்சமும் கணக்குச் சொல்லுற மந்திரவாதியை “நல்லாருக்கணும்”னு வாய்க்குள் வாழ்த்திக்கிட்டிருக்கேன்பா...

**செந்தில்:–** உஷ்... அதெல்லாம் என்னோட பிசினஸ் விஷயம்.

**வடிவேல்:–** அப்புடீங்களா...? இந்த விஷயம் கவுண்டமணி சாருக்குத் தெரிஞ்சா...

**செந்தில்:–** தெரிஞ்சா என்ன? அவரு என்ன பண்ணிப்புடுவார்?

**வடிவேல்:–** அந்த எடத்துலேயே மயக்கம் போட்டு விழுந்து செத்திடமாட்டாரா...?

*(அடுத்த இதழில்)*

# தூறல்

அன்பின் இடி - தமிழகேசரியே!

உன் அனைத்து செய்திகளும் வரவேற்கத்தக்கவை. உன் திடீர் ஸ்தம்பிதத்தால் சோர்ந்த நாம், உன் மறுமலர்ச்சியால் புத்துயிர் பெற்றுவிட்டோம்.உனது மலையோசை, சினிமா, ஊற்று என்பன வரவேற்கத்தக்கன. உனது வளர்ச்சி தடைப்படாது தொடர வேண்டி வாழ்த் துகிறேன். வாழ்க காலம் காலமாக... உனது சேவை! இடி - தமிழ்கேச ரியினை பாராட்டுகிறேன்.

**க.ஜெயக்குமாரி,**
*லிந்துல.*


என் இதயத்தை கொள்ளை கொண்ட தமிழ்கேசரியே! “நீ” கொண்டு வரும் அனைத்து அம்சங்களும் வெகு சூப்பர். நீ வாரம் ஒரு முறை என் கை வசம் கிடைக்காவிட்டால் சிறுபிள்ளையின் கையில் இருக்கும் “அப்பத்தை” காகம் பறித்துக்கொண்டு போகும் பொழுது அந்தப் பிள்ளையின் மனம் எப்படி இருக்குமோ அதை போலவே என் மனம் தவித்துக்கொண்டிருக்கும். இனி உன் சேவை மென் மேலும் வெற்றி நடை போட என் வாழத்துக்கள்!

**ஜோ.பேரின்பராஜா,**
*பொத்துவில் 09.*

இடியின் மறு உருவமே தமிழ் கேரியே!

பெயர் மாற்றம்தான் உன்னில் நான் காணும் தற்போதைய வித்தியாசம். உன்னை சிறையிட்டது யார்? சிறையிட்டவர்களுக்கு ஏன் புரியாமல் போனது இடி அஞ்சா நெஞ்சம்கொண்டதென்று. தமிழ் கேசரியாய் நீ மீண்டும் என் கையில் தவழ்ந்தபோது மெய்யாய் சிலிர்த்தே போனேன். உன் வரவிற்காக காத்து நின்றது நிஜம். வராத நாட்களுக்காய் ஏங்கியதும் நிஜம். உன் ஆக்கங்கள் அனைத்தும் பக்கம்பக்கமாய் என்னை மட்டுமல்ல பார்க்கும் அனைத்து தரப்பினரையும் வசப்படுத்தும். ஒரு தரமான தமிழ்கேசரியாக இருக்கின்றாய். வாரா வாராம் என் கைகளில் தங்கிடும் என் இனிய தோழியே, உன் சேவை, புகழ் இடைவிடாது தொடர வாழ்த்துக்கள்!

**ஷோபிதா இராமலிங்கம்**
*மாபோலை.*



தேவனின் முகத்தைச் சுற்றி பல ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. பக்கத்தில் கழிவு நீர் ஓடையின் நாற்றம் குடலை புரட்டி எடுத்தது. அதன் அருகிலேயே அம்மணத்தோடு சிறுவன் ஒருவன் இயற்கைக்கு போய் கொண்டிருந்தான். அவனின் இடத்தையே குறிவைத்து வாலை ஆட்டி கொண்டே, நாய் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது. நாய் இரண்டடி எடுத்து வைக்கும் போதெல்லாம் சிறுவன் "அம்மா" என்று அலறிக் கொண்டிருந்தான். தேவன் காதில் செருகியிருந்த பீடித்துண்டை உதட்டில் பொருத்தி, இடுப்பில் சுருட்டி வைத்திருந்த தீப்பெட்டியிலிருந்து குச்சியொன்றை உருவி.... பெட்டியில் உரசினான். 'ஸ்' என்ற சீறலோடு, பீடி காதலானது நெருப்புடன்.

மீண்டும் பல ஈக்கள், அவன் முகத்தருகே வந்து ஆடிப்பாடின. சில அவனது கன்னத்தில் உட்கார முயற்சிக்க கையால் விரட்டினான். குறும்புக்கார ஈக்கள் காதருகே பறந்துசென்று 'ய்ய்ங்ங்' ஓசையோடு காதில் மோதி வெருண்டோடின.

"ச்சே" கோபத்தோடு கைகளால் தலையைச்சுற்றி ஈ விரட்டினான் தேவன்.

"பனமரமா உடம்பும், வயசும் உயர்ந்திருக்கே தவிர குடும்பத்தைப் பத்தி, ஒனக்கு அக்கற இருக்கா? நானும் எத்தன வருஷத்துக்குத்தான், கொழுந்து பறித்து ஒன்ன காப்பாத்துறது" சொல்லிக் கொண்டே வெற்றிலை காம்பு உடைத்து, நுனி கிள்ளி... சுண்ணாம்பைத் தடவி... பாக்குடன் போயிலை துண்டை வைத்து நன்றாக மடித்தவாறே....

"கங்காணிக்கிட்ட எவ்வளவு கெஞ்சி... காலப்பிடிக்காத கொறயாக... பதினேழாம் மலையில புல்லுவெட்டவும் கவ்வாத்து வெட்டவும் சேர்த்தேன்... நீ என்னடான்னா.... கங்காணி ஏதோ சத்தமா பேசிட்டார்ன்னு அடிக்க போயிருக்க..." வெற்றிலையை வாயில் போட்டு நன்றாக கடித்தாள். 'என் மேல் உள்ள கோபமோ என்னவோ...? வெற்றிலையை இந்த கடிகடிக்கிறார்" தேவன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

"நாம ஏழைடா.... ஒவ்வொரு நாளும் வேலை செய்தாத்தான் வயிறு நிறையும், கோபம் நமக்கு வரக்கூடாது.

அதிகாரம், கோபம் செல்வந்தர்களின் குணம். ஏழை கோபப்பட்டா வயிறுதான் பட்டினி கெடக்கும்." சொல்லிவிட்டு பெருமூச்சி விட்டாள் தேவனின் தாயார்.

தேவன் பழஞ்சோற்றைப் பிசைந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மாரியாயி மகன் சாப்பிடுவதையே பார்த்துக்கொண்டிருந்தாள். என்னதான் ஏசினாலும் மகன் மீதுள்ள பாசம் மட்டும், அவளைவிட்டு என்றும் அந்நியமானதில்லை. 'மகன் மீது குத்தமில்ல தான், வாங்குற சம்பளத்துக்கு கொறையில்லாம வேலை செய்றவன். கங்காணிமாருக்கு ஏதாவது வேலை செய்யிறவங்கல ஏசிக் கொண்டே இருக்கணுமே.

ஒரு வயசுப் பையனப் பார்த்து தூசணத்துல ஏசினா, எவன்தான் கோபப்படாம இருக்கப் போறான்.' மனசுக்குள்ளே மகனின் நியாயத்தை உணர்ந்தாலும் வெளியில் போலியாக ஏசிக் கொண்டிருந்தாள் மாரியாயி.

அம்மாவின் வசைகளை பீடிப்பு கையோடு "ரிவைன்" செய்துகொண்டிருந்தான். 'என்ன முடிவு எடுக்கலாம்?

சரி சொன்னால் பத்து லட்சம் கிடைக்கும்.

எந்த உயிரும் இறப்பது ஒரு முறைதான். நான் செத்தாலாவது... அம்மா... தங்கச்சி சோகமா... வாழுங்கள்தானே!'

மீண்டும் அந்த உருவங்கள் தன்னோடு பேசியவற்றை நினைவுபடுத்திப் பார்த்தான்.

"தேவன் தானே உன் பெயர்."

"ஆமாம்.... நீங்க யாருன்னு.."

"உனக்குத் தெரியவேணாம்.. தெரியப்படுத்தவும் மாட்டோம். உன்னப் பத்தி எல்லா விடயங்களும் எனக்குத் தெரியும்... நாம சொல்லுற ஒரு வேலையை செய்ய முடியும்னு சொன்னா, ஒங் குடும்பத்துக்கு பத்து இலட்சம் கொடுப்போம்."

"என்ன செய்யணும்..."


அவ்வுருவங்கள் சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டான். முதலில், பின்.. "யோசித்துச் சொல்லுறன்" என்றான் தேவன். மீண்டும் இரு நாட்களில் சந்திப்பதாக கூறிச்சென்றன அந்த உருவங்கள்.

"சுரீர்" தொடையில் ஏதோ கடித்தது. வலியோடு கடித்த எறும்பை நசுக்கிக் கொன்றான்.

எறும்புக் கடித்த இடத்துக்கு சற்றுக் கீழே, பெரிய அகலமான வடு அவனின் உடலை திடுக்கிடச் செய்தது.

'ரோந்து சென்ற பொலிஸ் வாகனம் மீது எவரோ... பெற்றோல் குண்டை வீச, அதற்காக முழுலயத்து இளைஞர்களையும் கைது செய்து... சிறையில் பல வித சித்திரவதைகளை செய்து... பலரை விடுதலை செய்துவிட்டு தன்னை மட்டும் பதினான்கு நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து தொடையில் கத்தியால் கீறி... கன்னத்தில் நீர் தெளித்து... மாறி மாறி அறையப்பட்டு லத்தியால் மொளி, விலா எலும்புகள் நொறுக்கப்பட்டு...

இன்னும்.... வார்த்தைகளில் எழுத்தில் கூறமுடியாத எத்தனையோ இம்சைகள்... அப்பப்பா... அந்த வேதனையை நினைக்கும்போதே வியர்த்து நின்றான் தேவன்.


எஸ்.எச்.எம்.அக்ரம், (உக்குவளையூர், அம்ரிதா)

இத்தனைக்கும் திடகாத்திரமான பார்ப்பவரை அச்சம் கொள்ள வைக்கும் உடம்பை பெற்றிருந்ததால் இவ்வாறு நலம் விசாரிக்கப்பட்டான். விடுதலையான போது உண்மை தெரிந்தது.

யாரோ அரசியல் வாதியின் கையாள்தான் பெற்றோல் குண்டை வீசி யுள்ளானாம்...

யாரோ செய்த செயலுக்காக எத்தனை தமிழ் இளைஞர்களும்... அவர்களின் குடும்பமும் வேதனைப் பட்டன.

நான் செய்யப்போகும் செயலுக்கு...? ஆண்டவா! கற்பனை செய்ய இயலாமல் தவித்தான்.

'மனித வெடிகுண்டாக மாறி... அவர்களின் உயிரைப் பறித்தால் இங்குள்ள லயத்து மக்கள் எவ்வளவு கொடுமைகளை சந்திக்க நேரிடும்?

என் குடும்பத்தின், சுயநலத்துக்ாக... என் சமூகத்தைப் பலி கொடுக்க நினைப்பது நியாயமா?' மனதுக் குள் போராடினான் தேவன்.

தேவனின் சிந்தனை வடக்கு கிழக்கை நோக்கிச் சுழன்றது.

யாழ். மண் போராளிகளால்



குண்டு போட்டாலும், துப்பாக்கி வெடித்தாலும் பதுங்கிக்கொள்ளவும், போராடவும் அவர்களுக்கு வலிமை உண்டு. ஆனா பணத்துக்காக ஆசைப்பட்டு நான் போராளியானால்... இந்தத் தேயிலைக் கொழுந்து வளரும் மண் இரத்தக் களமாக மாறும்.

இன்னொரு செம்மணி புதைகுழி இத்தேயிலை செடிகளுக்கு உரமாகும். எதிர்கால சந்ததியினரின் வாழ்வு சூனியமாகும்.

"டேய்... இன்னுமா ஒக்காந்திருக்க." சிறுவனின் தாய் சத்தம் போட்டாள். சிறுவன் இன்னும் முக்கிக்கொண்டிருந்தான்.

"தற்போது ஒழுங்கான தலைமைத்துவம் இல்லாத எம் மலையக சமூகம்.

என்னால், இன்னும் சீரழிவுக்குள்ளாவதா? நான் என் சமூகத்துக்கு... என் மக்களுக்கு.. துரோகம் இழைக்கலாமா? வேணாம்.

இந்த தேயிலை செடிகளில்... என் வியர்வை உதிர்ந்து கிடக்கும்.

சில்லறைகளே... போதும். என் நிலைப்பாட்டையும்... இங்கு ஒரு அசம்பாவிதம் நடைபெறாமல் இருக்க... அவர்களை கேட்க வேண்டும். உறுதியான முடிவெடுத்தான் தேவன்.

பீடியின் நெருப்பு உதடுகளைச் சுட்டது. பதறி... துப்பினான்.

சிறுவனின் தாய் அவனை சுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

நாய் தன் நாவால் "லக் லக்" என சுவைக்கத் தொடங்கியது. "ச்சீ... தீ... தீ" சிறுவனின் தாய்... நாயை துரத்தினாள்.

வாலை ஆட்டிக்கொண்டே நகராத நாயைக் கண்ட அவள்... கல்லெடுத்து வீசவும், நாய் வாலை பின்புறம் தூக்கிக்கொண்டு எடுத்தது ஓட்டம்.

தேவன் நிம்மதியோடு... அவ் விடத்தைவிட்டு அடியெடுத்தான்.

தேயிலையின் சுகந்தமான தென்றல்... அவனை ஆரத் தழுவி அவனோடு உரசிக் கொண்டே சென்றது.

---

"இண்டைக்கு வேணாம் சுரேஷ், இன்னொரு நாளை


கோளாவில்பெ.ஜெயந்தன்

க்கு....." என்று அவள் கூறி முடிக்கும் முன்பே, "இல்லை இல்லை இண்டைக்கு எப்படியாவது..." சுரேஷ் தொடர்ந்தான்.

"ஐயோ என்னை கஷ்டப்படுத்தாதீங்க சுரேஷ்" சுரேஷ் விடுவதாக இல்லை. அடக் கடவுளே உங்க

# கெடுத்துவிட்டான்

ளைக் கஷ்டப்படுத்த மாட்டேன். சுரேஷின் வற்புறுத்தல் அவளை ஒப்புக்கொள்ள வைத்தது.

"சுரேஷ் நான் என்பாட்டுக்கு இருப்பேன். ஒரு உதவியும் செய்ய மாட்டன்."

வேலையை ஆரம்பிக்கும் அவசரத்துடன், "நீங்க உங்க பாட்டுக்கு இருங்க. நான் எல்லாம் செய்வன்" என்று சொல்லி சிரித்தான்.

ஆனால் அவளோ படபடத்துக் கொண்டு, "சுரேஷ் என் புருஷன் வரத்துக்குள்ள எல்லாம் செஞ்சு முடிச்சுடனும்" என்றாள்.

"சரி, சரி சுரேஷ் எனக்கென்னமோ பயமா இருக்கு" என்றாள்.

"இதுல ஒண்டும் பயப்படத் தேவையில்லை" சுரேஷ் ஆறுதல்படுத்தினான்.

"சுரேஷ், இதனால் ஏதும் பிரச்சினை வராதே" தயக்கத்துடன் கேட்டாள்.

"ஒரு பிரச்சினையும் வராது. கதைச்சுக் கொண்டு இருக்க இது நேரம் இல்லை" என்றான்.

அவளும் நிலைமையை உணர்ந்து கொண்டு அவனது அவசரத்துக்கு ஒத்துக்கொண்டாள்.

இருந்தும் அவளது புருஷன் மன விம்பத்தில் தோன்றி பயம் காட்டினான்.

சுரேஷ் பம்பரமாக இயங்கினான். அவனுக்கு உடம்பெல்லாம் வியர்த்துப் போயிருந்தது.

"சுரேஷ் களைச்சுப் போய்விட்டீர்களா.?" என்று அவள் கேட்கவே.

சுரேஷ் அவனுக்கு உரிய அந்த சிரிப்பை உதிர்த்தவாறே இல்லை என்றான். சுரேஷ் உண்மையிலே நீங்க கெட்டிக்காரன்தான். இண்டைக்குத்தான் நான் சந்தோஷமா இருக்குறன் என்றாள்.

என் புருஷன் வந்ததும் சொல்லணும் 'இந்தச் சின்னப் பையனுக்கு இருக்குற திறமை கூட உங்களுக்கில்லையே' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள்.

புருஷனிடம் சொல்லியும் விட்டாள்.

அவளது புருஷனுக்கு சிரிப்புத்தான் வந்தது.

"அடக் கடவுளே, ரீவியைத் திருத்தினா நாடகம் பார்த்துக் கொண்டு, வீட்டு வேலைகள் செய்யாம இருப்பாய் என்று நினைத்து, திருத்தாமல் விட்டா, சுரேஷ் வந்து திருத்திப்போட்டானே. ச்சே... கெடுத்துப் போட்டானே!"

# மெஸ்மரிசம் ஹிப்னாடிசம்

மனக் காந்த சக்தி அதிகமாக அமையப் பெற்றவர்கள் பிறருடைய உள்ளத்தின் ஆழத்தில் மறைந்து கிடக்கும் அந்தரங்கங்களை - அல்லது மறைத்து வைக்கப்பட்டிருக்கும் குற்ற இயல்புடைய உணர்வுகளை க்குள்ளாக்குவது ஒருவிதமான நிலையாகும். இவ்விதமின்றி சாமானிய நோய்களை மெஸ்மரிசம் பயின்றவர் தமது கையசைப்பின் மூலமோ விரல்களைத் தொட்டு வருடுவதன் மூலமோ குணமாக்க முடியும்.

மெஸ்மரிச் தூக்கத்துக்கு

இரண்டாவது கட்டமாக முன்பிருந்ததைவிட சற்று ஆழ்ந்த நிலைக்கு உறக்கம் ஆட்கொள்கின்றது. அந்த நிலையில் சாதாரண வலி தெரியாமல் அறுவைச் சிகிச்சையினைச் செய்ய முடியும். மூன்றாவது கட்டமாக மிகவும் ஆழ்ந்த

## மெஸ்மரிச உறக்கம் - 07

அவர்கள் அறியாமலே அவர்கள் வாயின் உதவியினாலேயே வெளிக்கொணர முடியும்.

முன்னரே நாம் குறிப்பிட்டுள்ள மாதிரி டாக்டர் மெஸ்மர் கண்டறிந்த அரிய ஓர் உண்மை அவருடைய பெயரால் 'மெஸ்மரிசம்' என அழைக்கப் பெறுகிறது.

பின்னர் வந்த பல அறிஞர்கள் டாக்டர் மெஸ்மரின் முறையுடன் அரிய பல புதுமைகளை - புரட்சிகரமான அம்சங்களைச் சேர்த்து மெருகேற்றி அதன் சிறப்பை - பெருமையை - பயனை அதிகப்படுத்தி இருக்கின்றனர்.

ஆற்றலை யாரிடம் பிரயோகித்துப் பலன் காண விரும்புகின்றோமோ அவரை ஒருவித மயக்க நிலைக்கு உள்ளாக்குவது மெஸ்மரிசத்தின் முக்கியமான செயல் முறையாகும். இந்த உறக்கத்தை மெஸ்மரிச உறக்கம் - அல்லது ஆரோக்கிய உறக்கம் என்று கூறுவார்கள். பிறரை மயக்க நிலை

ஒருவரை உள்ளாக்குவதற்கு மெஸ்மரிசம் பயின்றவர் பெரும்பாலும் தமது கண்களைப் பயன்படுத்துவது வழக்கம். உடலுக்கு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் மின்கதிர் ஆற்றலை, ஒருமுகப்படுத்தி கண்கள் மூலமாகப் பிறர் மீது பிரயோகிக்கும்போது அந்தப் பார்வையைச் சந்திக்கும் மற்றவர் கண்கள் வழியாக அவர்கள் உடலில் மின்கதிர் ஊடுருவிச் செல்லும். இந்தக் காரணத்தால் மற்றவர் நினைவிழந்து மயக்க நிலையடைவார்.

இவ்வகைப்பட்ட மெஸ்மரிச உறக்கத்துக்கு இலக்கான ஓர் நோயாளியை அந்த நிலையில் வைத்தே அவருடைய நோயை முற்றிலுமாகக் குணமாக்கிவிட முடியும். அறுவை சிகிச்சை செய்யப்படும் நோயாளிக்கு மயக்க மருந்து கொடுக்காமலேயே மெஸ்மரிசத்துக்கு உள்ளாக்கி அந்த நிலையில் கொஞ்சம்கூட வலியில்லாமல் அறுவை சிகிச்சை செய்துவிட முடியும். மெஸ்மரிச ஆற்றல் மூலம் ஒரு மனிதரை உறக்க நிலையில் இருக்கச் செய்யலாம். அந்த நிலையில் சாதாரண பிணிகளை குணமாக்க முடியும்.

உறக்க நிலை ஏற்படுகின்றது. அந்த நிலையினை ஸோம்னாம்புலி சம் (Som nombulism) என மெஸ்மரிசவாதிகள் குறிப்பிடுகின்றனர். அந்த நிலையில் உள் மனமானது நன்கு விழிப்படைந்து மிகவும் தீவிரமாகவும், நுண்மையாகவும் செயற்படத் தொடங்குகிறது.

அந்த நிலையில் மெஸ்மரிசவாதி உறக்கத்திற்கு ஆட்பட்டிருக்கும் உள்மனத்துடன் நன்றாக - தெளிவாக உரையாட முடியும். மெஸ்மரிச முறையினைப் பயன்படுத்தி ஒரு மனிதரை உறக்க நிலைக்குக் கொண்டுவருவது என்பது மிகவும் எளிதானதல்ல; சிலர் தனியான முயற்சி ஏதும் செய்யாதிருக்கும்போதே பிறரைத் தாமாகவே கவர்ந்திழுக்கும் இயல்பினைப் பெற்று இருக்கிறார்கள். சிலர் திட்டமிட்டுத் தங்கள் மன மின்காந்த கவர்ச்சி சக்தியை அதிகம் பயன்படுத்திக் கொண்டு பயன் பெறுகிறார்கள். மெஸ்மரிச வசிய முறைக்கு நம் மனத்தின் மின் கவர்ச்சி ஆற்றலைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

*(மெஸ்மரிசம் தொடரும்....)*

அறிவு முதிர்ச்சி என்பது எல்லா அனுபவங்களிலிருந்தும் விடுதலை பெற்றதாகும். அது எப்போதும் எந்தச் செல்வாக்கினாலும் மாற்றப்படுவதில்லை. தியானத்தில் முதிர்ந்த வைத்துவிட வேண்டும். ஒரு விஷயத்தில் முழுக் கவனம் செலுத்தும் போது முழுமையான அமைதி கிடைப்பதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அந்த முழுக் கவன

# தியானம் 07

நிலை என்பது எல்லா அனுபவங்களுக்கும் உருவம் கொடுக்கின்ற கட்டுப்படுத்துகின்ற மனமானது, அறிவிலிருந்து விடுதலை பெறுவதேயாகும். ஒளி மிகுந்த, ஒளிமயமான மனதிற்கு, அனுபவங்கள் தேவையில்லை. அதிகப்படியான பெரிய அனுபவங்களுக்காக ஆசைப்படுவதே முதிர்ச்சியடையாத மனம் ஆகும். அறிவு உலகத்தில் உலவுவதே தியானம் ஆகும்.



ஆனால் உலக அறிவிலிருந்து விடுதலை பெற்று 'அறியாத' உலகத்தில் நுழைவதே தியானம் ஆகும். மற்றவர்கள் மூலமாக அறிவதைவிட, ஒருவர் தானே எல்லாவற்றிலும் தெளிவு பெற வேண்டும்.

முற்காலத்தில், ஆசிரியர்கள், உலகத்தை காப்பவர்கள், கற்றுத் தெளிந்தவர்கள் இருந்தார்கள். தியானம் என்பது என்ன என்று உண்மையிலே அறிய விரும்பினால், உலகத்தை ரட்சித்தவர்கள், ஆசான்கள் ஆகியோரை முழுவதுமாக தள்ளி

ஈர்ப்பில், ஒரு எல்லைக் கோடா, ஒரு மையமோ இல்லை. 'நான்' என்பது கவன ஈர்ப்பில் இருக்கும் போது அந்த முழுக் கவனமும், அதனால் ஏற்படும் அமைதியும் தியானத்தின் நிலை என்று கூறலாம்.

நாம் ஒருபோதும், நாயின் குரைக்கும் ஓசையையோ, குழந்தையின் அழுகுரலையோ, சிரித்துக் கொண்டு செல்லும் மனிதனின் சிரிப்பையோ கேட்பதில்லை. உலகப்பொருட்களிருந்து நம்மை நாமே தனிமைப் படுத்திக் கொள்கிறோம்.

அதன் பின்னரே நாம் எல்லாவற்றையும் கவனிக்கவும் கேட்கவும் சொல்கிறோம். இது போன்று நம்மை நாமே தனிமைப் படுத்திக் கொள்வது நம்மை அழித்துக் கொள்வதாகும். இப்படித் தனிமைப்படுத்துவதில் தான் குழப்பங்களும், கஷ்டங்களும் உருவாகின்றன.

*(தொடரும்....)*



# ஆண்மைக் குறைவும் பெண்மைக் குறைவும்

அவன் காம உணர்வு உச்சம் அடைந்து அடங்கி விடுகிறது. வயது வந்த ஒரு ஆடவன் திருமணத்திற்கு முன்னால் பல வகைகளிலும் கிளர்ச்சி அடைகிறான். அப்போது அவனிடம் காம உணர்வு ஏற்படுகின்றது என்று சொல்லலாம்.

ஓர் ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்வதை ஓர் ஆடவன் இரகசியமாகப் பார்க்கும் போது அதன் காரணமாக கிளர்ச்சியடைந்து அவனிடம் காம உணர்வு பொங்குகிறது கூட்டுக்குடும்பங்களில் வாழும் ஆடவர்களுக்கு இந்

காரியமாக இருப்பதில்லை. அவனுக்குத் தன் காம உணர்வைத் தணித்துக்கொள்ள ஒரேயொரு வழிதான் இருக்கும். அதாவது விலை மாதிடம் செல்வதுதான் அவ்வழியாகும்.

ஆனால் அதுவும் எளிதான காரியமாக இருப்பதில்லை. விலைமாதைத் தேடிச் செல்வதற்கான துணிச்சல் அவனிடம் இருப்பதில்லை. சில ஆடவர்களுக்கு விலைமாதைத் தேடிக் கொண்டு எங்கே செல்வது, எப்படித் தொடர்பு கொள்வது என்பதும் தெரிந்திருப்பதில்லை.

அப்படியே விலைமாதைத் தேடிச் சென்றாலும் அவளிடம் இயல்பாகவும் உடலுறவு கொள்ள முடியாது.

## என்ன காரணம்

த சந்தர்ப்பம் கிடைக்க அதிக வாய்ப்பு உண்டு.

ஓர் இளம் பெண் ஆடையின்றி குளிப்பதை ஓர் ஆடவன் பார்க்கிறான் என்று வைத்துக் கொள்வோம்.

அப்போது அவன் கிளர்ச்சியடைகிறான். அவன் காம உணர்வு தட்டியெழுப்பப்படுகின்றது.

காம உணர்வைத் தூண்டக் கூடிய ஆபாசப் புத்தகங்களைப் படிக்கும்போதும் அவனுடைய காம உணர்வு தூண்டியெழுப்பப்படுகிறது.

அப்போது அவன் ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்ளவும், அதன் மூலம் தன் காம உணர்வைத் தணித்துக் கொள்ளவும் துடிக்கிறான். ஆனால்...

திருமணமாகாத ஓர் ஆடவனுக்கு ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வது என்பது சுலபமான

உடலுறவு கொள்வதற்கும் தயக்கமாக இருக்கும்.

தான் விலைமாதிடம் வந்திருப்பதை யாராவது பார்த்துவிடுவார்களோ என்ற அச்சம் ஒரு புறம், விலைமாதிடம் உடலுறவு கொண்டால் பால்வினை நோய் வந்துவிடுமோவென்ற தயக்கம் மறுபுறம். பிறகு அவனால் எவ்வாறு இயல்பாக உடலுறவு கொள்ளமுடியும்?

சரி, பிறகு அவன் தனக்கு ஏற்பட்டிருக்கும் காம உணர்வை எப்படித் தணித்துக்கொள்வது? அவன் யாருக்கும் தெரியாமலும் சுலபமாகவும் பால்வினை ஏற்படும் ஆபத்தில்லாமலும் காம உணர்வைத் தணித்துக் கொள்வதற்கு என்ன வழி?

அதற்கு ஒரே வழி சுய இன்பம் பெறுவதுதான் என்று அவன் தீர்மானிக்கிறான்.

சுய இன்பம் என்றால் என்ன?

*(அடுத்த இதழில் பார்ப்போம்...)*

# இதோ உதவி 07

## மனக்காட்சியை விதைக்கிறீர்கள்; விதைத்ததை அறுவடை செய்கிறீர்கள்!

'விதைத்தால் அறுவடை செய்ய முடியும்' என்ற பழமொழியை நினைத்துப் பாருங்கள். இது ஒரு சீர் தன்மை விதி.

தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான், இல்லையா? இது போல சீர்தன்மை விதி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திற்கும் பொருந்தும்.

சில உதாரணங்கள்:

மனத்தில் தோல்வியை விதைத்தீர்கள் என்றால் தோல்வியைத்தான் அறுவடை செய்ய முடியும். மனக் காட்சிக்கு எதிராக நடந்து வெற்றியடைய முடியாது. ஆகவே தோற்றுப் போவீர்கள். ஏழ்மையையே நினைத்துக் கொண்டிருந்தால் தரித்திரம் வந்து சேரும். மனக்காட்சியில் ஏழ்மையும் நிஜவாழ்வில் செழிப்பையும் எதிர்பார்க்க முடியாது.

வினை விதைத்தால் தினை கிடைக்குமா? அதுபோலதான் விதி மனக்காட்சியில் ஏழ்மை ஒருபோதும் வாழ்க்கையில் வளத்தை தந்து விடாது. ஆகவே, மனக்காட்சியில் வறுமை இருந்தால் வாழ்விலும் வறுமைதான் வந்து நிற்கும்.

ஏழ்மையை நினைத்தால் ஏழை ஆவீர்கள்.

வெற்றியை எண்ணினால் ஜெயமடைவீர்கள்.

பணத்தை நினைத்தால் செல்வந்தராவீர்கள்.



நல்ல நட்புகளைக் கருதினால் நல்ல நண்பர்களைப் பெறுவீர்கள்.

அன்பு செலுத்தினால் நேசிக்கப்படுவீர்கள்.

அது அப்படித்தான். இது சீர்தன்மை விதி. வேறு எப்படி இருக்க முடியும்?

'நினைப்பதைப் போலவே மனிதன் மாறுகிறான்' பைபிளின் கருத்தும் இதுவே.

இதைத்தான் உலகில் உள்ள எல்லா மதங்களும், தத்துவங்களும், ஞான நூல்களும், அறிவியல் ஆராய்ச்சிகளும், சரித்திர நிகழ்ச்சிகளும் சொல்லி வருகின்றன.

எதைப்பற்றி நீங்கள் தீவிரமாக அடிக்கடி கருதுகிறீர்களோ (மனக்காட்சி செய்கிறீர்களோ) அப்படியே மாறுவீர்கள்...

## உங்கள் எண்ணங்களே மனத்திரைப்படங்கள்; உங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிகள்!

நீங்கள் எண்ணும் பொழுது ஒரு பொருளைக் கற்பனை செய்கிறீர்கள். இது ஆரம்ப மனோத்தத்துவப் பாடமில்லை. உங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி வருங்காலத்தைத் தீர்மானிக்கும் 'நிரூபிக்கப்பட்ட வெற்றி முறைகள்' மூலம் அறிந்து கொள்ளும் ஆரம்ப நிலை.

ஆகவே அதிக நம்பிக்கையோடு தொடங்குங்கள். பெரிய விருப்பங்கள் உண்மையிலேயே நடந்து விடும்.

மாளிகை எண்ணும்போது மாவன்னா - ளினா - கையன்னா என்று மா - ளி - கை எழுத்துகளை நீங்கள் நினைப்பதில்லை. மாறாக ஒரு வீட்டை நினைக்கிறீர்கள் (மனதில் காட்சி காண்கிறீர்கள்.) அது உங்களுடையதாகவோ, உங்களுக்குத் தெரிந்ததாகவோ அல்லது நீங்கள் வாங்கக் கனவு காணும் வீடாகவோ இருக்கலாம். அல்லது ஒரு வீடு உங்கள் மனக் கண் முன் எழுந்து நிற்கும். வீடு என்று நினைத்தாலும் வ என்ற எழுத்தும் டு என்ற எழுத்தும் உங்களுக்குத் தோன்றும். எழுத்துகள் மனக் கண் முன் எழுந்து நிற்கும்.

*(உதவிகள் தொடரும்...)*

# ஊற்று

கே.கார்த்திகாயினி

## இவ்வாரத் தென்றல்

*'இன்மை இரும்பை இரந்துதீர் வாம் என்னும்*
*வன்மையின் வன்பாட்டது இல்'*

**அதிகாரம் 107 குறள் 03**

வறுமைத் துன்பத்தை உழைப்பால் நீக்குவோம் என்று கருதாமல் பிறரிடம் இரந்து நீக்குவோம் என்று கருதுபவனின் சமதர்மத்தைப் போல கொடுமையானது வேறொன்றுமில்லை. எனவே மானிடர்களே இரந்து வாழ்வதை விட உழைத்து வாழ்வதையே உயர்வாகக் கொள்ளுங்கள்.

## நீங்களும் எழுதலாம்

போட்டி இல : 6

*"பத்து மாதம் சுமந்து என்னை*
*பெற்றெடுத்த அம்மா"*

....................................................

அன்புச் சிறுவர்களே! ஒரு கவிதையின் இரு வரிகள் தரப்பட்டுள்ளன. இக் கவிதையினைத் தொடர்ந்து உங்கள் கற்பனையில் கவிதையைப் பூரணப்படுத்துங்கள். உங்கள் கவிதை வரிகளின் எண்ணிக்கை நாலு வரிகளுக்குக் குறையாமலும், ஆறு வரிகளுக்குக் அதிகமாகாமலும் இருக்கட்டும். கவிதையைப் பூரணப்படுத்தி அதற்குப் பொருத்தமான தலைப்பிட்டு எமக்கு அனுப்பி வையுங்கள். முதலிடம் பெறும் கவிதை இப் பகுதியில் பிரசுரிக்கப்படுவதோடு ரூபா. 100 பரிசாகவும் வழங்கப்படும். 2ம், 3ம் இடத்தைப் பிடிக்கும் கவிதைகளுக்கு முறையே ரூ. 50, ரூ. 25 பரிசாக வழங்கப்படும். எங்கே, இப்பொழுதே எழுத ஆரம்பியுங்கள் பார்க்கலாம். கவிதைகள் எமது முகவரி ஒட்டப்பட்ட தபால் அட்டையில் வந்து சேரவேண்டும்.

முடிவுத் திகதி : 19.04.2003.

தமிழ் கேசரி
நீங்களும் எழுதலாம்
போட்டி இல : 5
இல: 3 A, தர்மராஜ
மாவத்தை,
கொழும்பு - 03.


நீங்களும் எழுதலாம் போட்டி 04 இல் ரூ.100 பரிசு பெறுபவர்
ஏ. ராஜி.
39/27, நெல்சன் லேன்,
கொழும்பு - 03.

### பரிசு பெறும் கவிதை:

மண்ணில் அமைதி
தருவாயோ...

**சமாதானப் புறாவே ~ உன்**
**வெண்சிறகு எங்கேயறிவாயோ?**
**சதாவெடித்த போரை~நீக்கி**
**மண்ணில் அமைதி**
**~ தருவாயோ?**

## வர்ணம் தீட்டுங்கள் போட்டி - 06



மாணவர்களே! இங்கு உள்ள படத்திற்கு தரப்பட்ட புள்ளிகளை ஒழுங்காக இணைத்துப் படத்தை முழுமைப்படுத்தி வரைந்து அழகிய வர்ணம் தீட்டி அனுப்புங்கள்.. சிறப்பாக வரைந்து வர்ணம் தீட்டி அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா. 100 பரிசாக வழங்கப்படும். ஓவியங்கள் எமது முகவரி ஒட்டப்பட்ட தபால் உறையில் வைத்து அனுப்பப்படல் வேண்டும்.

முடிவுத் திகதி :- 19.04.2003

தமிழ் கேசரி
வர்ணம் தீட்டுங்கள் போட்டி இல : 6
இல: 3 A, தர்மராஜ மாவத்தை, கொழும்பு - 03.

வர்ணம் தீட்டுங்கள் போட்டி 04 இல் ரூ.100 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

**எம்.எம்.ரம்ஸான்**
**பத்மஶ்ரீ பெரேரா மாவத்தை, மஸ்ஸல, பேருவளை.**

பாராட்டினைப் பெறுவோர்.

1) பாத்திமா ஷஸ்னா, பலாங்கொடை.
2) ரிஸ்னா அன்வர், டிக்வெல்ல.

## திருகோணமலை

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தலைப்பட்டினமாக திருகோணமலை உள்ளது. வடக்கே "யார் ஓயா"வும் மேற்கே அனுராதபுரம், பொலனறுவை மாவட்டங்களும் தெற்கே பெருகல் ஆறும் கிழக்கே வங்காள விரிகுடாவும் எல்லைகளாக உள்ளன. பத்து குடாக்களையும், பதினைந்து களப்புக்களையும் கொண்டு நூற்றி முப்பது மைல்கள் நீலக்கடற்கரையை உள்ளடக்கிய இம் மாவட்டம் தெற்காசியாவில் ஓரேயொரு இயற்கைத் துறைமுகத்தையுடையது.

16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டது. 1693ல் ஒல்லாந்தராலும் 1796ல் பிரித்தானியராலும் கைப்பற்றப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் மூன்றாவது பெரிய மாவட்டமான 2630.8 $K.M^2$ நிலப்பரப்பரப்பையும் 96 $K.M^2$ உள் நாட்டு கடற்பரப்பையும் கொண்டுள்ளது. புகழ் பெற்ற தலமான திருகோணேஸ்வரமும் கின்னியா வெந்நீர் உற்றுக்களும், 40 அடி அவுலியா ஹாஜா மொஹிதீன் அவர்கள் மலையின் மேல் அடங்கப்பட்டுள்ளார்கள். புகழ் சேர்க்கும் இங்கு "போர்ட் பிரட்ரிக்" என்ற வரலாற்று புகழ் பெற்ற கோட்டையும் உள்ளது பதினொரு பிரதேச செயலாளர் பிரிவுகளை இம்மாவட்டம் கொண்டுள்ளது.

இங்கு பிறீமா மொழிற்சாலை - மிட்சுயி சிமெந்து தொழிற்சாலை, கந்தளாய் சீனித் தொழிற்சாலை இரும்பு மண் தொழிற்சாலை (புல்மோட்டை) நிலாவெளி உப்பளம் பாரிய பிரிட்டிஷ் காலத்து கடற்படைத் தளம், ஆகாய விமானப்படைத் தளம், ராணுவத் தளம், பொலிஸ் உத்தியோகத் தளம், கலங்கரை விளக்கம் அடுத்து மூதூர் பிரதேசத்துக்கு கடல்மார்க்கம் செல்லும் போது ஆழம்கூடிய பகுதியொன்றும் உள்ளது அப்பகுதியில் ஆழம் காணமுடியாமல் உள்ளது. அப்பிர தேசத்தை பர்தாளமலை என்றும் கூறுவார்கள்.

விஷேடமாக எட்டு கி.மீட்டர் நீள கடற்கரை படுக்கை ஆறு மில்லியன் தொன் எடையான கனிய மூலப் பொருட்களைக் கொண்டுள்ளது. இதில் பெருமளவில் இல்மனைற்றும் சிறிதளவில் சேர்கோன், ரூடுஜடுஸ், மோன்னைஸ்ட் இல்மனைற்று என்பனவும் காணப்படுகின்றன. அணு உலைக்குப் பயன்படும் "யுரேனியம்" சிறிளவில் காணப்படுவதாகவும் சில ஆராய்ச்சிகள்கூறுகின்றன. இவற்றை விட குச்சவெளி கடற்பிராந்தியம் பெருமளவில் முருகைக்கல் பாறைகளைக் கொண்டதாகவும் "சேருவில்" வில் செப்புத் தாது படிவமும் காணப்படுகிறது.

**ஃபையாஸா -**
**06. தக்வா நகர்,**
**லவ் லேன்,**
**திருகோணமலை.**

## உலகில் மிகவும் புகழ்வாய்ந்த நூல்கள்

| | |
|---|---|
| போரும் சமாதானமும் | லியோடால்ஸ்டோய் |
| சகுந்தலம் | காளிதாசன் |
| பகவத்கீதை | வேதவியாசர் |
| இராமாயணம் | வால்மீகி |
| இலியட் ஒடிசி | ஹோமர் |
| அர்த்த சாஸ்திரம் | கௌடில்யன் |
| கந்தப்புராணம் | கச்சியப்பர் சிவாச்சாரியார் |
| சீராபுராணம் | உமறுப்புலவர் |
| அரிச்சந்திர புராணம் | வீரகவிராயர் |
| கீதாஞ்சலி | இரவிந்தரநாத்தாகூர் |
| இயேசு காவியம் | கவியரசு கண்ணதாசன் |
| திருக்குறள் | திருவள்ளுவர் |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| திருவிளையாடல் புராணம் | புலியூர் நம்பிபவனந்தி முனிவர் |
| ரொபின்சன் குரூசோ | டானியல் டிபோ |
| கின்னஸ் வேல்ட் ரெக்கோட் | நாரிஸ் டேவர் ஆயலன் ரஸ் |

தொகுப்பு :-
செ.சுசீலா,
பலாங்கொடை.

## பாப்பாவுக்குள் பணி

பள்ளியில் படிக்கும் பிள்ளை
படிப்பினில் கருத்தை ஊன்ற
தெள்ளமுதனைய கல்வி
கள்ளனாய் கவனம் விட்டு
கருத்தினை சிதறவிட்டால்
உள்ளத்தில் ஒன்றும்
நில்லாமல்
ஓடியே ஒளியும் பாப்பா!

பற்றுவை கல்வி மீது
பக்திவை தெய்வத்தின் மீது
கற்றிடு உயர்ந்த கல்வி
காட்டிடு தேச பக்தி
உற்றதாய் தந்தை பேணு
உண்மையே பேசி வாழு
நற்பணி செய்து பாப்பா நீ.
நல்லோனாய் வாழுபாப்பா!

**கவிக்குயிலன்**
**சேனையூர் - 6**

## ஒற்றுமையே பலம்

நீலன், தரன், முருகன், பாலு ஆகிய நால்வரும் சிறந்த நண்பர்கள். இவர்கள் நால்வரும் கூட்டாகச் சேர்ந்து ஓர் நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு கப்பலில் பொருட்களை ஏற்றிவந்து நம் ஊரில் வியாபாரம் செய்து வந்தார்கள்.

ஒரு முறை நான்கு நண்பர்களும் கப்பலில் பொருட்களை ஏற்றிக் கொண்டு தம் நாட்டுக்கு புறப்பட்டார்கள். கப்பல் சிறிது தூரம் சென்றதும் வாங்கிய பொருட்களை பகிர்ந்து கொள்வதில் நண்பர்களிடையே சண்டை ஏற்பட்டது.

அவர்கள் சண்டை போடுவதை கப்பலில் ஒளிந்திருந்த திருடன் பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவன் நால்வரின் முன்பும் பாய்ந்தான். மரியாதையாக எல்லாப் பொருட்களையும் என்னிடம் தந்து விடுங்கள். எங்கெங்கே என்னென்ன பொருட்களை வைத்திருக்கிறீர்கள்? எல்லாப் பெட்டிகளையும் திறவுங்கள்....... என கூரிய கத்தி ஒன்றைக் காட்டி மிரட்டினான். திடீர் என தம் எதிரே வந்து நின்று கத்தியை காட்டிய



திருடனைக் கண்டு சற்று நேரம் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

பின்னர் "இதோ காட்டுகிறோம் வாருங்கள்" என கள்வனை கூட்டிச் சென்று ஒரு பெரிய பெட்டியை திறந்து காட்டினர். அதனுள் ஒன்றும் இல்லாததைக் கண்ட திருடன் என்ன வெறும் பெட்டியை காட்டுகிறீர்கள்? என்று கோபத்தோடு கேட்க "இல்லை..... நன்றாக குனிந்து பாருங்கள். நிறையப் பொருட்கள் இருக்கின்றன" என்று கூறினான் பாலு. ஆவலோடு பெட்டியினுள் குனிந்து பார்த்தான் கள்வன். இது தான் தருணம் என நால்வரும் சேர்ந்து அவனைத் தூக்கி பெட்டியினுள் போட்டு பூட்டினர்.

நாம் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டதால் தான் எம் பொருட்களைத் திருட கள்வன் வந்தான்.

ஆனால் நாம் ஒற்றுமையாய் செயல்பட்டு அந்தக் கள்வனை பிடித்துவிட்டோம்.எமது ஒற்றுமையே நமக்கு இந்த பலத்தைத் தந்தது.

இனி நாம் எப்போதும் ஒற்றுமையாக இருப்போம் என கூறினான் முருகன். ஏனைய மூவரும் முருகன் கூறியதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர்.

## ஒரு நிமிசம்தான்... ஆனால்....

*"ஒரு நிமிஷம் காத்து இருக்கக் கூடாதா? ஒரு நிமிஷத்துல குடியா முழுகிப்போய்டும்"* என்றெல்லாம் பேசுகிறோம். ஆனால் ஒரு நிமிஷ நேரத்தில் எத்தனையோ உலக அதிசயங்கள் உலகில் நடக்கின்றன. ஒரு நிமிடத்தில்......

வானத்திலிருந்து 6000 விண்கற்கள் விழுகின்றன.

பூமி தன்னைத் தானே 950 மைல் சுற்றுகிறது.

100 பேர் இறக்கின்றனர். 114 பேர் பிறக்கின்றனர்.

34 திருமணங்கள் நடக்கின்றன.

உலகில் 16 விவாகரத்து நடக்கின்றது.

6,38,000 பேர் மது அருந்துகின்றனர்.

60 லட்சம் பேர்களால் சிகரட்டுக்கள் பிடிக்கப்படுகின்றன.

4600 செருப்புக்கள் தைக்கப்படுகின்றன.

68 கார்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**(ஆனந்த விகடன் - 1966)**

**எம்.எஸ். நஸீஹா,**
**ஏத்தாலை**

## உங்களுக்குத் தெரியுமா?

*மிக வெப்பமான இடம் எது?*

எதியோப்பியா டால்லொஸ்

*எவரெஸ்டில் ஏறிய முதல் பெண்மணி யார்?*

ஜீங்கோ டுபி

*இலங்கையின் முதல் கல்வி அமைச்சர் யார்?*

நுகவல

**E.C.G** *(இதயத்துப்பறி கருவியை கண்டு பிடித்தவர்?*

வில்லெம் ஜந்மோசன்

*முதல் விமானத்தின் பெயர் எது?*

பிளயர் 01



**என்.கோபிசங்கர்,**
**ஆண்டு-4,**
**கிங்ஸ்டன்**
**சர்வதேச கல்லூரி,**
**முகத்துவாரம்.**

## நோகுதே நெஞ்சம்

**என் மதிப்புக்குரிய அருளாசான் அண்ணாவுக்கு,**

நான் தொடர்ச்சியாக நோகுதே நெஞ்சம் பகுதியை வாசித்து வருகிறேன். அதில் பல்வேறு பிரச்சினைகளுக்கும் நீங்கள் வழங்கும் ஆலோசனைகள் அற்புதமானது, ஆறுதல் தருவது. இப்போது எனக்கும் ஒரு பிரச்சினை. அதைப் பிரச்சனை என்பதை விட இதயவலி என்பதே சாலப் பொருத்தமானது.

அருளாசான் அண்ணா! என் வயது 23. நான் நல்ல சிவப்பு நிறம். என் அழகிற்கும் குறைவில்லை. க.பொ.த உயர்தரம் வரை கல்வி கற்றிருக்கிறேன்.

நான் ஓ.எல். படிக்கும் போது என்னை ஒருவர் காதலித்தார். அவர் நல்ல பணக்காரர். அவரது காதலை முதலில் ஏற்றுக் கொள்ள மறுத்த நான், பின்னர் அவரைக் காதலிக்கத் தொடங்கினேன். என்றாலும் காதலில் பைத்தியம் பிடித்து அலையவில்லை. தினம் காலையிலும் மாலையிலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்தித்து ஐந்து நிமிடங்கள் கதைப்போம். அத்தோடு சரி.

நான் ஏ.எல். படிக்கும் போது அவர் திடீரென வெளிநாடு போனார். தன் அப்பாவின் பணத்தில் வாழ விருப்பமில்லையென்றும், சொந்தமாக உழைத்துச் சம்பாதித்து, பின்னர் இங்கு வந்து தனியாக வியாபாரம் செய்யப் போவதாகவும் கூறிவிட்டுத்தான் சென்றார். யாருடைய தயவுமில்லாமல் சொந்தக் காலில் நிற்க வேண்டுமென்ற அவரது இலட்சியம் எனக்குப் பிடித்திருந்தது.

இரண்டரை வருடங்களுக்குப் பிறகு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் வெளிநாட்டிலிருந்து வந்தார். இந்த இரண்டரை வருடத்துக்குள் என் நண்பியின் விலாசத்திற்குப் பல கடிதங்களை அவர் எனக்கு எழுதியிருக்கிறார். அதற்கு பதில்களையும் நான் போட்டிருக்கிறேன். அந்தக் கடிதங்கள் மூலம் எங்கள் காதல் மேலும் உறுதியாகியிருந்தது.

வெளிநாட்டிலிருந்து வந்த பின்னர் நான் அவரைச் சந்தித்தேன். யாரும் அறியாமல் என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டார். நானும் அவரை முத்தமிட்டேன். அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் இது தொடர்ந்தது.



அருளாசானே! இப்போது அவர் என்னுடன் உடலுறவு கொள்ள வேண்டுமென மிகவும் ஆசைப்படுகிறார். எனக்கும் ஆசைதான். ஆனால் திருமணத்திற்கு முன்னால் அப்படியெல்லாம் நடக்கக்கூடாது என்று வைரக்கியமாக இருக்கிறேன்.

இது அவருக்குப் பிடிக்கவில்லை. என் மீது சந்தேகப்படுகிறாயா? எவ்வளவு காலம் போனாலும் நான்தானே உன்னைத் திருமணம் செய்யப் போகிறவன். என் ஆசைக்கு இணங்கு. இல்லாவிட்டால் என்னை மறந்துவிடு!" என்று கூறுகிறார்.

அருளாசான் அண்ணா! நான் என்ன செய்வது? இவ்வளவு தூரம் நெருக்கமாக அவரிடம் பழகிவிட்டு, ஒருவேளை இந்த விடயத்தில் கோபித்துக் கொண்டு அவர் என்னைத் திருமணம் செய்யாவிட்டால் என்ன செய்வது? ஆனால், திருமணத்திற்கு முன்னர் உடலுறவு கொள்வதும் தப்புத்தானே? நான் என்ன செய்யட்டும்? என் தலையே வெடித்துவிடும் போலுள்ளது. தயவுசெய்து எனக்கு நல்லதோர் ஆலோசனை தருமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**வித்யா,**
**திருகோணமலை.**

**அன்புச் சகோதரி வித்யாவுக்கு,**

"இடி" பத்திரிகை மீதும் எனது ஆலோசனைகள் மீதும் நீங்கள் கொண்டுள்ள மதிப்புக்குஎன் மனமார்ந்த நன்றிகள்.

உங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இதயவலி, நெஞ்சுநோவு மிகமிகச் சாதாரணமானதே. தெளிவாக யோசித்து முடிவுக்கு வரும் போது இந்த வலி தானாகவே விலகிவிடும்.

சகோதரி! பெண்களை அனுபவிக்க ஆண்கள் கையாளும் எத்தனையோ தந்திரங்களில் இதுவும் ஒன்று. நீங்கள் உடலுறவுக்கு சம்மதிக்கா விட்டால் உங்களைத் திருமணம் செய்ய மாட்டேன் என்று உங்கள் காதலர் கூறியிருப்பதிலிருந்து அவர் உங்கள் அழகான உடலை மட்டும்தான் காதலிக்கிறார் என்று நிச்சயமாக முடிவு செய்யலாம்.

காதல் வேறு, காமம் வேறு. காதலோடு காமமும் கலக்க வேண்டியது கல்யாணத்தின் பின்னர்தான். ஆனால் உங்கள் காதலர் உங்களை அனுபவித்துவிட வேண்டுமென்பதில் மட்டும்தானே குறியாக இருக்கிறார்!

ஒருவேளை, உங்களைத் திருமணம் செய்யும் நோக்கம் உண்மையாகவே அவருக்கிருந்தாலும், உங்கள் மீது கொண்டிருக்கும் "அதீத ஆசை" அவரை இப்படியெல்லாம் பேசத் தூண்டியிருக்கலாம். எனவே, திருமணத்தின் முன்னர் உடலுறவு என்பது கலாசாரத்திற்கும், பண்பாட்டிற்கும் எத்தனை மாசு கற்பிக்கும் என்பதைப் பக்குவமாக அவருக்கு எடுத்துச்சொல்லி, அந்த எண்ணத்தை அவரது மனதிலிருந்து அப்புறப்படுத்தப் பாருங்கள். அது சரிப்பட்டு வரவில்லையென்றால், அவருக்கு ஒரு "குட்பை" சொல்லிவிட்டு ஒதுங்கிவிடுங்கள்.

**ஆலோசனை: அருளாசான்**




## எண் 03

**(சந்திரன்)**

தன்னுடைய கௌரவம், தனது நற்பெயர், கீர்த்தி, புகழ் என்பவற்றை உயிருக்கு சமனாக எண்ணி வாழ்வோர் 3ம் எண்காரர்களாகும். தனது வயதைவிட மூத்தோரைக் காணுமிடத்து, அவர்களுக்கு தக்க மரியாதை செய்யும் இந்த மூன்றாம் எண்காரர்கள் 3, 12,21,30 ஆகிய திகதிகளிற் பிறந்தவர்களும், திகதி - மாதம்-வருடம் மூன்றையும் கூட்டி வரும் எண் 3ஆக இருப்பவரும் ஆவார்கள். இதில் எந்த எண் ஆதிக்கம் கூடியதோ அந்த எண்ணின் பலனே கிடைக்கும்.

மூன்றாம் எண்காரர்கள் கடின உழைப்பாளிகள். மற்றவர்களிடம் வேலை வாங்குகையில் கண்டிப்பானவர்கள் போலத் தோன்றும் இவர்கள் உண்மையில் தங்கமான மனசுக்காரர்கள்.

மற்றவர்களுக்கு ஏதேனும் கஷ்டம், துன்பம் வந்துவிட்டால் அது தமக்கே வந்துவிட்டது போற் கலங்கும் குனமுடைய 3ம் எண்காரர்கள் ஒழுக்கத்திலும் சிறந்தவர்கள். யாரிடமிருந்தும் உதவிகளை எதிர்பார்க்காத இவர்கள், எல்லோருக்கும் உதவிகள் செய்வதில் முன்னிற்பார்கள்.


தன்னுடைய முயற்சியினாலும் நற்குணத்தினாலும் சிறப்பான பதவிகளை அடையும் 3ம் எண்காரர்கள், தங்களுடைய பதவிக்குத் தாங்கள் பொருத்தமானவர்களேயென்று உலகிற்கு நிரூபணம் செய்வார்கள். அந்தளவுக்குத் திறமைசாலிகள்.

3ம் எண்காரரை இருபிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவினர் தன்னம்பிக்கையுள்ளவர்கள். மற்றையோர் தன்னம்பிக்கை அற்றவர்கள். இவர்களில் தன்னம்பிக்கையுள்ளவர் தனது கருத்தை உறுதியாக எங்கும், எப்போதும் வலியுறுத்தத் தயங்கமாட்டார்கள். மற்றவர்களிடமிருந்து யோசனைகள் கேட்காமல் தான் தீர்மானித்த விடயத்தில் விடாப்பிடியாக இருந்து முயற்சியோடு உழைப்பர். எதிரிகள் எப்பேர்ப்பட்டவர்களாக விருந்தாலும் அவர்களோடு அஞ்சாமல் மோதுவர். வெற்றி அல்லது வீர மரணம் என்பதற்கொப்ப வாழ்வர்.

ஆனால் 3ம் எண்காரர்களிற் தன்னம்பிக்கையற்றவர்கள் எதனையும் பலமடங்கு யோசித்து, இறுதியில் ஒன்றுமே செய்யாமல் இருந்துவிடுவார்கள். இதனால் வீணாக நட்டமே அடைவார்கள். எனவே, நம்பிக்கையீனத்தை விரட்டி விட்டு, நம்பிக்கையுடன் இவர்கள் வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டும்.

3ம் எண்காரர்களிற் சிலர் இளைஞராகிவிட்ட போதும் குடும்பத்தினருக்காகப் பல தியாகங்கள் செய்து வாழ்கிறார்கள். இதனால் இவர்களுடைய சொந்த முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. அது மட்டுமன்றி தமது சிறப்பான யோசனைகளால் இவர்களில் அநேகம் பேர் மற்றவர்களின் உயர்வுக்குக் காரணமாகிறார்களே தவிர, தாம் முன்னேறுவது கிடையாது. இந்த நிலைமையிலிருந்தும் இவர்கள் விடுபட வேண்டும்.

(தொடரும்...)




உலகக் கோப்பையை கோட்டை விட்டது பற்றி இந்திய அணியிடம் கேட்டால் என்ன் சொல்லும்?

**—பி.மதன்,** *பாணந்துறை.*

சீ...சீ அந்தப் பழம் புளிக்கும்.




"ரெறிஸ்ட்" படம் பார்த்தீர்களா? அது பற்றிச் சொல்லுமேன் தாமரை?

**—சுகிர்தா,** *வவுனியா.*

ஈழத் தமிழரின் போராட்டத்தின் மீது கொண்ட மதிப்பாலோ, அல்லது பிழைப்பிற்காகவோ ஈழத் தமிழ் போராட்டத்தை கருவாக்கி படம் எடுப்பவ்ர்களே! உண்மையை அறிய முயற்சியுங்கள். கற்பனையில் குதிரை ஓட்ட இதுவொன்றும் உங்கள் கள்ளிக் காடல்ல. வீரமும் தியாகமும் நிறைந்த வன்னிக் காடு.

இன்று முதல் தரத்தில் இருக்கும் வானொலியைச் சேர்ந்தவர்கள் அவ் வானொலியை வளர்த்தெடுத்தவர்களை மறந்து தம்மைத் தாமே உயர்த்திப் பேசுகிறார்களே. இது முறையா தாமரை?

**—அ.சுகுமாரி,** *அக்கரைப்பத்தனை.*

ஏற்றி வைத்த ஏணிகளை மறந்து கொக்கரிக்கும் கோழிகள். நாளை நமதில்லை என்பதை உணர மாட்டார்கள்.

அமெரிக்கா ஈராக் சண்டையை நிறுத்திக் கொள்ளுமா?


**எச்.மோகன்,** *வவுனியா.*

ஈராக் தங்க முட்டை போடும் வாத்து. பிடிப்பதற்கே அமெரிக்காவின் இந்தக் கூத்து.

ஈழக் கிணற்றில் ஊறத் தொடங்கியிருக்கும் தண்ணீரைப் பிரிக்கும் முயற்சி இப்போது இடியப்பச் சிக்கலாகி இருக்கிறதே?

**—எம்.எஸ்.நஸீஹா,** *ஏத்தாலை.*

இருபது வருடங்களாக தாங்கொணாத இழப்புகளை தாங்கி, இரத்த



வியர்வை சிந்தி கிண்டிய கிணற்றில் ஊறத் தொடங்கியிருக்கும் தண்ணீரை கிணறு வெட்டியவன் தானே முதலில் பருக வேண்டும்.

நடந்து முடிந்த கிரிக்கட் திருவிழா பற்றி சொல்லுங்களேன்?

**—எஸ்.ஜெகன்,** *காச்சிக்கடை.*

அமெரிக்கக் குண்டுகளால் உடல்கள் சின்னா பின்னமாக, இரத்த ஆற்றில் நீந்தி அழுது துடிக்கிறது ஒரு சமூகம். குடித்துக் கூத்தாடி கிரிக்கெட் போட்டி வைத்து கும்மாளமிடுகிறது இன்னொரு சமூகம். இரண்டுமே திருவிழாவென ஒரே தொலைக்காட்சியில் பார்த்து மகிழ்கிறது மற்றொரு சமூகம், மனித மனங்கள் இப்படியேன் மரத்துப் போனது.

கல்வி என்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**—எலிசபெத்மேரி,** *டெல்டிவிசன்.*


இரண்டறக் கலந்து வழி நடத்த வேண்டிய வாழ்க்கையின் காதலன்.

என்னைப் பார்க்கும் போதெல்லாம் என் காதலனுக்கு ஏதோ ஞாபகம் வருகுது என்கிறார். என்னவாக இருக்கும் தமாரை?

**—எம்.என்.எம்.சர்மிளா,** *புத்தளம்.*

உமது தங்கையின் ஞாபகம் வருகிறது போல உமது காதலருக்கு!

ரி.வி ஒன்று தொடங்கப் போறேன். ஏற்கனவே இருக்கும் ரி.விகளை மிஞ்ச நான் எப்படி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க வேண்டும்?



**—எலிசபெத்மேரி,** *டெல்டிவிசன்.*

முன்னிரவு பத்து மணிக்கு மனம் திறக்கிறார் மாலினி. திரைக்கு வந்து சில நாட்களே ஆன கப்பலோட்டிய தமிழன், சித்தி தொடரில் எட்டு முழ



புட வை கடடி துரததத துரததக காதலிக்கும் யுவராணி ஜீன்சும் சின்ன பெனியனும் அணிந்து எமது சித்தப்பா தொடரில் குலுங்கிக் குலுங்கி ஆடி நம்மையும் ஆட்டம் போட வைக்கிறார். உங்கள் உல்ட்டா ரி.வி இல். காணத் தவறாதீர்கள்.

8வது உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்றும் என்று பலரும் எதிர் பார்த்திருந்த வேளை இந்தியா படு தோல்வியடைந்து வாழ்க்கையை வெறுக்கச் செய்துவிட்டதே?

**—என்.நிரோசன்,** *கொழும்பு 15.*

தோல்விகள் மனதைப் பாதிப்பதில்லை. எதிர்பார்ப்புகளே மனதை அதிகம் பாதிக்கின்றன.

தாமரையே நீங்கள் பெண்ணா? திருமணமானவரா? ஆகாதவரா?

**—எம்.எச்.எம்.இர்பான்,** *காத்தான்குடி.*

உங்கள் உடம்பு எப்படியிருக்கிறது?

# இளைய கேசரி

தயாரிப்பு: எம்.எம்.ஏ.ஸமட்

## எண்ணமே வாழ்வு

### வாசக நெஞ்சங்களோடு...

“மகிழ்ச்சியான எண்ணங்களை நினைப்பதால் நாமும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். கவலையானவற்றை நினைப்பதால் நாமும் கவலையாக இருக்கிறோம். பயங்கரமான எண்ணங்களினால் நாம் பயந்து போய் விடுகிறோம். தோல்வியைப் பற்றி எண்ணிக் கொண்டிருப்பதால் நமக்குத் தோல்வியே கிடைக்கிறது. வெற்றியை எண்ணிக் கொண்டால் வெற்றி கிட்டுகிறது.

ஆதலால் எதிர்மறையான எண்ணங்களில் ஈடுபடுவதை விட்டு விட்டு உடன்பாடான முறையில் சிந்திக்கப் பழக வேண்டும். வாழ்க்கையில் வெற்றிகளை அடைவது எப்படி? நம்முடைய காரியங்களைச் சாதித்துக் கொள்வது எப்படி? பிறர் மேலுள்ள வெறுப்பைக் கை விட்டுப் பரிவோடு இருப்பது எப்படி? இவ்விதமாக சிந்திக்கும் போது வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க வழிகள் பிறக்கும்.

எனவே, நல்ல எண்ணங்களை வளர்த்து நாமும் வாழ்க்கையை அனுபவிப்போம்!

தோழமையுடன்,

– தயாரிப்பாளர்.

## எப்படி முத்தமிடுகிறீர்கள்?



அழுந்த முத்தமிடுபவர் தீர்மான மானவர். அன்பும் அரவணைக்கும் பண்பும் உள்ளவர். எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர். முத்தமிடும் போது கண்கள் மூடியபடி இருந்தால் நீங்கள் வசீகரமானவர். காதல் வயப்பட்டு நாடுவதை ரசித்து மகிழ்வீர்கள். உங்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள விரும்புவீர்கள்.

மூக்கு, நெற்றி, கன்னம் என்று முத்தமிடுபவராய் இருப்பின் நீங்கள் காதல் மோகம் மிக்கவர். அசாதாரணமானவர். கழுத்தில் அழுத்தமான முத்தம் கொடுப்பவராக இருந்தால் வழக்கத்தை மீறிச் செயலாற்றுபவர். கண்கள் திறந்தபடி முத்தமிடுபவராயிருந்தால் உண்மையை விரும்பி, நடப்பதை அறியும் ஆவல் உங்களுக்கு அதிகம். உங்கள் உறவில் காதல் புதுமைக்கு முதலிடம் இராது.

முத்தமிடும் போது தட்டிக் கொடுப்பவராயிருந்தால் செக்ஸ் விரும்பி. வாழ்க்கையின் எல்லா அம்சத்தையும் ரசிப்பவர். இறுக்கி முகவாயை பிடித்து முத்தமிட்டால் சூழ்நிலையைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்த விரும்புவீர்கள். குடும்பத்திற்கு ஓர் அரணாக இருந்து மற்றவர்களுக்கும் பாதுகாவலாக இருப்பீர்கள்.

முத்தமிடுவதற்கு ஏற்ப வாயை மணக்கும்படி வைத்திருப்பவராய் இருப்பின் மற்றவர்களின் உணர்ச்சிக்கு மதிப்புத் தருபவர். எது விஷயத்திலும் கவனமாக இருப்பவர். உங்களுக்குச் சுத்தம், அழகு இரண்டும் முக்கியம்.

சிறுசிறு முத்தமாகத் தொடங்கி நேரத்தை நீடித்து முத்தமிடுபவராய் இருப்பின் நீங்கள் எச்சரிக்கையானவர். உடனடியாக எதற்கும் உடன்படமாட்டீர்கள். முடிவு எடுப்பதற்கு மூன் நன்கு அலசி ஆராய்வீர்கள்.

பொதுவான இடங்களில் முத்தமிடுபவராயின் திட்டமிடாதவர். உணர்ச்சியை வெளிக்காட்டத் தயங்காதவர். மற்றவர்களிடம் மனம் திறந்து உண்மையுடன் பழகுவீர்கள்.

## சொர்க்கமான நரகம்

குட்டிக்கதை

ஒருவன் நரகத்திற்கு அனுப்பப்பட்டான். அங்கே பல நாடுகளின் நரகங்கள் இருந்தன. விரும்பிய எந்த நாட்டின் நரகத்திற்கும் போய்த் தண்டனையை அனுபவிக்கலாமென நரகத்திற்குப் போனவனுக்குக் கூறப்பட்டது. முதலில் அமெரிக்க நரகத்திற்குப் போனான். அங்கே ஜோர்ஜ் புஷ் வாயைத் திறந்து கொண்டிருந்தார். இவரிடம் போனால் ஈராக்கைக் கொளுத்துவது போல் தன்னையும் கொளுத்தி விடுவார் என்று பயந்தவன் ரஷ்ய நரகத்திற்குப் போனான். அங்கே விளாடிமிர் புட்டின் இருந்தார். இதுவும் வேண்டாமென்று ஆபிரிக்க நரகத்திற்குப் போனான். அங்கே ஆபிரிக்கப் பழங்குடிப் பெண்கள் நிர்வாணமாக நடனமாடிக் கொண்டிருந்தனர். “ஐயோ...!” என்றபடி இந்திய நரகத்திற்குப் போனான். இந்திய நரகத்தின் அதிகாரியாக ஜெயலலிதா இருக்கவே பயந்து போய் இலங்கை நரகத்திற்கு வந்தான். அங்கு நுழைவதற்குத்தான் பல்வேறு நாடுகளையும் சேர்ந்தோர் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். ஆனால் ஒவ்வொருவர் கையிலும் 100, 200 ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. “என்ன, ஏது?” என்று இவன் விசாரித்த போது கியூவில் நின்றவர்கள் சொன்னார்கள்,

“இங்கே இலங்கை அதிகாரி ஒருவர்தான் பொறுப்பாளர். லஞ்சம் கொடுத்துவிட்டால், தண்டனையே கிடையாதாம்!”

-“ஆஹா... என் சொர்க்கமே!” என்று கூவியபடி, இவனும் அந்தக் கியூவில் இணைந்து கொண்டான்.

–நிலா

## அலுவலகத்திலே...!

‘டெட் போலொக்’ என்பவர் பிரபல ஆசிரியர். அவர் தன் நூலில் பின்வருமாறு எழுதுகிறார்.

உங்களுடைய அலுவலகத்திற்கு நேரகாலத்துடன் போவது நல்லது. அன்றைய தினம் செய்ய வேண்டிய வேலைகளைச் கிரமமாக ஒரு காகிதத்தில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். பிறகு முக்கியமானதை முதலில் தொடங்குங்கள். ஒவ்வொரு வேலையையும் அதை எப்போது முடிக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். எப்பாடுபட்டாலும் அதன்படி முடிக்க உறுதி கொள்ளுங்கள்.



மேசையை ஒழுங்குபடுத்துவது, பென்சிலைச் சீவுவது, தினசரி தாளைப் புரட்டுவது, ஒரு கப் தண்ணீர் தேநீர் அருந்துவது போன்றவைகளில் ஈடுபட்டு விட்டு, இவ்வளவு நேரம் ஓடி விட்டதேயென வியப்படையாதீர்கள்.

ஒவ்வொரு வேலையையும் முடித்தவுடன் உங்களுக்காக ஒரு பரிசை நீங்களாகவே நிர்ணயித்துக் கொள் ளுங்கள். ஒரு கப் கேரப்பி, ஒரு சாக்லெட், ஒரு நல்ல சினிமா... இது போல அந்த வேலையைத் திருப்தியாக முடித்தவுடன் அப்பரிசை உங்களுக்கு வழங்கிக் கொள்ளுங்கள்.

உங்களுடைய டெலிபோன் பேச்சு சிறியதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கட்டும். முக்கியமான விடயமாக இருந்தால் முதலில் அதைக் காகிதத்தில் குறித்துக் கொண்டு பேசுவது நல்லது. டெலிபோனில் மறுமுனையிலுள்ளவர் சொல்லும் பதிலையும் அந்தக் காகிதத்திலேயே குறித்துக் கொள்வது நல்லது.

வேலையை செய்து முடிக்க பழைய முறை ஒன்றிருந்தாலும் நீங்களே யோசித்து நன்மை பயக்கும் புதிய முறையைக் கண்டுபிடியுங்கள். ஆழ்ந்து சிந்தித்தால் புதிய முறை நிச்சயம் கிடைத்து விடும். உங்கள் அலுவலகத்தில் உள்ள கம்பியூட்டர், நகல் எடுக்கும் இயந்திரம், டெலிபோன் போன்றவைகளை தேவையான அளவுக்கே பயன்படுத்துங்கள்.

நீங்கள் கடிதத்தைப் படிக்கும் போதே ஒரு குறிப்பேட்டில் எழுத வேண்டிய பதிலை எழுதி வையுங்கள். பின்னர் அதைப் பார்த்து நீங்களோ அல்லது உங்கள் செயலாளரோ பதில் எழுத வசதியாக இருக்கும்.

உங்களுடைய நேரத்தை முழுமையாகப் பயன்படுத்துங்கள். ரயிலுக்காக அல்லது பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் நேரம், அவற்றில் பயணம் செய்யும் போது உங்களுடைய பிரச்சினைகளின் தீர்வுகளைப் பற்றி சிந்திக்கலாமல்லவா!

எவ்வளவு நேரத்தை எந்த விஷயத் தில் வீணாக்கினீர்கள் என்று தின மும் மாலை உங்கள் தனிப்பட்ட குறிப்பேட்டில் எழுதிக் கொள்ளுங் கள். மீண்டும் அவ்வாறு வீணாக்கா திருக்க அது உதவும்.

ஒரு வேலையைத் தொடங்கும் பொழுது, அதன் தகுதியை பண அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்து ஆரம்பியுங்கள். உங்களுக்கு ஒரு மணி நேர வேலைக்கு இவ்வளவு ஊதியம் தரப்படுகிறது என்பதைக் கணக்கிட்டால் இது தெரிந்து விடுகிறது.

## ஜோக்ஸ்

ரவி : “அவர் படு கஞ்சன்...”

ரமேஸ்: “எப்படிச் சொல்றே?”

ரவி : “டூத் பேஸ்ட், டூத் பிரஷ் வாங்க பணம் செலவாகுமேனு நினைச்சு தன்னோட முப்பத்திரண்டு பல்லையும் எடுத்துட்டார்னா பாரேன்டா!”



## மனிதாபிமானம்!

அறுபடும் நாளெனத்
தெரியாது -
அதிகாலையில்
கூவியெழுப்பியதெனக்
கொண்டைச் சேவல்...
எழுப்பிய நன்றிக்காய்
அறுப்பை
மறு நாளைக்குத் தள்ளிப்
போட்டேன்!

– நிலா

## பயிற்சி நெறி

சுகாதார சேவை திணைக்களத்தின் கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு திருமணமாகாத ஆண், பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 15.04.2003 ஆகும். மேலதிக விபரங்களுக்கு 14.03.2003 வெளியாகிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

## தக்காளி சோஸ் (Tomato Source) தயாரிப்பு

நகர் புறங்களிலும், கிராமப் புறங்களிலும் சோஸை மக்கள் பயன்படுத்துகிறார்கள். பெரிய நடுத்தர ஹோட்டல்கள், வாடி வீடுகள், உணவு விடுதிகளில் தக்காளி சோஸுக்கான கிராக்கி அதிகம் உள்ளது. இதனால் சந்தை வாய்ப்புள்ள கைத் தொழிலாக இதனை மேற் கொள்ளலாம்.

சொந்தச் சிறகுகளில் பறப்போம்

**தேவையான மூலப் பொருட்கள்:-**


தக்காளிப் பழம், சீனி, வினாகிரி, வெள்ளைப்பூடு, இஞ்சி, மிளகாய்த்தூள், உப்பு

**உபகரணங்கள்:-**

சூடாக்கும் பாத்திரம் 01, சோஸ்பான்கள் 02, வடி 01, வாயு அடுப்பு, (சாதாரண அடுப்பும் பயன்படுத்தலாம்) கரண்டிகள், துப்பரவு செய்யப்பட்ட போத்தல்கள்.

**செய்முறை:-**

நன்கு பழுத்த தக்காளிப்பழங்களைத் தெரிந்தெடுத்து கழுவிச் சுத்தம் செய்தல் வேண்டும். இவற்றைப் பாத்திரம் ஒன்றில் இட்டு 5 நிமிடங்கள் சூடாக்க வேண்டும். பின்னர் பழங்களின் மேல் தோலை உரித்தெடுத்து அவற்றைப் பிசைதல் வேண்டும். இதனைப் பின்னர் பிளாஸ்ரிக் வடியினால் வடித்து விதைகளை வேறாக்க வேண்டும்.



எடுக்கப்பட்ட சாறு கொதிக்க வைக்கப்படுகையில் சீனி, வினாகிரி ஆகியவையும் இஞ்சி, கறுவா, உள்ளி, கராம்பு ஆகியவற்றின் தூளும் சேர்க்கப்பட வேண்டும். அளவான போத்தல்களில் வார்த்து இறுக மூடி வைத்தல் வேண்டும்.

## உள்ளூர் வேலை வாய்ப்பு

### இலங்கை புகையிரத திணைக்களம்

உப புகையிரத நிலையங்களிலுள்ள உப புகையிரத நிலைய அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பங்களுக்கான முடிவுத் திகதி 22.04.2003 ஆகும். இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிய 2003.03.14ம் திகதி வெளியாகிய அரசாங்க வர்த்தமானியைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

# விளையாட்டு

எம். ஐ. அகமட் கபீர்

# சமையல் செய்வதில் கெட்டிக்காரர்

## 2003 உலகக் கிண்ண ஆட்ட நாயகன் – சச்சின் டெண்டுல்கர் பற்றிச் சில சுவாரஷ்ய செய்திகள்.

நூற்று அறுபத்தெட்டு பக்கங்களை கொண்ட 'சச்சின் மாஸ்டர்.'.புல்' என்கிற ஆங்கிலப் புத்தகம்



ஒன்று கடந்த வருடத்தில் வெளியாகியிருக்கிறது. ஈ மொய்ப்பது போல கிரிக்கெட் ரசிகர்கள் அந்தப் புத்தகத்தை மொய்த்து வருகிறார்கள். காரணம் இந்திய கிரிகெட் உலகின் பிராட்மெனான சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கையில் நடந்த சுவையான சம்பவங்களைப் பட்டியலிடுகிறது அது. கிரிக்கெட் லை.'.ப்ஸ்டைல், கிரிக்கெட் வேர்ல்ட் பத்திரிகையின் ஆசிரியரான பீட்டர் கிர்ரேவும், பிபிசி விளையாட்டு விமர்சகர் ஆஷீஷ் , சுக்லாவும் இணைந்து எழுதியிருக்கும் இந்தப் புத்தகத்திலிருந்து சில பகுதிகள்:

"அப்பொழுது எனக்கு பன்னிரண்டு வயது. நான் கிரிக்கெட்டில் தீவிரமாகப் பயிற்சி செய்து கொண்டிருந்த காலம் அது. எனது பயிற்சியாளர் அச்ரேக்கர் எனக்குப் பயிற்சி கொடுத்த விதமே ஒரு அலாதிதான். நான் பேட்டிங் செய்யும் போது எனக்குப் பின்னால் இருக்கும் ஸ்டெம்ப்புகளின் மேல் ஓர் ஒரு ரூபாய் நாணயத்தை வைத்து விடுவார். யார் என்னை அவுட் பண்ணுகிறார்களோ அவர்கள் அந்த ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக் கொள்ளலாம். அதே நேரம் அவுட் ஆகாமல் இருந்தால், அந்த நாணயத்தை நான் எடுத்துக் கொள்ளலாம். இப்படி வித்தியாசமான விதிமுறை.

சிலமுறை நான் தோற்று இருந்தாலும், நிறைய முறை வென்றும் இருக்கிறேன். அப்படிப் பெற்ற காசுகளை இன்றைக்கும் பத்திரமாகப பாதுகாத்தும் வருகிறேன்.

அந்தக் காலகட்டத்தில் காலை ஏழு மணியிலிருந்து ஒன்பது மணி வரையிலும், மாலை மூன்றிலிருந்து ஆறு வரையிலும் பயிற்சி செய்து வந்தேன். ஒரு கட்டத்தில் இப்பயிற்சிக்கான கால அளவு போதாது என்று எனக்குள் தோன்றியது. உடனே, காலை ஒன்பது மணியிலிருந்து இரவு ஏழு மணி வரை பயிற்சி எடுக்க ஆரம்பித்தேன்.

நான் பேட்டிங்கில் அதிக கவனம் செலுத்தி வந்தாலும் எனக்கு ஆசையெல்லாம். வேகப்பந்து வீச்சாளராக வேண்டும் என்பதுதான். அதற்காக நிறைய முயற்சி செய்தேன். இது பலருக்குத் தெரியாது. இந்த வேகப்பந்து வீச்சிற்காக சென்னையி லுள்ள எம்.ஆர்.எப்.'. பேஸ் பவுண் டேஷனில் டென்னஸ் லில்லியிடம் பயிற்சியும் பெற்றேன்" என்று இந்தப் புத்தகத்தில் ஓரிடத்தில் குறிப்பிடுகி றார் சச்சின்.

சச்சின் டெண்டுல்கரின் முதல் டெஸ்ட் போட்டி கராச்சியில் பதினான்கு வருடத்திற்கு முன்பு அரங்கேறியது. அப்பொழுது அந்தப் பொடிப் பையனைப் பார்த்து. இந்தியன் கிரிக்கெட் போர்டில் இருந்த உறுப்பினர்களும், டீமில் இருந்த கிரிகெட் பிளேயர்களும் ஆச்சரியப்பட்டார்கள். 'ஒரு டிரைவிங் லைசென்ஸ் எடுக்கக் கூட போதுமான வயது இல்லாத இந்தப் பையன், இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் நடக்கும் டெஸ்ட்டில் எப்படித் தாக்குப் பிடிக்கப் போகிறான்' என்று நிறைய பேர் சந்தேகப்பட்டார்கள். ஆனால், அந்த மேட்சின் போது சச்சினை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தியது ஸ்ரீகாந்த்தான்.

கிரிகெட் விளையாட்டைத் தவிர, கில்லி தண்டால் விளையாட்டிலும் சச்சினுக்கு சின்ன வயதில் ஆர்வம் இருந்து. நேரம் கிடைக்கும் போதெல்லாம். வாடகை சைக்கிளை எடுத்துக் கொண்டு ஊரைச் சுற்றிக் கொண்டேயிருப்பது சச்சினின் இன்னொரு விருப்பம். சச்சினைச் சுற்றி எப்பொழுதும் ஒரு இளம் பட்டாளம் இருந்து கொண்டே இருக்கும். அந்தப் பட்டாளத்தில் புதியவர்கள் யாராவது இணைய விரும்பினால், முதலில் சச்சின் அந்தச் சிறுவனிடம் வம்பு இழுத்துச் சண்டை போடுவார். இரண்டு பக்கமும் கைகலப்பு நடைபெறும். இதெல்லாம் கொஞ்ச நேரம் தான். பிறகு சமாதானக்கொடியை சச்சின் காட்டி அப்படியே அவரை அரவணைத்துக் கொள்வார்.

சச்சின் ஒரு இசைப் பிரியர். ஏன், வெறியர் என்று கூடச் சொல்லலாம். கிரிக்கெட் பேட் கையில் இல்லாத நேரங்களில் வாக்மேன் அவர் காதில் இருக்கும். ஒருமுறை டெல்லி சென்ற போது அஜய் ஜடேஜா வீட்டிற்குச் சென்றார். இந்திய கிரிகெட் குழுவினரோடு ஜாலியாகப் பேசிக் கொண்டிருந்த சச்சினை திடீர் என்று காணவில்லை. தேடிப் பார்த்தால் சமையல் கட்டில் ஏதோ செய்து கொண்டிருந்தார். கொஞ்ச நேரத்தில் மணக்க மணக்க கத்தரிக்காய் குழம்பு வைத்து நண்பர்களுக்குப் பரிமாற ஆரம்பித்து விட்டார்.

சமையல் செய்வதில் கெட்டிக்காரர் சச்சின் என்பது அப்பொழுது தான் மற்றவர்களுக்குத் தெரிய ஆரம்பித்தது.

# முரளிதரன் இல்லாவிட்டால் இலங்கையணி நாறிப் போய்விடும்!

-இரசிகர்கள் கூறுகிறார்கள்-

சார்ஜாவில் நடைபெறும் முக்கோண ஒருநாள் போட்டித் தொடருக்கு உலகப் புகழ் பெற்ற சுழற் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் சேர்க்கப்படாததையிட்டு இரசிகர்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டு வருகிறார்கள். முரளிதரனுக்கு ஏற்பட்டுள்ள வருத்தம்



காரணமாகவே அவர் அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லையென்று நொண்டிச்சாட்டுக்கள் கூறப்படுகின்ற போதிலும், இதில் ஏதோ "உள் நோக்கம்" இருப்பதாகவே கிரிக்கெட் அபிமானிகள் கருதுகிறார்கள்.

முத்தையா முரளிதரன் இலங்கை அணியின் உயர்வுக்கும், புகழுக்குமாகப் பல சாதனைகளைப் புரிந்தவர். முரளி என்ற பெயரைக் கேட்டாலே உலகத்தின் பிரபலமான துடுப்பாட்ட வீரர்கள் நாடி நரம்பெல்லாம் தளர்ந்து, கதிகலங்கிப் போவார்கள். அதற்கேற்ப தன் சிறப்பான பந்துவீச்சினால் முரளிதரனும் எதிரணித் துடுப்பாட்ட வீரர்களை கலங்கடிப்பார்.

தனக்காக ஆடாது, அணிக்காக ஆடுகின்ற கொள்கையுள்ள முரளிதரன் இந்த நாட்டின் மூவின மக்களினதும் ஏகோபித்த அபிமானத்தைப் பெற்றவர். சார்ஜா கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளத்தக்க வகையில் அவரது உடல் நிலை இருந்தும் தேர்வுக் குழுவினர் ஏன் தடுமாறிப் போகின்றனர் என்பது புரியவில்லை.

உங்களால் விளையாட இயலுமா, இயலாதா என்று கூட முரளியிடம் எவரும் கேட்கவில்லை. முரளிக்க உடல் உபாதையென்று ஜோஸியம் பார்த்தவர்கள் போன்றுதான் தெரிவுக்குழுவினரின் நடவடிக்கை அமைந்திருந்தது.

இலங்கை கிரிக்கெட் இரசிகர்களின் கோபத்தையும், அதிருப்தியையும் இதன் மூலம் சம்பாதித்துக் கொண்டுவிட்ட தேர்வுக்குழுவினரின் தெரிவை விளையாட்டமைச்சர் ஏற்றுக் கொள்ளாதது ஆறுதலான விடயம்.

ஏப்ரல் மாதத்திலிருந்து நியூசிலாந்துடனான டெஸ்ட் போட்டிகளிலும் இலங்கையணி விளையாடவுள்ளது. இந்தப் போட்டிக்கு முரளியின் பங்களிப்பு மிகவும் இன்றியமை யாததாகும்.

"முரளிதரன் இல்லாமல் இலங்கை அணி ஆடிப்பார்க்கட்டும். தோல்வி மேல் தோல்வி கண்டு அங்கு நாறிப்போய்விடும்!" என்று பல இரசிகர்கள் எம்மிடம் கருத்துக் கூறினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பு:- இந்தச் செய்தியை நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்திற்குள் முரளி அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பாரென்றே நம்புகிறோம். ■

# கவி முழக்கம்

## தாடி முகம்

என் வெண்மையான
முகத்தில்
தாடி வளர்வதைப் பார்த்து
காதல் தோல்வி என்று
நினைத்திருப்பாய்...!
நிச்சயமாக அதற்காகவல்ல
ஏன் தாடிமுகம் - உன்
தங்கைக்கு
பிடித்ததற்காக....!

பொத்துவில் - 09
ஜோ. பேரின்பராஜா

## நீ மட்டும்....

*என்னவளே...*
*என் இதயம்*
*நான்கு அறைகளைக்*
*கொண்டதுதான்.*
*அதற்காக வேண்டி....*
*நால்வரை நான்*
*குடியமர்த்த மாட்டேன்*
*நீ.... மட்டும் தான்*
*வாழ்வாய் ~ என்*
*இதயத்தில் என்*
*உயிர் உள்ளவரை!*

இளங்கவி கையூம்
காத்தான் குடி - 03

## தனிமை

எந்தத் தனிமை
எனக்கு
பிடிக்கும் என்று
எனக்குள்ளே
கேட்டுக் கொண்டேன்!

யாருமற்ற தனிமையில்
கனிவாய் பேசிக்கொள்ள
தூண்டும் இடமெல்லாம்
எனக்கு பிடிக்கும் என்றேன்.!

எந்தத் தனிமை
உனக்கு பிடிக்கும்
என்றது என் மனம்

கற்பனைக்கு
களங்கம்
ஏற்படாவண்ணம்
அமைதியான சூழல்
எனக்கு பிடிக்கும்
என்றேன்!

மல்லிகை வீ. ஸ்ரீதரன்
மூதூர்.

## ஏன் மறந்தாய்

என்னவளே,
உன்னை எண்ணி
உனக்காகவே
வாழும் என்னை
ஏனின்று வெறுக்கிறாய்?

என்னை
எடுத்தெறிந்து விட்டு நீ
எட்டப் போனாலும் உன்னை
எட்டி வைக்க
என் மனம்
இணங்க மறுக்கிறது

உயிரே,
உறங்கும் போதும்
உன்னையே நினைக்கிறேன்.
உன் காதலையே
தினம் யாசிக்கிறேன்
உன் அன்பை வேண்டி
அனுதினம் ஏங்குகிறேன்.

அன்பே,
உன்னில் உண்டான
மாற்றம் தான் எனக்கு
விளங்கவில்லை இன்னும்.
சொல், மனதார நேசித்தது
நான் மட்டுமா?
நீயும் தானே!?

எம். எஸ். நஸீஹா
ஏத்தாலை.

## உறக்கம்

அன்பே! இதழ்கள் எனும்
உனது இதயக்கதவை
திறந்து விடு - என்றும்
பனித்துளியாக வந்து உன்
மீது உறங்குவதற்காக....

தே. மதன்ராஜ்
மட்டக்களப்பு.

உங்கள் கவிதைகளும் கவி முழக்கம் பகுதியில் இடம் பெற வேண்டுமானால் முப்பது வரிகளுக் உட்பட்டதாக கவிதைகளை எழுதி போஸ் காடடிலோ அல்லது தபால் மூலமாகவோ எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**கவி முழக்கம்**
இடி- தமிழ்கேசரி
தர்மராஜ மாவத்தை
கொழும்பு - 03

புதுமைப்பித்தன் கதைகள் 6



# பொன்னகரம்

இலக்கியத்தில் இன்னதுதான் சொல்ல வேண்டும், இன்னது சொல்லக்கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக்கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல, சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர்நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால்தான் இப்படிச் சக்கர வட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக்கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக் களறியையும், மனக் குரூபங்களையும், விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போகப் போகிறது? இற்றுப்போனது எப்படிப் பாதுகாத்தாலும் நிற்கப் போகிறதா? மேலும், இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே? நாலு திசையிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், ஸினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம் - இத்யாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்தரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர் முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடை முறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை. (புதுமைப்பித்தன் கட்டுரைகள், 1954)

*-சுந்தரராமசாமி-*

**பொ**ன்னகரத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நமது பௌராணிகர்களின் கனவைப் போல் அங்கு ஒன்றுமில்லை. பூர்வ புண்ணியம் என்று சொல்லுகிறார்களே, அந்த தத்துவத்தைக் கொண்டு, நியாயம் என்று சமாதானப்பட வேண்டிய விதிதான். ஒரு சில "மகாராஜர்களுக்காக" இம்மையின் பயனைத் தேடிக்கொடுக்கக் கடமைப்பட்டு வசிக்கும் மனிதத் தேனீக்களுக்கு உண்மையில் ஒரு பொன்நகரந்தான் அது.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக, சாராய டிப்போவுக்குப் போகிறதே ஒரு சந்து, அதுதான் அங்கு "மெயின்" ரஸ்தா. கைகோர்த்த நான்கு பேர் வரிசை தாராளமாகப் போகலாம். எதிரே வண்டிகள் வராவிட்டால் இதற்குக் கிளையாக உள் வளைவுகள் உண்டு, முயல் வளைகள் போல்.

இந்தத் திவ்விய பிரதேசத்தைத் தரிசிக்கவேண்டுமானால்... சிறு தூறலாக மழை சிணுசிணுத்துக் கொண்டிருக்கும் பொழுது சென்றால்தான் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். வழி நெடுகச் சேற்றுக் குழம்புகள். சாலையோரமாக "முனிசிபல் கங்கை" - அல்ல, யமுனை தானே கறுப்பாக இருக்கும்? - அதுதான். பிறகு ஓர் இரும்பு வேலி, அதற்குச் சற்று உயரத் தள்ளி அந்த ரயில்வே தண்டவாளம்.

மறுபக்கம், வரிசையாக மனிதக்கூடுகள் - ஆமாம், வசிப்பதற்குத் தான்!

தண்ணீர்க் குழாய்கள்? இருக்கின்றன. மின்சார விளக்கு? ஞாபகமில்லை. சாதாரண எண்ணெய் விளக்கு, அதாவது சந்திரன் இல்லாத காலங்களில் (கிருஷ்ண பட்சத்தில்) ஏற்றிவைத்தால் போதாதா?

பொன்னகரத்துக் குழந்தைகளுக்கு "மீன் பிடித்து" விளையாடுவதில் வெகு பிரியம். அந்த முனிசிபல் தீர்த்தத்தில், மீன் ஏது? எங்கிருந்த பணக்கார வீடுகளிலிருந்தோ, சில சமயம் அழுகிய பழம், ஊசிய வடை, இத்யாதி உருண்டு வரும். அது அந்த ஊர்க் குழந்தைகளின் ரகசியம்.

ரயில்வே தண்டவாளத்தின் பக்கத்தில் விளையாடுவதில் என்ன ஆனந்தமோ? வேலி இருக்கத்தான் செய்கிறது. போகக்கூடாது என்ற சட்டம் குழந்தைகளுக்குத் தெரியுமா? "போனால்" பெற்றோருக்குத் தான் கொஞ்ச பாரம் ஒழிந்ததே! குழந்தைகள் தான் என்ன, கிளாக்ஸோ "மெல்லின்ஸ் பூட்" குழந்தைகளா, கம்பி இடையில் போக முடியாமலிருக்க? புகைந்தோடும் அந்த இரும்பு நாகரிகத்திற்கு, வரிசையாக நின்று "குட் மார்னிங் சார்!" என்று கத்துவதில் ரொம்ப ஆனந்தம் அவர்களுக்கு. அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் ஆரம்ப ஆங்கிலக் கல்வி.

ஐந்து மணிக்கு அப்புறம்தான் ஊர் கலகலவென்று உயிர் பெற்றிருக்கும் அப்பொழுதிருந்துதான் அவ்வூர்ப் பெண்கள் தங்கள் வேலையைச் செய்வார்கள். சாராய வண்டிகள், தண்ணீர் எடுக்க வரும் பெண்கள்! அங்கு தண்ணீர் எடுப்பதென்றால் ஒரு பாரதப் போர்.

இளவயதில் நரைத்தது போல் பஞ்சு படிந்த தலை, மாசடைந்த கண்கள்-விடியவிடிய மின்சார "ஸ்பின்டிலைப்" (கதிர்) பார்த்துக் கொண்டிருந்தால், பிறகு கண் என்னமாக இருக்கும்? கண்கள்தாம் என்ன இரும்பா? உழைப்பின் ஆரோக்கியத்தால் ஏற்பட்ட கட்டமைந்த அழகு. ஆரோக்கியமா? அது எங்கிருந்து வந்தது. பாக்டீரியா, விசக்கிருமிகள், காலரா இத்யாதி அங்கிருந்துதானே உற்பத்தி செய்யப்படுகின்றன. எப்படியாவது உயிர் வாழ வேண்டுமென்று ஆசை இருந்தால் எல்லாம் நடக்கும். பழைய கற்காலத்து மனிதன், புலி சிங்கங்களுடன் குகையில் வாழ்ந்து வந்தான்; அவைகளும் அவனைக் கொன்றன; அவனும் அவைகளைக் கொன்றான். அதற்காக வலிமையற்று, வம்சத்தை விருத்தி செய்யாமல் செத்தொழிந்தா போனான்? வாழ்க்கையே ஒருபெரிய வேட்டை, அதற்கென்ன?

கழுத்தில் ஒரு கருப்புக் கயிறு-வாழ்க்கைத் தொழுவின் அறிகுறி. அதைப்பற்றி அங்கு அதிக கவலையில்லை. அது வேறு உலகம், ஐயா, அதன் தர்மங்களும் வேறு.

அம்மாளு ஒரு மில் கூலி. வயது 20 அல்லது 22க்கு மேல் போகாது. புருஷன் "ஜட்கா" வைத்திருக்கின்றான்; சொந்த வண்டிதான். அம்மாளு, முருகேசன்(அவள் புருஷன்), அவன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை- ஆக நபர் ஐந்து. சேர்ந்து



அவர்கள் குடும்பம். இருவருடைய வரும்படியில்தான், இவைகள் சாப்பாடு (குதிரை உட்பட), வீட்டு வாடகை, பொலிஸ் "மாமூல்", முருகேசன் தம்பி திருட்டுத்தனமாக கஞ்சா அடிக்கக் காசு - எல்லாம் இதற்குள்தான். எல்லாரும் ஏகதேச குடியர்கள்தான். "டல் ஸீஸ்"னில் பசியை மறக்க வேறு வழி? பசி, ஐயா, பசி! "பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்" என்று வெகு ஒய்யாரமாக, உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே. அங்கு நீர் ஒரு நாள் இருந்தால் உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!

அன்றைக்கு முருகேசனுக்கு குஷி. அவனும், அவன் குதிரையும் "தண்ணி போட்டு" விட்டு ரேஸ் விட்டார்கள். வண்டி "டோக்கர்" அடித்தது. ஏர்க்கால் ஒடிந்தது. குதிரைக்குப் பலமான காயம். முருகேசனுக்கு ஊமையடி. வீட்டில் கொண்டு வந்து போடும்பொழுது பேச்சு மூச்சில்லை. நல்ல காலம் குடித்திருந்தான், இந்த மாதிரி வலி தெரியாமலாவது கிடக்க. வீக்கத்திற்கு என்னத்தையோ அரைத்துப் பூசினாள் அம்மாளு. அப்பொழுதான் சற்றுப் பேசினான். அவனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம். அம்மாளுவுக்குக் கூலிபோட இன்னும் இரண்டு நாள் இருக்கிறது. வீட்டில் காசேது?

அம்மாளு தண்ணீர் எடுக்க வருகிறாள்.

"கும்"மிருட்டு, பஞ்சாங்கத்தின்படி இன்றைக்குச் சந்திரன் வர வேண்டும். ஆனால் அது மேகத்தில் மறைந்துகொண்டால் முனிசிபாலிடி என்ன செய்ய முடியும்?

எப்பொழுதும் போல் இரைச்சல்தான். ஒருவாறு தண்ணீர் பிடித்தாய்விட்டது. திரும்பி வருகிறாள்.

சந்தின் பக்கத்தில் ஒருவன். அம்மாளுவின் மேல் ரொம்ப நாளாகக் "கண்" வைத்திருந்த...

இருவரும் இருளில் மறைகிறார்கள். அம்மாளு முக்கால் ரூபாய் சம்பாதித்துவிட்டாள். ஆம் புருஷனுக்குப் பால் கஞ்சி வார்க்கத்தான்!

என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!

*மணிக்கொடி,*
*6.5.1934.*

---

திடுக் - திகில் - திகைப்பு 07

# YU கில்?

தமிழ்தாசன்

"ஏய்... நான் யாருன்னு தெரியாம சேட்டை விடுறே; அப்புறம் ரொம்ப வருத்தப்படப் போறே!" என்று- நல்லவிதமாகச் சொல்லிப் பார்த்தாள் ரேகா. ட்ரைவர் கேட்கவில்லை. இனி வேறு வழியில்லையெனத் தீர்மானித்தவள்- கைப் பை திறந்து அந்தப் பெரிய கத்தியை எடுத்து- ட்ரைவரின் பின் கழுத்தில் வைத்தாள்.

"மரியாதையா சொல்றேன் ஆட்டோவை வந்த வழியாத் திருப்பி மெயின் ரோடுக்குப் போ. இல்லே- கத்தி டங்குனு கழுத்துக்குள்ள இறங்கும்!" இந்த திடீர் நிலைமையை ஆட்டோக்காரன் எதிர்பார்க்கவில்லை. நிலை குலைந்தான். திரும்பிப் பார்க்காமலேயே சொன்னான்.

"மன்னிச்சுக்கங்கம்மா... தெரியாமப் பண்ணிட்டேன்!" என்றான்.

"ம்... வண்டியைத் திருப்பி வந்த வழியால போ!" ரேகா சொல்ல- ஆட்டோக்காரன் ஸ்டியரிங் ஒடித்து ஆட்டோவைத் திருப்பினான். ஆனால்- திரும்பிய ஆட்டோ வேகமாய்ப் போய் எதிரிலிருந்த சுவற்றில் முட்டியது. இதனால்- பின் ஆசனத்திலிருந்த ரேகா தடுமாறி முன்னால் வீழ்ந்தாள். அவள் கையிலிருந்த கத்தியும் ஆட்டோவுக்குள் "ணங்" என்ற சத்தத்துடன் விழுந்து மறைந்தது. ஆட்டோக்காரன்- விகாரமாய் சிரித்துக் கொண்டு ரேகாவின் கையை எட்டிப் பிடித்தான். பின்னர்- அவளை பின் சீற்றில் அப்படியே தள்ளி- அவள் மேல் பாய்ந்தான்.

"ஐயோ...!" என்று அவலக்குரல் கொடுக்க முனைந்தாள் ரேகா. அதற்குள் ஆட்டோகாரன் அவளது வாயைப் பொத்தினான். ரேகா தன் உச்ச பலத்தைப் பாவித்து ஆட்டோகாரனைத் தள்ளினாள். ஆனால்- ஆட்டோகாரனின் பிடி மிகவும் இறுக்கமாக இருந்தது. ஒரு கையால் ரேகாவின் வாயைப் பொத்திக் கொண்டு மறுகையால் அவள் ஜாக்கெட்டைக் கிழித்தான் ஆட்டோக்காரன். ரேகாவிற்கு இயல்பாகவே அமைந்திருந்த பருத்த மார்பகங்கள் பிராவுக்குள்ளிருந்து எட்டிப் பார்க்க ஆரம்பித்தன. ஆட்டோக்காரன் வெறியுடன் அந்த மார்பகங்களைத் தன் பற்களால் கடிக்க முயன்றான். அந்த நேரத்தில் எந்தப் பெண்தான் புலியாக மாட்டாள்? தன் இரு கால்களையும் முன்னால் இழுத்து- ஆட்டோக்காரனின் ஆண்மையிடத்தைக் குறி வைத்து ஓங்கி உதைத்தாள் ரேகா. அவ்வளவுதான்... ஆட்டோக்காரன் ஐயோ என்று அலறியவாறு வெளியில் வந்து விழுந்தான். அவனது பின்னந்தலை எதிர் சுவற்றில் வந்துபட்டது. சரேலென எழுந்த ரேகா- தன் ஆடையை அள்ளிச் சரி செய்த படி ஓட- சேலையின் ஒரு முனையை எட்டிப்பிடித்தான் ஆட்டோக்காரன். தன் பலமெல்லாம் திரட்டி சேலையை இழுத்தாள் ரேகா. ஆனால்- ஆட்டோக்காரன் வென்று கொண்டிருந்தான். ரேகாவின் உடலை விட்டு சேலை கொஞ்சம் கொஞ்சமாக உருவப்பட்டுக் கொண்டிருந்தது.

"ஐயோ... யாராவது காப்பாத்துங்களே!" என்று தன் சக்தியெல்லாம் ஒன்றாக்கி அலறினாள் ரேகா. அந்த முயற்சிக்குப் பலன் கிடைத்தது. அந்த ஒழுங்கையின் மறுமுனையால் போய்க்கொண்டிருந்த ரமேஷின் காதுகளில் அந்தச் சத்தம் விழுந்தது. அவன்- சத்தம் வந்த திக்கு நோக்கி ஓடோடி வந்தான். அங்கு- ஆட்டோக்காரன் ஒருவனின் பிடியில் ஒரு பெண் சிக்கித் தன் மானத்திற்குப் போராடுவதைக் கண்டான். உடனே மூர்க்கமானான். ஓடி வந்த வேகத்தில் ஆட்டோக்காரனின் முகத்தைக் குறி வைத்து பூட்ஸ் காலால் ஓங்கி உதைத்தான். அந்த ஒரே உதையில்- மூக்கு, முகம் கிழிந்து இரத்தம் பெருக ஆட்டோக்காரன் மயங்கினான். அவனைத் தூக்கி ஆட்டோவுக்குள் போட்டுக் கொண்டு- ரேகாவைத் தன் பக்கம் நெருக்கமாக வைத்துக் கொண்டு- ஆட்டோவை ஸ்டார்ட் செய்து நேரே பொலிஸ் ஸ்டேஷன் வந்தான் ரமேஷ். விஷயம் சொல்லி- ஆட்டோவையும் ஆட்டோ டிரைவரையும் ஒப்படைத்த பின்-

"நான் வர்ரேன்!" என்றான் ரேகாவிடம்.

"வந்து... உங்க பேர்...?" சற்று நேரம் யோசித்தவன் "கணேஷ்!" என்றான். பின்னர் "நீங்க எப்படி வீட்டுக்குப் போவீங்க?" என்று அவளிடம் கேட்டான்.


"நாங்க கொண்டு போய் விடுறோம் சார்!" என்றார் டியூட்டியில் இருந்த வயதான பொலிஸ் சார்ஜண்ட்.

"ஓகே ரொம்ப நல்லது. நான் வர்ரேன்!" என்றான் ரமேஷ்.

"ரொம்ப தேங்க்ஸ்...!" என்றாள் ரேகா.

"இட்ஸ் ஓகோ...!" என்று ஒரு சின்னப் புன்முறுவலை வெளியே விட்டவன்- போய்விட்டான்.

**ஆ**று வருடங்களுக்கு முன்னால் நடந்த அந்தச் சம்பவத்தை இரை மீட்டு- இப்போது அதிர்ந்து போயிருந்தாள் ரேகா. அன்று தன்னைக் காப்பாற்றியவன் இன்று தன் முன்னிலையில்! ஆனால் கணேஷ் என்ற



பெயர் ரமேஷ் ஆனது எப்படி...?

ரமேஷும் ரேகாவை ஆழ்ந்து பார்த்தான். அவனுக்கும் அந்தச் சம்பவம் ஞாபகம் வந்தது.

"நீங்க... கணேஷ்..." என்றாள் ரேகா.

"அது அப்போதுள்ள பெயர். இப்போ, ரமேஷ்...!" என்றான்.

"எப்படி...?" இன்னமும் வியப்பு மாறாமல் கேட்டாள்.

"ஏனோ தெரியலே, என்னோட உண்மையான பெயரைச் சொல்ல வேண்டாமுன்னு அப்போ தோனிச்சு. அதான் கணேஷ்னு சொன்னேன்... ஆமா; நீங்க எங்க இங்க வந்தீங்க?"

ஷாம் ஓடி வந்தான்.

"அப்படீன்னா, இவங்களை உனக்கு ஏற்கனவே தெரியுமா?"

"தெரியுமாவா? ஒரு ஆட்டாக்காரன் கிட்டேர்ந்து ஒரு கிளி மாதிரி பொண்ணைக் காப்பாத்தினேன்னு உங்கிட்ட சொல்லியிருக்கேன்ல்லே? அந்தக் கிளிதான் இவங்க; சாதாரண கிளி இல்லே... பஞ்சவர்ணக் கிளி!"

ஷாம் பயந்து போனான்.

"டேய் ரமேஷ்... இப்போ இவங்க யாரு தெரியுமா? ரேகா இன்வெஸ்டிகேஷன்ஸ் கம்பனியோட சேர்மன்... தனியார் துப்பறியும் துறையில இவங்கதான் கொடி கட்டிப் பறக்கிறாங்க! புலிக்காட்டு சம்பவம் பத்தி விசாரிக்கிறதுக்கு வந்திருக்கிறாங்க...!"

"ஓ...ஐ...ஸீ...!" என்றவன்,

"கிளாட் டு மீட் யூ மெடம்!" என்று கூறிக் கை நீட்டினான். உட்கார்ந்திருந்த ரேகா எழுந்து, தன் கையை நீட்டினாள். பின்னர்-

"ஸோ... இப்ப என்ன செய்யிறதாக உத்தேசம்?" என்று கேட்டான் ரமேஷ். ஷாம் சொன்னான்.

"நாளைக்கே இவங்க குறூப்போட நாங்க...!" என்றவன், அந்த விடயத்தை ரமேஷிடம் கூற வேண்டாமென்று ரேகா சொன்னது ஞாபகம் வர- அவளது முகத்தைப் பார்த்தான்.

*(தொடரும்...)*

Registered as a News Paper in Sri Lanka.


































இப்பத்திரிகை 3A, தர்மராஜ மாவத்தை, கொழும்பு 03 - மில்லேனியம் அட்வர்டைசிங் என்ட் பிரின்டர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.